சித்திரை - ஆனி 2024

நன்கொடை 30

# கண்ணாமூச்சி

மண்சார் இலக்கிய இதழ்

தனிச்சுற்று

ஆடல் 3 பாடல் 10




VCRG IN
HOTEL
CHURCH PARK
feel the ocean
FACILITIES
Free wifi
Ample Car parking
24 Hrs Hot Water
24 Hrs Power Backup
Cooking Facility
Food Room Service Available
BOOK NOW
94895 63300
our booking partner:
Booking.com
MakeMytrip
agoda
goibibo

# சூடாகவும் சுவையாகவும்

ஒரு தன்னிலை விளக்கத்துடன் இந்தத் தலையங்கத்தை துவங்க வேண்டியதாகி விட்டது. கண்ணாமூச்சி தொடங்கியபொழுது வார இதழா, மாத இதழா, காலாண்டு இதழா என்றெல்லாம் காலவரம்பு வரையறுக்கவில்லை. தொடங்குவோம் தொடர்வோம் என்பதைத் தவிர எந்தத் திட்டமும் இல்லை.

தொடர்ந்து ஆலோசனையையும், படைப்பும் கொடுத்து நம்மை ஊக்கப்படுத்தும் ஐயா தஞ்சாவூர்க் கவிராயர் போன்றவர்கள் ஒரு காலவரம்பு வைத்துக்கொள்ளுங்கள். அதுதான் சரியாக இருக்கும் என்றார்கள். நாங்கள் தஞ்சையில் இருக்கையில் தஞ்சை பிரகாஷ் அவர்களோடு இணைந்து ஓர் இதழ் நடத்தினோம். பணமும், படைப்பும் இருக்கும்போது அதுவரும். அவ்வாறு இல்லாதபோது இதழ் தாமதமாகும். அப்போது அந்த இதழுக்கு நாங்கள் வைத்த பெயர் 'இஷ்டம் போல் வரும் இலக்கிய இதழ்' என்று சொல்லிச் சிரித்தார்.

அவ்வாறெல்லாம் இல்லாமல் காலாண்டு இதழ் என்ற காலவரம்பு வைத்துக்கொள்ளுங்கள் என்று சொன்ன அவரது அன்பு, இப்பொழுது பத்தாவது இதழாக 'கண்ணாமூச்சி' உங்கள் கைகளில் தவழ்கிறது. எங்கள் ஆட்டமும் மூன்றாம் ஆண்டை நெருங்குகிறது.

தென்றல் இதழ் சிலகாலம் நிறுத்தப்பட்டு மீண்டும் தொடர திட்டமிட்ட கவியரசு கண்ணதாசன் தன் உதவியாளரை அழைத்து எல்லோருக்கும் தகவல் சொல்லுங்கள் என்றாராம். நாங்கள் சென்று ஒவ்வொருவரிடமும் சொல்வதைவிட நீங்களே ஒரு பத்துவரி எழுதிக்கொடுங்கள் என்று கேட்க, பத்து வரி அல்ல இரண்டே வரி எழுதித் தந்திருக்கிறார். 'நின்று வரும் தென்றல் என்றும் வரும்' என்று. கண்ணாமூச்சியும் நின்று வரவில்லை. தாமதமாய் வருகிறது. தாமதத்திற்குக் காரணம் நிறைவான படைப்பு பங்களிப்புகள் எங்களுக்கு வந்து சேரவில்லை என்ற உண்மையையும் இங்கு சொல்லித்தான் ஆகவேண்டும். ஆனாலும் கண்ணாமூச்சி பத்தாவது இதழ் அதே உள்ளடக்கத்தோடு சூடாகவும், நிறைய சுவையாகவும் உங்கள் கைகளில்...

பாமணியாற்றுப் படுகையிலிருந்து,
கோ.அருணகிரி.

**கண்ணாமூச்சி**
மண்சார் இலக்கிய இதழ்
தனிச்சுற்று
திருவள்ளுவர் ஆண்டு 2055
சித்திரை - ஆனி 2024

நிறுவனர்
ப. பரிதிபாண்டியன்

ஆலோசகர்
அம்ரா பாண்டியன்

ஆசிரியர்
கோ.அருணகிரி

ஆசிரியர் குழு
கலைபாரதி
த.ரெ.தமிழ்மணி
சா.தமிழ்ச்செல்வன்
ஞா.ஜெயக்குமார்
சா.சிவகுமார்
பாலகுமரன்பரிதி
தமிழாதன்
க.சந்தானலட்சுமி

அட்டைப்பட உதவி
கிஷ்கிந்தா பாலாஜி

இதழ் வடிவமைப்பு
விடா பப்ளிகேஷன்ஸ்

தொடர்பு முகவரி
சன்மேன் டெய்லர்ஸ்
9 அரிசிக் கடைத் தெரு,
மன்னார்குடி,
திருவாரூர் மாவட்டம்-614001
செல்பேசி: 9976052585, 9655480092

படைப்புகளை அனுப்ப
வாட்ஸ் அப் எண் 9659335462
மின்னஞ்சல்
kannamoochi.mannai@gmail.com

கண்ணாமூச்சியில் வெளிவரும் படைப்புகளுக்குப் படைப்பாளர்களே பொறுப்பாவர்.

# உள்ளே...

கட்டுரை
**கதா 'பாத்திரங்கள்'!**
- தஞ்சாவூர்க் கவிராயர் | 8

ஆய்தல்
**விதைச் சொற்களால் கவிச்சித்திரம்**
- இரா.காமராசு | 18

கட்டுரை
**ஓசைகள் அன்றும், இன்றும்**
- சு.இராமசுப்பிரமணியன் | 23

சிறுகதை
**ஆவர்த்தனம்**
- மீனாசுந்தர் | 30

கட்டுரை
**ஆத்தா ஏறுனா பஸ்ஸு..**
**எறங்குனா.. டிஸ்ஸு..!**
- இரா.மோகன்ராஜன் | 40

கட்டுரை
**கிழங்கட்டைகள்**
- சூர்யகலா சரவணன் | 47

போகிறபோக்கில்
**வெயில்**
- சின்னப்பயல் | 50

சந்தா விவரம்:
**தனி இதழ். 30**
**ஆண்டு சந்தா 150**
அஞ்சல் செலவு உட்பட
**மூன்றாண்டு சந்தா. 450**
அஞ்சல் செலவு உட்பட
சந்தா, நன்கொடை வளர்ச்சி நிதி தொடர்புக்கு
**கூகுள் பே 9659335462**

# நண்டு

## கலைபாரதி



சில பல கவிதைகள், சில பல வருடங்கள் கடந்தும் மனசுக்குள் குடைப் பிடிக்கும். குடைக்குள் விழும் சாரல் மழையாய் மனதை இதமாக்கும், மழைவிட்டும் விடாத தூவானமாய் அதன் தூறல் மனசுக்குள் தெறித்து விழுந்துகொண்டே இருக்கும். அப்படி ஒரு கவிதையைத்தான் நண்பன் கோவிந்தராசு ஒரு பத்தாண்டுகளுக்கு முன்பு அலைபேசிவழி சொன்னான். அது இது.

**''உன்னுடைய பெயரையும்**
**என்னுடைய பெயரையும்**
**கடற்கரை மணலில்**
**எழுதி வைத்தேன்...**
**அலை வந்து**
**அடித்துச் செல்லவில்லை**
**படித்துச் சென்றது!''**

எழுதியவர் யாரென்று நினைவில் இல்லை. ஆனால், கவிதை மனசுக்குள் நிலைத்து நிற்கிறது. இக்கவிதையில் கடற்கரை மணலில் தலைவன் பெயரும், தலைவி பெயரும் எழுதி இருக்கின்றது. ஆனால், ஈழத்துக் கவிஞர் மஹாகவியின் கவிதையில் கடற்கரை மணலில் நண்டு படம் வரைந்து வைத்திருக்கின்றது என்கிறார்.

**''சிறுநண்டு மணல்மீது**
**படமொன்று கீறும்**
**சிலவேளை இதைவந்து**
**கடல்கொண்டு போகும்...''**

என்கிறார். நண்டு யாருடைய படத்தை வரைந்து வைத்திருக்கும் என்ற அவதானிப்பை படிப்பவரே உணர்ந்து கொள்ளட்டும். ஆனாலும் அது தன் இணையரின் படத்தை வரைந்து வைத்திருக்கலாம் என்ற எண்ணத்தை கணிமேதாவியின் பாடலொன்று நமக்கு உணர்த்துவதாகக் கருதலாம்.

**''தன்துணையோடு ஆடும் அலவனையும்**
**தான்நோக்கா**
**இன்துணையோடு ஆட இயையுமோ?**
**இன்துணையோடு**
**ஆடினாய் நீ ஆயன்? அந்நோய்க்கு**
**என்நொந்து என்று**
**போயினான் சென்றான் புரிந்து''**

**திணைமாலை நூற்றைம்பது-40**

என்ற பாடலில், கடற்கரை மணலில் தன் துணையோடு காதல் செய்யும் அலவனை, அதாவது ஆண் நண்டைப் பார்த்து பொறாமைப்படுகிறான் கணிமேதாவி காட்டும் தலைவன். என்னுடைய தலைவியை நான் பிரிந்திருக்கும் வலி உனக்கெங்கே தெரியப்போகிறது. நீயோ, உன் இணையோடு இன்பமாக அல்லவா விளையாடிக் கொண்டு இருக்கின்றாய் என்கிறான். இங்கு உயர்திணை, அஃறிணைக் காதலைப் பார்த்து – நண்டின் காதலைப் பார்த்துப் பொறாமைப்படுகிறது.

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனும் கடற்கரையைப் பார்க்கிறார். கடற்கரை –படகு–நண்டு காட்சி கவிஞருக்குள் கவிதையாய் விரிகிறது.

**‘‘தமிழ் ஈழத்தின் அழகு**
**தனி அழகு - எங்கள்**
**தாயகத்தின் பெருமை**
**அறியும் உலகு**

**கடல் சூழ்ந்த யாழ்ப்பாணம்**
**படகுபோல் இருக்கும்!**
**கரைமணலில் நண்டு**
**ஏதேதோ கிறுக்கும்!’’**

கவிஞருக்கு கரையொதுங்கி நிற்கும் படகு,யாழ்ப்பாண நகர் போல இருக்கின்றது. அந்தக் கடற்கரை நிலவொளியில் நண்டுகள் ஏதேதோ கிறுக்குகின்றது. அது எதை கிறுக்கி இருக்கும்? யாழ்ப்பாண நகரில் வாழ்ந்த கதையையா? அல்லது யாழ்ப்பாணத்தையே இழந்த கதையையா?

கடற்கரை நிலவு வெளிச்சத்தில் நண்டுகள் ஓடியாடி விளையாடும். அதுவும் எக்கர் அடித்த அடப்பங்கொடிகள் பின்னிக் கிடக்கின்ற மணல்மேட்டில் நண்டுகள் போவதும் வருவதுமாக இருக்கின்றது. கலிங்கத்துப்பரணி கதவு திறப்பதும் மூடுவதுமாக இருப்பதைப் போன்று – நண்டுகளும் போவதும் வருவதுமாய் இருக்கின்றது போலும்.

**‘‘அலவன் வழங்கும் அடும்பிவர் எக்கர்**
**நிலவு நெடுங்கானல் நீடார் துறந்தார்...’’**
**கைந்நிலை-53**

பாடல் வரிகளில் காணலாம்.

எப்போதுமே காதலை சொல்வதாக இருந்தாலும், திருமணநாள் குறித்து முடிவெடுப்பதாக இருந்தாலும் ஆண்கள் தான் முடிவு செய்வார்கள். ஆனால், பாரதிதாசனின் குடும்ப விளக்கு தலைவியோ இதற்கு நேர்மாறாக இருக்கின்றாள்.

கடற்கரையில் காதலர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது தெரிந்தவர் எவரேனும் வந்தால் பெண்கள்தான் முகம் மறைப்பார்கள்; இடம் பெயர்வார்கள்; குடும்பவிளக்கில் பிறர்வர தலைவன் ஓடுகிறான். அவன் எவ்வாறு ஓடுகிறான் என்றால் நண்டுபோல் ஓடுகின்றானாம்.

**‘‘கருமணல் கடலோரத்தில்**
**பிறர்வரக் கண்ட நண்டு**
**விரைந்தோடுவது போல**
**ஓட வேண்டியதில்லை...**
**சும்மா இரும்;**

**- குடும்ப விளக்கு**

நளவெண்பாவிலும் நண்டு ஓடி ஒளிவதைப் பார்க்கலாம். அது நளனைப் பார்த்து. நளன் கடற்கரையில் நடந்து வருகிறான். ஆளரவம் கேட்ட அலவன் ஓடி ஒளிகிறது. அது அதன் இயல்பு. நளனோ, காதலியைக் கானகத்தில் கைவிட்ட பாதகனைப் பார்க்கப் பிடிக்காமல் ஓடி ஒளிகின்றாயோ என்கிறான்.

**‘‘காதலியைக் காரிருளில் கானகத்தே**
**கைவிட்ட**
**பாதகனைப் பார்க்கப் படாதென்றோ**
**- நாதம்**
**அளிக்கின்ற ஆழிவாய் ஆங்கலவ! ஓடி**
**ஒளிக்கின்ற தென்னோ? உரை’’**
**- நளவெண்பா**

நண்டுகள் தனக்குள் விளையாடுவது உண்டு. சங்ககால மகளிரொடு சேர்ந்து விளையாடுவதும் உண்டு. அவ்வாறு சங்ககால மகளிர் ஆமை, நண்டு போன்றவற்றைப் பிடித்து ஆய்ஊய் என்று கெக்கொலிக் கொட்டி ஒலியெழுப்பி ஆரவாரமாய் விளையாடுவதை ஓரையாடுதல் என்கின்றனர்.

**‘‘அடும்பினாய்மலர் விரைஇ நெய்தல்**
**நெடுந்தொடை வேய்ந்த நீர்வார் கூந்தல்**

ஓரைமகளிர் ரஞ்சீயீர் ஞெண்டு
கடலிற் பரிக்குந் துறைவனொ
டொருநாள்
நக்குவிளை யாடலுங் கடிந்தன்
றைதே கம்ம மெய்தோய் நட்பே
- குறுந்தொகை 401

என்ற அம்மூவனார் பாடலில் காணலாம். மேலும் புனல் படிந்து கடலாடி அலைகள் கலக்கிக் பாவையெரோடு பல்பொறி மருண்டு பகல் விளையாடும் மகளிர் அலவன் பிடிப்பதை,

''தீதுநீங்க கடல்ஆடியும்
மாசுபோக புனல்படிந்தும்
அலவன் ஆட்டியும் உரவுதிரை
உழக்கியும்
பாவைசூழ்ந்தும் பல்பொறி மருண்டும்
அகலாக் காதலொடு பகல்விளையாடி
பெறற்கு அருந்தொல் சீர்த்துறக்கம்
ஏய்க்கும்
பொய்யா மரபின் பூமலி பெருந்துறை
- பட்டினப்பாலை 100-105

என்கிறார் கடியலூர் உருத்திரங் கண்ணன்.

நற்றிணைக் காட்சி ஒன்று. நாவல் மரக் கிளையிலிருந்து நாவற்கனிகள் கடற்கரையில் விழுந்து கிடக்கின்றது. விழுந்து கிடக்கின்ற கனிகளைத் தம்மினம் எனக் கருதிய வண்டுகள் மொய்த்துக் கிடக்கின்றது. மொய்த்துக் கிடக்கும் வண்டுகளை நாவற்கனி என நினைத்த நண்டு வண்டைக் கடிக்க, அப்பொழுது எழுந்த ஆரவாரத்தில நாரை நண்டைத் துரத்த வண்டும் நண்டும் ஓடி விடுகிறது. நாவற்கனி–வண்டு–நண்டு–நாரை என எல்லாவற்றுக்குள்ளும் ஒரு மயக்கம் காணப்படுகின்றது.

''பொங்குதிரை பொருத வார்மணல்
அடைகரைப்
புனகால் நாவற் பொதிப்புற இருங்கனி
கிளைசெத்து மொய்த்த தும்பி
பழம்செத்துப்
பல்கால் அலவன் கொண்டகோட்கு
அசாந்து
கொள்ளா நரம்பின் இமிரும் பூசல்
இரைதேர் நாரை எய்தி விடுக்கும்
துறைகெழு மாந்தை...''
- நற்றிணை:35

சேரநாட்டில் உள்ள மாந்தை நகரக் கடற்கரையில்தான் இத்தகைய சிற்றுயிர்கள் தமக்குள் மயங்கும் அழகிய காட்சி நடைபெற்றுள்ளது. இத்தகைய மயக்கத்தை,

''தேனுகர் வண்டு மதுதனை உண்டு
மயங்கியே கிடந்ததைக் கண்டு
தானதைச் சம்புவின் கனியென்று
தடங்கையில் எடுத்து முன் பார்த்தாள்
வானூறு மதியம் வந்தது என்றெண்ணி
மலர்க்கரம் குவியும் என்று அஞ்சிப்
போனது வண்டோ பறந்ததோ
பழம்தான்
புதுமையோ இதுஎனப் புகன்றோள்''
- விவேகசிந்தாமணி

தேனுண்ட மயக்கத்தில் மயங்கிக் கிடக்கின்றது வண்டு. அதனை நாவற்கனி என நினைத்து தன் கைகளால் எடுத்து பார்க்கிறாள் பேரழகி ஒருத்தி. மயங்கிய வண்டு தெளிந்து, கண் திறந்து அவள் முகத்தைப் பார்க்கிறது. பெண்ணின் முகமோ நிலவு. குவிந்த கைகளோ தாமரை. ஆகா... நிலவு வர தாமரை மூடிக்கொள்ளுமே! நாம் அவ்வளவுதான் என்று திகைத்துப் பறக்க ஆரம்பிக்கிறது வண்டு. அய்யய்யோ... நாவற்பழம் பறக்கிறதே என்று மயங்குகிறாள் அந்தப் பேரழகி.

நற்றிணையிலும், விவேக சிந்தாமணியிலும் நண்டின் மயக்கம், வண்டின் மயக்கத்தைத் தொடர்ந்து பெண்ணின் மயக்கத்தையும் பார்த்தோம். அதே மயக்கம் இந்நூற்றாண்டுக் கவிஞர் வாலியிடத்தும் தொடர்கிறது.

''கடலோரம் வாங்கிய காத்து
குளிராக இருந்தது நேத்து
கதகதப்பா மாறிடுமோ
காதலித்தால் ஆறிடுமோ...!''
என்ற வரிகளைத் தொடர்ந்து,
''சிறுமணல் வீட்டில் குடியேறும்
நண்டானது
இவள் கண்பார்த்து மீன்என்று
திண்டாடுது''

என்கிறார். திண்டாட்டம் மீனுக்கு மட்டுமா? நமக்கும்தான்!

– நகரும்

கட்டுரை

# கதா 'பாத்திரங்கள்'!

## தஞ்சாவூர்க்கவிராயர்



கதாபாத்திரங்கள் என்றால் கதையில் வருகிற உயிரோடு நடமாடும் கதா பாத்திரங்கள் கேரக்டர்கள் பற்றி சொல்ல வரவில்லை. கதை கருவில் வருகிற நிஜமான அண்டான் குண்டான், தட்டு, தம்ளர்இவற்றைத்தான் கதா பாத்திரங்கள் என்று அழைக்கிறேன். இவற்றுக்குப் பின்னால் இருக்கிற கதைகள் எத்தனையோ. உங்கள் வீட்டிலும் இப்படிப்பட்ட பாத்திரங்களும் அவற்றுக்குப் பின்னால் ஒரு கதையும் இருக்கும். யோசித்துப் பாருங்கள். கட்டாயம் இருக்கும். எங்கள் வீட்டிலும் இப்படிப் பாத்திரங்களுக்குப் பின்னால் சில் சுவாரஸ்யமான கதைகள் இருக்கின்றன. நாம் பாத்திரங்களோடும் பாத்திரங்கள் நம்மோடும் புழங்குகின்றன. அந்தப் பாத்திரங்களுக்கு வாயிருந்தால் அவை மனிதர்களைப் பற்றி கதை சொல்லும். அவற்றின் சார்பாக இப்போது நான் சொல்லும் கதைகள் அப்படிப்பட்டவைதான். இப்போது பாத்திரத்திற்கு வருகிறேன்.

**வெண்கலத்தட்டு**

எங்கள் வீட்டில் பல வருடங்களுக்கு முன்னால் ஒரு வெண்கலத் தட்டு இருந்தது. இந்த வெண்கலத் தட்டைப் பற்றி அப்பா சொல்வதைக் கேட்கவேண்டும். அவருக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து அந்த வெண்கலத் தட்டில் சாப்பிடுவது வழக்கம் என்று சொல்லுவார். அந்தத் தட்டை அவரது தாயார் விளக்கி வைக்கிறபோது பளபளவென்று ஜொலிக்கும். மற்ற பாத்திரங்களுக்கு மத்தியில் விளக்கி வைக்கப்பட்ட இந்தத் தட்டு ஏதோ சுயமாகவே சுடர் விடுகிற மாதிரி பளீரென்று மின்னுமாம். மஞ்சளும் செம்பழுப்பும் கலந்த அந்தத் தட்டில் வெள்ளை வெளேரென்று அவர் தாயார் சாதத்தை கரண்டியால் எடுத்து வைக்கிறபோது அதில் எழுகிற ஆவியில் தட்டின் பிம்பம் தெரியுமாம். சாதத்தில் சாம்பாரை ஊற்றி அப்பளமும் வைத்து பிசைந்து ஊட்டிவிடுவாராம். அம்மா அதாவது என் பாட்டி இறக்கும் தருவாயில் அப்பா கையில் கொடுப்பதற்கு அந்தத் தட்டு மட்டுமே இருந்தது. அப்பாவின் கையில் தட்டைக் கொடுத்து என் ஞாபகார்த்தமா வைத்துக்கொள் என்றாராம். சிலசமயம் பளபளன்னு துலக்கிய அந்தத் தட்டில் அம்மாவின் முகம் இவரைப் பார்த்து சிரிக்குமாம். நம்புவது கஷ்டம். ஆனால் அப்பா சொல்வதை நம்புவதுதான் பிள்ளையின் லட்சணம். அப்பா வெண்கலத்தட்டு கதையைச்

சொல்லிக் கொண்டிருந்தார். அப்போது ஒரு விபரீதத் திருப்பம் நேர்ந்தது.

‘பசங்களா இப்போ அந்தத் தட்டு எங்கேன்னு கேளுங்கடா’ என்று பின்னாலிருந்து அசரீரி கேட்டது. அசரீரிதான் என் அம்மா.

‘அதானே? அந்தத் தட்டு எங்கே போச்சு?’ என்று நாங்கள் கோரஸாக கேட்போம்.

அப்பா ஏதோ தப்பு செய்து பிடிபட்ட பள்ளி மாணவன்போல் தலையைக் குனிந்து கொள்வார். அவரே ஓர் ஆசிரியர். ஆயினும் தவறுசெய்த மாணவனின் முகபாவத்தோடு அவரைப் பார்க்கப் பாவமாக இருக்கும்.

வெண்கலத் தட்டில் இப்போது ஏதோ சஸ்பென்ஸ் பரிமாறப்பட்டுவிட்டது. என்னவாக இருக்கும்?

‘‘அப்பா அந்தத் தட்டு திருட்டு போயிடுச்சுதானே ?’’ என்று அண்ணா அப்பாவின் உதவிக்கு வந்தான்.

“திருட்டுப் போனாலும் பரவாயில்லை. இவருக்கே இவருக்கென்று இவரோட அம்மா கொடுத்த ஒரே சொத்துடா அது. அதை கண்முன்னால் அண்ணனின் சம்சாரம் எடுத்து பைக்குள் வச்சுகிட்டு போயிட்டாங்க...அதைப் பார்த்து மௌனம் சாதிச்சிருப்பார் உங்க அப்பா... இவர்தான் காந்தி பக்தர் ஆச்சே!”

வெண்கலத்தட்டு விஷயத்தில் அப்பாவோடு சேர்ந்து காந்திக்கும் திட்டு விழுந்தது.

“ஒரு பொருளைப் பார்த்து அதுமேல யாரு ஆசைப்பட்டாலும் கொடுத்துடணும் குழந்தைகளா... என்றார் அப்பா’’.

‘‘உங்க மேல ஆசைப்பட்டு அம்மா கொடுத்தது அந்த ஒரு வெண்கலத் தட்டுதானே? மத்தது எல்லாம் சட்டியும் பானையும்தானே?’’

“எப்பவோ நடந்த கதை இப்ப எதற்கு அதைப்பத்தி பேசறே?" என்றார் அப்பா ஈனஸ்வரத்தில்.

‘‘நடந்தது என்னன்னு குழந்தைகள் தெரிஞ்சுக்க வேணாமா?"

‘‘அதுக்கப்புறம் நடந்ததையும் பளீரென்று சொல்லிவிடுகிறேன்’’ என்றார்.

அசரீரி நகர்ந்துவிட்டது.

அப்பா தொண்டையைக் கனைத்துக் கொண்டு பேசலானார்.

“உங்க அம்மா அந்த வெண்கலத்தட்டை நான்தான் தூக்கிக் கொடுத்திட்டேன்னு நினைப்பு..எங்க சண்டை எப்பவுமே வெண்கலத் தட்டுல வந்து முடியும்’’.

நாங்கள் சிரிப்போம்.

வெண்கலத் தட்டு! வெண்கலத் தட்டு!

‘‘நான் வேணும்னா புதுசா ஒண்ணு வாங்கி தந்து விடுகிறேன்’’ என்று சொல்லிப் பார்த்தேன்.

‘‘அது அந்தக் காலத்துத்தட்டு. ஒரு கனம்னா அப்படி ஒரு கனம்! எங்கபோயி வாங்கறது?’’ என்பாள் உங்க அம்மா.

திடீரென்று ஒரு துக்கச் செய்தி வந்தது. உங்க பெரியம்மா செத்துப் போயிட்டதாக.

அங்கே பெரியம்மா தலைமாட்டில் அந்த வெண்கலத்தட்டில் தேங்காய் உடைத்து வெற்றிலை பாக்கு வைத்திருந்தது. இரண்டு நாள் அவங்க வீட்டில் தங்கினோம். அந்தத் தட்டு காய்ந்த வெற்றிலையோடு மூலையில் கிடந்தது.

நான் உங்க அம்மாவிடம் ‘அந்தத் தட்டை வேணும்னா எடுத்துக்கயேன் அண்ணனுக்கு புள்ளையா குட்டியா! யாரு கேக்கப்போறா?’ என்றேன்.

உங்க அம்மாவுக்கு வந்ததே கோபம்.

‘‘என் மனசுல என்ன ஈரமே இல்லேன்னு நினைச்சுட்டீங்களா? அந்தத் தட்டை இனிமே என்னால எப்படி தொடமுடியும்? வதினை (அண்ணன் சம்சாரம்) இல்லேன்னா அந்தத் தட்டு அனாதை ஆயிடுமா?’’ அம்மா விம்மி விம்மி அழுதாள். இதைச் சொல்லும்போது

இதைக்கேட்ட நாங்களும் அழுதோம்.

‘‘அம்மா நல்லவங்கப்பா’’ என்று அண்ணன் தேம்பினான்.

‘‘அதில் என்ன சந்தேகம்?’’ என்று கண்ணைத் துடைத்துக்கொண்டார் அப்பா.

எல்லோரும் சாப்பிட உட்கார்ந்தோம். அப்பாவும் உட்கார்ந்தார். அவர் முன்னால் தட்டு இருந்தது. சாதாரண எவர்சில்வர் தட்டுதான்.

எங்கள் கண்ணுக்கு அது தங்க நிறத்தில் பளபளவென்று ஜொலித்தது!.

## ஆனைக்கால் அண்டா

எங்கள் வீட்டில் இருந்த ஒரு அண்டாவின் பெயர் ஆனைக்கால் அண்டா.

ஒரு சாயலில் அது ஆனைக்கால் மாதிரிதான் இருக்கும். காலே இவ்வளவு பெரிது என்றால் யானை எவ்வளவு பெரிதாக இருக்கும்? இந்த அண்டாவுக்குப் பின்னால் ஒரு கதை இருக்கிறது. அந்தக் கதையில் நான் இருக்கிறேன். நாங்கள் தினமும் அந்த அண்டாவில்தான் குளிப்பது! அம்மா வெந்நீர் விளாவிவைத்து விடுவார்! ஒரு மழை பெய்கிற நாளில் முற்றத்தில் இருந்த அண்டா முழுவதும் நிரம்பிவிட்டது. அம்மா அண்டாவைப் பற்றிய ஒரு கதையால் நிரப்பினார். நான் தவழ்கிற வயதில் அந்த அண்டா தண்ணீருக்குள் எட்டிப்பார்த்து விழுந்து விட்டேனாம். அம்மா உள்ளே தனியாகக் குளித்துக்கொண்டிருந்ததால் தெரியவில்லை. மதிய சாப்பாட்டிற்கு பள்ளியிலிருந்து வந்த அப்பா அண்டாவை எட்டிப்பார்க்க நான் பேச்சு மூச்சில்லாமல் உள்ளே மிதந்து கொண்டு இருந்தேனாம். கொஞ்சம் லேட்டாகி இருந்தாலும் உயிருக்கு ஆபத்தாகிப் போயிருக்கும் என்றார் டாக்டர். அம்மாவுக்கு அன்று முதல் அந்த அண்டா பிடிக்காமல் போய்விட்டது. 15 தேதிக்கு மேல் வீட்டில் பணமுடை வந்துவிடும். அம்மா பணமுடையைச் சமாளிக்க சுற்று முற்றும் பார்த்ததில் எவ்வளவோ பாத்திரங்கள் இருந்தும் ஆனைக்கால் அண்டாதான் பட்டது.தெரு கோடியில் இருந்த வீட்டார் பாத்திரங்களை அடகு பிடிப்பவர்கள். சரியாக 15ம் தேதிக்கு மேல் அண்டா காணாமல் போய்விடும். அப்பாவுக்கு சம்பளம் வந்ததும் அண்டாவும் வந்துவிடும். எங்களுக்கு அதைப்பார்க்க சந்தோசமாக இருக்கும். அண்டா தன் அகன்ற வாயைத்திறந்து ஹா! ஹா! வந்துவிட்டேன் பார்த்தாயா என்று சிரிப்பதுபோல் இருக்கும். நான் பெரியவன் ஆனதும் அண்டா இல்லாத வெறுமை கண்ணில் பட்டது. அம்மா ஆனைக்கால் அண்டா எங்கே காணோம்? என்று கேட்டேன்.ரொம்பக் கஷ்டம்டா அப்போ அண்டாவை மீட்க முடியலே. மூழ்கிப் போச்சுடா! என்றார். என்னை அண்டா முழுகடித்தது சரி. அது எப்படி முழுகும்? எனக்குத் தெரிந்து தெருவில் வெள்ளம் வந்ததே இல்லை? எப்படி முழுகியிருக்கும் என்ற கேள்விக்கும் எனக்கு ரொம்ப நாள் விடை தெரியத்தான் இல்லை.

## மங்களாம்பிகா ஓட்டலில் திருடியது

தஞ்சாவூரில் தஞ்சை ப்ரகாஷின் சும்மா இலக்கியக் கும்பலில் நான், விச்சு, சுந்தர்ஜி, எம்.முத்து, சக்கரவர்த்தி, இருளாண்டி, பிரபஞ்சன், செல்லத்துரை, கவிஜீவன் ஆகியோர் நிரந்தர உறுப்பினர்கள். மாதத்தில் ஒரு கூட்டம் தஞ்சை பெசன்ட் அரங்கில் கட்டாயம் நடக்கும். புத்தக வெளியீடு போன்ற பெரிய இலக்கிய விழாக்களுக்கு மட்டும் யாராவது பெரிய மனிதர்கள் முன்வந்து நன்கொடை கொடுப்பார்கள். எல்லா கூட்டங்களுக்கும் தோன்றாத் துணையாக நின்று உதவியவர் மறைந்த முன்னாள் அமைச்சர் எஸ்.என். எம்.உபயதுல்லா. எங்களைப் பார்த்ததும் ஒரு புன்னகை பூப்பார். அதில் எத்தனையோ அர்த்தங்கள். அவர் ஊரில் இல்லாதபோது ஒருமுறை தஞ்சையிலிருந்த பிரமுகரை நாடிச் சென்றோம். அந்த ஆளிடமிருந்து பைசா பெயராது. சரியான கஞ்சப் பேர்வழி ஆச்சே என்றார் சக்கரவர்த்தி. பெயர்தான் சக்கரவர்த்தி. ஒரு காலத்தில் பழக்கடைகளின் சக்கரவர்த்தி. இப்போது அது பழங்கதை. ப்ரகாஷை அண்டி வாழ்ந்து வந்தார். சக்கரவர்த்தி சொன்னதை நாங்கள் பொருட்படுத்தவில்லை. ‘ப்ரகாஷைப் பார்த்ததும் கட்டாயம் ஒரு தொகை கிடைக்கும்’ என்று பேசிக் கொண்டோம். பிரமுகர் எங்களை தடபுடலாக வரவேற்றார். வந்த நோக்கம் தெரிந்ததும் அவர் முகம் காற்றுப்போன பலூனாய்ச் சுருங்கிவிட்டது.

ஆனாலும் தனது இயலாமையை நாசூக்காகச் சொல்லி அதை ஈடுகட்டும் விதமாக, ‘‘பாக்யம்! தம்பிகளுக்கு உன்கையால் காப்பி கொடு’’ என்றார்.

காப்பியை சாப்பிட்டோம். கூட வந்த நண்பர் ஒரு டபரா செட்டை திருப்பித் திருப்பி பார்த்துக் கொண்டிருந்தார். நானும் பார்த்தேன். அதில் தெரிந்த

எழுத்துக்களைப்பார்த்து திடுக்கிட்டேன். 'மங்களாம்பிகா ஓட்டலில் திருடியது' என்று பொறிக்கப்பட்டிருந்தது. பிரமுகர் அதைப்பார்த்ததும் மிரண்டுவிட்டார். "அதுவா தம்பி எங்க வீட்டு சொந்தக்கார சுட்டிப் பயலை ஓட்டலுக்கு கூட்டிப் போனோம் அவன் வேலைதான் இது'' என்றார். நாங்கள் வணக்கம் சொல்லி வெளியே வந்தோம். ப்ரகாஷ் சொன்னார். "அவர் சொன்னதை நம்பி விட்டீர்களா? அவனுக்கு இதே தான் வேலை. உள்ளே போனால் நிறைய திருட்டுப் பொருட்கள் கிடைக்கும். இவனிடம் நன்கொடை எப்படிக்கிடைக்கும்? வாங்க மங்களாம்பிகா ஓட்டல் போகலாம்!'' என்றார்.

கூடவந்த நண்பர் 'அந்த ஓட்டல் டபரா செட் இவர் வீட்டில் இருப்பதைச் சொல்வதற்கா?' என்று அப்பாவியாகக் கேட்டார்.

எல்லோரும் சிரித்தோம்.

## லோட்டாவில் நீந்திய அன்னப்பட்சிகள்

தஞ்சை ப்ரகாஷ் தன் ஜமாவுடன் பல வருஷங்களுக்கு முன் சாலியமங்கலம் நோக்கி படையெடுத்தார். சாலியமங்கலத்தில் ந. பிச்சமூர்த்தி தன் மகள் வீட்டில் வந்து தங்கியிருப்பதாக தகவல் கிடைத்து. பல வருஷங்களுக்கு முன்னரே ந.பிச்சமூர்த்தி நடை உடையாக இருக்கும்போதே தஞ்சாவூர் அய்யங்கடைத் தெருவில் ப்ரகாஷ் நடத்திய யுவர் மெஸ்சுக்கு வருவார். நான் பார்த்திருக்கிறேன். அச்சு அசல் தாகூர் மாதிரியே இருப்பார். ஆனால் பிச்சமூர்த்தியின் கொடுக்காப்புளிக் கண்கள் தாகூரிடம் கிடையாது. புருவத்தை இடுக்கிக் கொண்டு பாதி சிவந்த கண்களுடன் கத்திமாதிரி பார்வையைப் பாய்ச்சும் அவரைக் கண்டாலே மனசுக்குள் ஏதோ கிலிபிடித்த மாதிரி இருக்கும். கண்களில் சௌந்தர்யமும் அமானுஷ்யமும் கலந்த அப்படி ஒரு பார்வை. இதெல்லாம் பழங்காலத்துச் சமாச்சாரம். இப்போது எங்கெல்லாமோ போய்விட்டு தமது அந்திமக் காலத்தில் சாலியமங்கலத்துக்கு வந்திருப்பதாகக் கேள்வி. அவர் சென்னையில்தான் செத்துப்போனார். செத்துப்போகிறதுக்கு ஒரு வருஷம் முன்னால்தான் அவரைப் பார்த்தோம் கடைசியாக. பேச்சைவிட பேசாமல் பேசியதுதான் அதிகம். அவர் தெலுங்கில்தான் பேசுவார். ப்ரகாஷுக்கு தெலுங்கு தெரியும். வழக்கம்போல் பிச்சமூர்த்தியுடன் மௌன உரையாடல் தொடர்ந்தது. அவர் மனைவி காப்பி போட்டு கொண்டுவந்து கொடுத்தார். பிச்சமூர்த்திக்கு மட்டும் வெள்ளி டம்ளரில் காப்பி. காப்பி குடித்தானதும் அந்த டம்ளரையை திருப்பி திருப்பி பார்த்துக் கொண்டிருந்தார்பிச்சமூர்த்தி. அங்கு வந்த அவர் மனைவி, ''இப்படித்தான் எதைப்பார்த்தாலும் அதையே உத்து உத்து பார்க்கறார். தானே சிரிச்சுக்கறார். மாத்திரைய ஒழுங்காகப் போடறதில்லை. அது கொஞ்சம் சாந்தப்படுத்தும் இல்லியா?'' பிச்சமூர்த்தி நடுவில் சிறிதுகாலம் மனநலப் பிரச்சனையால் அவதிப்பட்டார். அதற்கு சிகிச்சை எடுத்ததில் சரியாகிவிட்டது. எனக்கு இன்னும் பைத்தியம் சரியாகலேன்னு நினைச்சுக்கிறாப் போலிருக்கு'' என்று சிரித்தார் ந. பிச்சமூர்த்தி. மனநோயாளிகள் குணமான பின்னரும் அவர்களின் சில செயல்பாடுகளில் ஏதாவது குற்றம் கண்டுபிடித்து அந்த நோயின் மிச்சங்கள் இருப்பதைப் பூதக்கண்ணாடியால் பார்த்து அவர்களை மறுபடியும் மனநோயாளிகளாகவே அவர்களை ஆக்கி விடுவார்கள். ந.பிச்சமூர்த்தி விஷயத்தில் அப்படித்தான் நடந்தது. ''லோட்டாவில் என்ன பார்த்தீர்கள்'' என்று கேட்டார் ப்ரகாஷ்.

''நீரே பாரும்... கீழே எவனோ ஒரு கலாரசிகன் அன்னப்பட்சிகள் வரிசையாகப் போவதுபோல சித்திரங்கள் செதுக்கி வைத்திருக்கிறான். இந்த லோட்டா எனது கல்யாணத்தில் கல்யாணச் சீராக வந்தது. கல்யாணமாகி இத்தனை வருஷம் கழித்து இன்னிக்குதான் கண்ணில் படுது. இப்படி பல அபூர்வ விஷயங்கள நாம பார்க்கறதே இல்லை. நம்ம கையிலதான் இருக்கும்.

இப்படி எத்தனை அன்னப்பட்சிகள் இன்னும் என் மனைவியிடம் இருக்கோ?'' என்றார் ந. பிச்சமூர்த்தி. நாங்கள் திகைத்துப் போய் உட்கார்ந்திருந்தோம்.

●

சிறுகதை

# தலைமுறை

## த.ரெ. தமிழ்மணி



ஏக்கத்தோடு நின்று பார்ப்பதை விட வேறென்ன செய்ய முடியும்?

பேச்சொலிகளால் நிரம்பி வழிந்த அந்த ஓட்டுவீடு ஆள் அரவமற்று மண்மேடாகக் கிடந்தது. பெரியப்பாவின் வீடு அது. வீட்டின் தென்புறத்தில் பெரிய பெரியப்பாவும் வடபுறத்தில் சின்ன பெரியப்பாவும் குடியிருந்தார்கள். இருவீட்டாரையும் பிரிப்பது முற்றம் மட்டுமே. வாசலின் இருபகுதியும் பெரிய திண்ணை, கதை பேசவும் ஆடுபுலி ஆட்டம் விளையாடவும் பகலில் படுத்துறங்கவும் தோதான இடம். அலைந்து திரிந்து உச்சூறு மணி நேரத்தில் வருபவர்களுக்கு வெயில் துவட்டி விடும் தாய்மடி அது.

வீட்டில் உள்ள மரத்தூண்கள், பிள்ளை விளையாட்டின் பெருங்கம்பங்கள். ஓடிப்புடிச்சியில் தொடங்கும் குதூகலம் இருட்டத் தொடங்கியவுடன் ஒளிஞ்சாம்புடிச்சியாக மாறும். அந்த மரத்தூண்கள், வாரி, ஓடு ஒன்று கூட மிச்சம் இல்லை. பெரும்பெரும் புற்று போல மண்தான் மிஞ்சி இருந்தது.

இதோ இந்தப் பக்கம்தான் வாசல்தரை. இங்குதான் இராப்பொழுதில் வரிசையாகப் பாய்போட்டுப் படுத்துறங்குவோம். காலையில் சாணி தெளித்துக் கூட்டியதரை காய்ந்து போய் சாயுங்காலக் கூட்டலுக்குப் பிறகுச் சலவைக்கல் போல வழவழப்பாக இருக்கும்.

மின்வாசனை வீசாத வீடு; எல்லாம் மண்ணெண்ணெய் விளக்குதான். எட்டு மணிக்கெல்லாம் சாப்பிட்டுவிட்டுப் படுத்து விடுவோம். வாசலின் எதிரே இருந்த வேப்பமரம் புழுக்கத்தை விரட்ட எந்நேரமும் குளிர்காற்றை அனுப்பிக்கொண்டே இருக்கும். வேப்பந்தழைகளில் இடம்பெயரும் பறக்கும் விண்மீன்களும் வானில் கண்சிமிட்டும் நகரா மின்மினிகளும் கண்களுக்கு விருந்து படைக்கும். எட்டுக்குடித் திருவிழா விற்காகச் சிலம்பாட்ட ஒத்திகையை முடித்துவிட்டு வரும் அண்ணன்களுக்காகக் காத்திருந்த பெரியம்மா ஆத்தா உள்ளிட்ட மூத்த பெண்டிர்கள் அவர்களுக்குப் பரிமாறிய பிறகு சாப்பிட்டுப் படுக்க வருவதற்கு 9 மணி ஆகிவிடும் அதுவரை எங்களின் இளைய அண்ணன்களின் கதைகள் சிரிப்பும் பேச்சுமாக ஓடிக்கொண்டிருக்கும்.

நொண்டிமுனி கதை பயமுறுத்தும்; குசுவுட்டாம் பூச்சி கதை சிரிப்பூட்டும். ஆத்தா வந்தவுடன் கதை மாறும், தலையை வருடிவிட்டுக் கொண்டே சொல்லும் கதை கடைசிப்பிள்ளை தூங்கும் வரை நீளும்.

நாங்கள் உண்டுறங்கி கதை கேட்டு களித்திருந்த வாசற்பகுதி கருவக்காடு மண்டி பாழடைந்து கிடந்தது.

வேப்பத்தாங்குடி.... எங்கள் விடுமுறைக்கால வேடந்தாங்கல்! விடுமுறை விடப் போவது வீட்டிற்கு தெரியுமோ இல்லையோ ஆத்தாவிற்குத் தெரிந்துவிடும். சுத்துமுறுக்கு வாங்கி முந்தானைக்குள் முடிந்து வைத்துக்கொண்டு எங்களை அழைக்க வந்துவிடும். வந்ததிலிருந்து புறப்படும்வரை 'எப்பத்தா ஊருக்கு?' என்ன நச்சரிப்போம்.

'செத்த சும்மா இருக்க மாட்டீங்களா? அப்பா கறிஎடுக்க போயிருக்காங்க வந்து சமச்சி சாப்பிட்ட பிறகுதான் ஆத்தா கிளம்பும். அதுவரைக்கும் வாய மூடிட்டு இருக்கணும்' என்ற அம்மாவின் அதட்டலில் அடங்கினாலும் எப்ப கிளம்பும்? என ஆத்தாவையே பார்த்துக் கொண்டிருப்போம். ஒருவடியாக 18ஐப் பிடித்து வேப்பத்தாங்குடியில் இறங்கி வயல் வரப்பு வழியாக நடப்போம். பயிற்றங்காய் இருபுறமும் மண்டிக் கிடக்கும் பறித்து மென்று கொண்டே ஓட்டமும் நடையுமாய் வீடு வந்து சேர்வோம். பெரியம்மாக்கள் ஓடி வந்து அணைத்துக் கொள்வார்கள். உறவுகள் சூழ்ந்து கொண்டு கொஞ்சும்.

"எங்கேம்மா ஒருத்தரையும் காணும்?"

"யாரையப்பா கேக்குற? செந்திலும் மணியும் மொளகா கொல்லையில ஏத்தத்துல தண்ணி எறக்கிறாங்க, வள்ளியும் அங்காடிக்கு போயிருக்கா. சிவகுமரன் மளிகைக் கடைக்குப் போயிருக்கான். எல்லாம் இப்ப வந்துருவாங்க"

அவர்கள் வரும்வரை எங்களுக்குப் பொறுக்கவில்லை. மிளகாய்க் கொல்லைக்குப் போனோம். எங்களைப் பார்த்தவுடன் செந்திலும் மணியும் ஓடிவந்தார்கள். அப்புறம் என்ன? விடுமுறை களைகட்டத் தொடங்கியது. நீண்டதொலைவு நடந்து உடையார்குளத்துக்குக் குளிக்கப் போனோம். ஒவ்வொரு முறையும் உடையார்குளம் எங்களுக்குப் புதிது. குளத்தருகே இருந்த சிவன்கோவிலில் விளக்கெரிந்து கொண்டிருந்தது. சிதிலமடைந்த பழங்கோயில் அது, பார்த்தாலே கும்பிடத் தோன்றும். சுற்றியும் வன்னிமரங்கள். குளத்தின் தென்புறத்தில் பெரிய குளியலறை. உட்புறப் படிக் கட்டுக்கள் குளத்தின் மேற்பகுதிக்குச் செல்லும். அங்கிருந்து நீரில் குதிக்கத் தோதாக மேடை அமைக்கப்பட்டிருக்கும். இது பண்ணையார் வீட்டுப்பெண்கள் குளிப்பதற்காகக் கட்டப்பட்டது என்று சொல்வார்கள். பார்ப்பதற்கோ மன்னர் காலக் கட்டடம் போல் இருக்கும். தொலைவில் பொது படித்துறையைக் கண்டவுடன் எங்களுக்கு எழுந்த ஆர்வம் தாளாமல் சட்டைகளைக் கழற்றி எறிந்து விட்டு ஓடிப் போய்த் தொப்பன்று குதித்தோம். தாமரை இலைகள் மீது அமர்ந்திருந்த தவளைகள் அஞ்சி தண்ணீருக்குள் தலைமறைவாகின. தாமரை இலைகள் மீது நடந்து இரைதேடிக் கொண்டிருந்த நீர்ப்பறவைகள் ஏதோ பெரிய விலங்குகள் வந்துவிட்டன என்று பயந்தவாறே விருட்டென்று பறந்தன. தூண்டிலில் அரளிப்பூவைக் கோத்து பச்சைத்தவளைகளைத் பிடித்துக் கொண்டிருந்தவர் வேறு இடம் நோக்கி நகர்ந்தார். ஒரே நேரத்தில் நான்கு பேர் குதியம்பு போட்டுத் தம்பட்டம் அடித்ததில் குளம் கும்பியாக மாறியது. காய்ந்த தாமரைப் பூக்களில் இருந்து விதை எடுத்தோம். தின்பதற்கு அது நிலக் கடலையைப் போல் சுவையாக இருக்கும் என்பதால் எடுப்பதற்குப் போட்டி அதிகம். அல்லிக்கிழங்குகளை அள்ளிக்கொண்டு கண்கள் சிவக்க வீடு திரும்பினோம். வாசலில் நின்றிருந்த முருகனண்ணன்,

"வாங்கடா தம்பிகளா.. எப்ப வந்தீங்க? வந்த உடனே உடையார்குளமா?" ஆசையாய் எங்கள் தோள்களில் கைகளைப் போட்டு அணைத்தவாறு கேட்டார்.

"சாய்ந்தரம்தான் வந்தோம். உடனே குளிக்க போயிட்டோம். ஒரு மாசமும் உடையார்குளம்தான்"

அவரின் தோள்பட்டைகள் வலுவாக இருந்தன. முன்னங்கைகளில் இரு பக்கமும் முயல்குட்டிகள் படுத்துறங்கின. அதில் ஒன்றில் தாயத்து கட்டப்பட்டிருந்தது. எங்களை இடுப்பில் கைகோர்த்து இராட்டினம் போல் சுற்றி விளையாட்டுக் காட்டினார். கைகோத்தபடி வீட்டிற்குள் அழைத்துப் போனார். திண்ணையில் நரைத்த முறுக்குமீசையோடு பெரிசுகள் உட்கார்ந்திருந்தனர். அவர்கள் அந்திக் கள் அருந்த வந்திருந்தனர்.

ஆத்தா அளந்து அளந்து சொம்பில் கொடுக்க உறிஞ்சிக் குடித்துவிட்டு, மட்டை ஊறுகாயைத் தொட்டு நாவில் வைத்து சப்புக் கொட்டினார்கள். மனநிறை வடைந்த உடன் மீசையில் ஒட்டி இருந்த நுரையைப் புறங்கையால் ஒதுக்கித் துடைத்தபடி வெளியேறினார்கள். வேலை முடித்துத் திரும்பி உடல்குளிரக் குளியலைப் போட்டுவிட்டு வந்தவர்கள் என்பதை அவர்களின் கைகால்களில் மினுமினுத்த தேங்காய் எண்ணெய் சொல்லியது.

அவர்கள் குடித்ததை வாஞ்சையுடன் பார்த்த என்னிடம்,

''தம்பி இப்ப வேணாம்டா தம்பி, நாளைக்கு போவோம்ல, ஒரு மரத்துக்கள்ளா இறக்கித் தாரேன்''

எனச் சொல்லும்போதே எச்சிலூறியது. பெரியப்பா இருவரும், மூத்தஅண்ணன் இருவரும் முறை வைத்து மரமேறுவார்கள். அதில் முருகண்ணன்தான் என்னை ஆசையாய்க் கள் இறக்கும் இடத்திற்கு அழைத்துப் போவார்.

சூடாகப் பச்சைப்பயற்றுக் கஞ்சி வந்தது. குடித்துவிட்டு எல்லோரும் ‘டப்பா’ விளையாடக் கிளம்பி விட்டோம். ‘டப்பா’ என்பது அந்த ஊர் ஒளிஞ்சாம்புடிச்சி. பிடிக்க வருகிறவன், கண்டுபிடிக்கப்பட்டவனின் பெயரைச் சொல்லி ‘திடும்’ என்பான். ஒளிந்திருப்பவனில் ஒருவன், பிடிப்பவன் அறியாவண்ணம் முதுகில் அடித்து ‘டப்பா’ என்று சொல்லிவிட்டால் மறுபடியும் அவனே கண்டுபிடிக்க வேண்டும். ஆட்டம் முதலில் இருந்து தொடங்கும்.

கள் குடிக்கப் போகும் நினைப்பே என்னை நேரத்தோடு எழுப்பி விட்டது. எழுந்து பார்த்தால் பக்கத்தில் யாரையும் காணோம். எல்லோரும் எனக்கு முன்பே எழுந்து போய்விட்டார்கள். சுறுசுறுப்பில் தேனீக்கள்! பாயைச் சுருட்டிக் கொண்டு போய் வைத்துவிட்டு, அடிகுழாயில் இருந்த சாம்பலை எடுத்து பல் தேய்த்து, வாய்க்கால் ஓரம் புதர் மறைவு தேடி வெளியே போய், வாய்க்காலில் கழுவி வந்து பார்த்தால்...

''என்ன தம்பி போகலாமா?''

மிதிவண்டியில் காலூன்றி எனக்காக நின்றார் பின்புறம் என் அண்ணன் உட்கார்ந்திருந்தான்.

''எழுப்பி இருக்கலாம் ல'' என்றவாறு முன் கம்பியில் அமர்ந்தேன்.

''அதனால் என்ன இன்னும் நேரம் இருக்கு''

அது துருப்பிடித்த மிதிவண்டி, எண்ணெய் தேய்த்து குளித்து, வைரம் பாய்ந்த கட்டை போல் இருந்தது. வயல் வரப்புகளில் இலகுவாய் எங்களைச் சுமந்து வஞ்சியூர் தென்னந்தோப்பை நோக்கிச் சென்றது. அதற்குள் அங்கே பலர் காத்திருந்தனர். அவர்களிடம் பேசியவாறு பாளருவா பெட்டியை இடுப்பில் கட்டினார். பாளருவா பெட்டி பாளையால் செய்து அவுனியால் கட்டப்பட்டது. சுரைக்குடுக்கையை எடுத்து இடுப்பு வாரின் கொக்கியில் மாட்டிக்கொண்டார். தலைக்கயிற்றைக் காலில் மாட்டிக்கொண்டே மரத்தைத் தொட்டு வணங்கி ஏறலானார் ஒரு கையை மேலும், மறு கையைக் கீழும் மாற்றிமாற்றி வைத்து அவர் ஏறுகையில் சரக் சரக் என்று சத்தம் கேட்டது.

மட்டையைப் பிடித்து வாகாய் அமர்ந்தபின் பாளையில் சுரந்திருந்த கள்ளைச் சுரக்குடுக்கையில் ஊற்றும்போது கீழே நிற்பவர்களைச் சுண்டி இழுத்தது. பாளையைச் சீவச் சீவ பூப்போல கொட்டியது. பாளக்கட்டையால் பாளையைத் தட்டியதுதான் தெரியும். மட்டையைப் பிடித்துத் தொங்கி இலாவகமாகத் தலைக்கயிற்றைக் காலில் மாட்டிச் சர்ரென்று கீழே இறங்கினார். சுரைக்குடுக்கையில் இருந்த கள்ளைக் குடத்தில் ஊற்றாமல் பறக்காவெட்டிகளுக்குப் பன்னாடையில் வடிகட்டியவாறே அளவுச்சொம்பில்

ஊற்றினார். குடித்தவர்கள், பக்கத்தில் சாக்கணைப் பாட்டியிடம் ஊறுகாய் வாங்கி நக்கிக் கொண்டு முகம் ஒளிர நகர்ந்தார்கள். தோப்பிலேயே கல்லடுப்பில் இட்லி சுட்டுக் கொண்டிருந்தார். ஒரு சட்டியில் வறுக்கப்பட்ட வயல் நண்டு, சுண்டல், மட்டை ஊறுகாய். கொஞ்சம் கொஞ்சமாய்க் கூட்டம் குறைந்ததும் கள்ளைப் பானையில் ஊற்றத் தொடங்கினார். கடைசியாக இறக்கிய கள்ளை எடுத்துக்கொண்டு,

"வாங்கடா தம்பிகளா" என்றார்.

சொம்பில் எனக்கும் அண்ணனுக்கும் ஊற்றிக் கொடுத்தார். ஒரு மடக்கு குடித்தவுடன் உள்நாக்கு தித்தித்தது. வெள்ளைத்தேன்; கூடவே சாக்கணை! இனம் புரியா இன்பம்; கபகபவென்று பசி எடுக்கும் நேரம்; பெரிய பெரிய தேக்கு இலையில் சூடான இட்லியும் பூண்டு துவையலும் வாங்கித் தந்தார். வீட்டுக்கு வந்து திண்ணையில் படுத்ததுதான். எழுவதற்குச் சாயுங்காலம் ஆகிவிட்டது. நல்லவேளை, மறுநாள் எட்டுக்குடி திருவிழாவிற்குச் செல்லும் அலமலப்பில் எங்களை யாரும் கண்டு கொள்ளவில்லை.

***

நான் ஆற்றாமையோடு பழைய வீடு இருந்த இடத்தில் நிற்பதை முதலில் பார்த்தவர் முருகண்ணன் தான்

"அடடே வாடா தம்பி!"

வேலங்குடியில் எல்லோரும் நல்லா இருக்காங்களா?"

வாஞ்சையோடு அதே அணைப்பு; அதே கட்டுடல். தலைதான் நரைத்திருந்தது.

''என்னாண்ணே வீடு இப்படி தரைமட்டமாக கிடக்கு?"

"அதுவா.. கள்ளுக்கடையைத் தடை பண்ணினதும் வீடு நொடிஞ்சிடுச்சு, புள்ளைங்க தலை எடுத்து, அவனவன் பெண்டு பிள்ளைகளோட தனிக்குடித்தனம் போயிட்டாங்க"

என்று சுற்றியும் இருந்த கூரை வீடுகளைக் காட்டினார். அதில் ஒரு வீடு மின்மினி பூக்கும் வேப்பமரத்தை விழுங்கி இருந்தது.

"இவ்வளவு காலம் இல்லாம திடீர்னு வந்திருக்க?"

"வரணும்னுதான் ரொம்ப நாளா ஆசை. படிப்பு வேலைன்னு காலம் போயிடுச்சி. சிவக்குமாரன் அண்ணனுக்குக் கட்டை விரலை எடுத்துட்டாங்களாமே? என்னால தாங்க முடியல. அதான் ஓடி வந்துட்டேன்" என்றபடி ஒவ்வொரு வீட்டிற்கும் வாங்கி வந்த தின்பண்டங்களைக் கொடுத்தேன். மூத்தவர்கள் சூழ்ந்து கொண்டு நலம் விசாரித்தனர். பிள்ளைகள் தொலைக்காட்சிகளிலும் கைப்பேசிகளிலும் மூழ்கிக் கிடந்தார்கள்.

அப்போது மரமேறிய நால்வர்களைத் தவிர மற்றஇளையோர்களின் உடலும்முகமும் ஒன்றும் மகிழ்வதற்கு உரியதாக இல்லை. வயல் வேலைக்கும் போவதில்லையாம் உழைப்பில் இருந்து வெளியேற்றப்பட்டு இருந்தார்கள் புறப்பட எத்தனித்த போது தன்வீட்டு எறவானத்தைப் பிடித்தபடி நடண்ணன் கூப்பிட்டார்; போனேன் அவர் எட்டுக்குடிக்கு நடந்தே அலகுக் காவடி தூக்கிச் சென்றவர். தலைசொறிந்தவாறு "ஒரு 200 ரூபாய் மட்டும் கொடுத்துட்டு போயேன்" என்றார். யாருக்கும் தெரியாமல் 500ஐத் திணித்துவிட்டு நகர்ந்தேன்

இப்படிப்பட்ட விடுமுறை நாட்களில் நாங்கள் வீட்டுக்குள் இருந்ததே இல்லை. உடையார்குளக் குளியல், ஏற்றம் இறைத்தல், பனங்காய் வெட்டுதல், பனவண்டி செய்தல், மாவூர் கொட்டகையில் படம் பார்த்தல், சிலம்பாட்ட ஒத்திகை, காவடியாடல், தூண்டில் போடல், ஒளிஞ்சாம்புடிச்சி ஓடிப்பிடிச்சு, கோக்காலி, களிமண்வண்டி விளையாட்டு இவைதாம் நான் பார்த்த வேப்பத்தாங்குடி. அந்த வேப்பத்தாங்குடி ஆத்தாவோடு செத்துப் போய்விட்டது போலும்.

சிறுவர்கள் விளையாடாத தெரு நெறிச்சோடிப் போய்க் கிடந்தது. ஒரு கூரை வீட்டில் இருந்து, விளம்பர இடைவெளியின்போது எட்டிப்பார்த்த சிறுவன் என்னையே உற்றுப் பார்த்தான். நான் ஓடிப்போய் அவனைத் தூக்கிக் கொண்டேன். "உடையார்குளத்துக்கு போவோமாடா தம்பி?" என்றேன்.

"அப்படின்னா...? அது எங்கே இருக்கு?" என்றான் என் முகத்தை உற்றுப் பார்த்து.

●

# அப்பாவின் சைக்கிள்

பாலகுமரன் பரிதி

அப்பா ஒரு சைக்கிள் வைத்திருந்தார். சிறுவயதில் நான் அப்பாவுடன் சைக்கிளில் பயணித்தது தான் அதிகம்.

நான் தொடக்கப்பள்ளி படிக்கும்போது என்னை சைக்கிளில் அழைத்துச் சென்று பள்ளியில் விட்டுவிட்டு அவர் பணிபுரியும் பள்ளிக்குச் செல்வார். மீண்டும் மாலை பள்ளி முடிந்து என் பள்ளிக்கு வந்து என்னை அழைத்துக்கொண்டு வீட்டுக்குச் செல்வார். வீட்டுக்குச் செல்லும்போது ஒரு நாளும் தின்பண்டம் வாங்காமல் சென்றதில்லை. கடலை மிட்டாய் தான் அதிகமாக வாங்கிக் கொடுப்பார்.

என்னையும் அக்காவையும் சைக்கிளில் அழைத்துச் செல்லும்போது அக்காவுக்கு பின் சீட்டு. எனக்கு முன் கம்பி. அதில் வெகு நேரம் அமர முடியாது அதனால் பாதியிலேயே நிறுத்தி சிறிது நேரம் இறக்கி விட்டு மீண்டும் ஏற்றி அழைத்துச் செல்வார்.

ஒரு தீபாவளிக்கு துணி எடுக்க மன்னார்குடி கடைத் தெருவுக்குச் செல்லத் திட்டமிட்டோம்.என்னையும் அக்காவையும் சைக்கிளில் அழைத்துக்கொண்டு அப்பா முன்னே செல்வார். அம்மா நடந்துவந்து கடைத்தெருவில் குறிப்பிட்ட இடத்திற்கு வரவேண்டும். ஆனால் நாங்கள் போய் வெகுநேரம் காத்திருக்கிறோம் அம்மா வரவில்லை. அப்பாவும் பல இடங்களில் தேடி விட்டு மீண்டும் என்னையும் அக்காவையும் வீட்டிற்கு அழைத்து வந்து விட்டார்.

அம்மா தொலைந்து போய் விட்டார் என்று நான் அழுதுகொண்டே இருந்தேன். எங்களைத் தேடி களைத்து அம்மா வீடு வந்து சேர்ந்தார். பிறகு எங்கள் மூவரையும் ஒரே சைக்கிளில் வைத்து கடைத்தெருவுக்கு அழைத்து சென்றார் அப்பா.

அக்கா வேறு பள்ளிக்குப் படிக்கச் சென்ற போது சைக்கிள் வாங்கிக் கொடுத்தார். அதனால் எனக்குப் புரமோசன் கிடைத்தது முன் கம்பியில் இருந்து பின் சீட்டுக்குச் சென்றேன். இருந்தாலும் அப்பாவுக்குப் பயமாக இருக்கும் அவர் இடுப்பப் புடிச்சுக்கடா என்பார் நானும் இறுக்கிப் பிடித்துக் கொள்வேன்.

அப்பா சொல்வார் காலை பத்திரமாக வச்சிக்க உள்ள மாட்டிக்கும் என்று. எனக்கு அப்பொழுது அது பற்றி தெரியாது எப்படி மாட்டிக் கொள்ளும் என்று. செய்து பார்த்து ஒருமுறை கால் மாட்டிக்கொண்டது. குடம் குடமா ரத்தம் பதறிப் போனார் அப்பா. காயம் ஆறுவதற்கு 15 நாட்களானது.

தொடக்கப் பள்ளி முடித்து நானும் ஆறாவது படிப்பதற்கு பின்லே மேல்நிலைப்பள்ளிக்கு மாறுதலானேன். அப்பா எனக்கு ஒரு சைக்கிள் வாங்கிக் கொடுத்தார். ஆனால் ஓட்ட விடவில்லை.

நாங்கள் குடியிருந்த ஆதிவிநாயகர் கோவில் தெருவில் என் பள்ளியில் படிக்கும் 9ம் வகுப்பு படிக்கும் மாணவனை அழைத்து என் சைக்கிளுக்கு டிரைவர் ஆக்கினார். அந்தப் பையன் தான் என்னை காலையில் சைக்கிளில் அழைத்துச் செல்வான். மாலை அழைத்து வந்து என்னையும் சைக்கிளையும் வீட்டில் விட்டு செல்வான். இப்படியே கழிந்தது. ஒரு வருடத்திற்கு பிறகு தான் நானே சைக்கிள் ஓட்ட பழகிக்கொண்டேன்.

முதன்முதலில் சைக்கிளிலிருந்து அப்பா டிவிஎஸ் 50 மோட்டார் சைக்கிளுக்கு மாறினார். அப்பாவுடன் பைக் பிரயாணங்கள் அலாதியான சுகமாக இருந்தது, சீரான வேகத்தில் செல்ல மாட்டார். புதிதாக ஓட்ட ஆரம்பித்ததால் மெதுவாகத்தான் செல்வார். சிறிது காலத்துக்குப் பிறகு மெதுவாகச் செல்லவே அவருக்குப் பிடிக்காமல் போனது.

ஒருமுறை அப்பா ஏதோ ஒரு வேலையாக

வெளியூர் சென்று ஒரு வாரம் கழித்து தான் வந்தார். அவர் ஊரில் இல்லாத போது நான் அவரது பைக்கை எடுத்துக்கொண்டு கிரிக்கெட் விளையாட ஊர் ஊராகச் சுற்றினேன். ஒருநாள் திடீரென வண்டி நின்று விட்டது. மெக்கானிக் ஷெட்டில் வண்டியைப் போட்டு விட்டு வீட்டுக்கு வந்து விட்டேன்.

அப்பா வந்து கேட்டார் நடந்ததைச் சொன்னேன்.

மெக்கானிக் சொல்லியிருக்கிறார் ‘‘ஆயில் போடாம வண்டி ஓட்டியதால் இன்ஜின் சீஸ் ஆயிட்டு’’ என 6000 ரூபாய் செலவானதாம்.

“ஏன்டா இப்படி பண்ணின?’’ என்று என்னிடம் ஒரு வார்த்தை கேட்கவில்லை அப்பா.

அப்பாவின் நண்பர் சுவிக்கின் சார் பெரிய வண்டி வாங்க சொல்லி அப்பாவை வற்புறுத்தினார். அவரே ஒரு மெக்கானிக்கிடம் அழைத்துச் சென்று ஒரு பழைய பஜாஜ் காலிபர் பைக்கை வாங்கி வந்தார்.

பைக் வாங்கி விட்டார். ஆனால் அதை ஓட்டுவதற்கு அப்பாவிற்குப் பயமாக இருந்தது. தினமும் மாலை வேளைகளில் வடசேரி ரோட்டில் பைக் ஓட்டி பழகிக் கொண்டிருந்தார்.

எக்ஸெல் ஓட்டி பழகிய அவருக்கு இந்த கிளட்ச் கியர் எதுவும் சரியாக பிடிபடவில்லை.

ஒருநாள் ஒரு திருப்பத்தில் வண்டியிலிருந்து சரிந்து விழுந்து விட்டார். அப்படியே எழுந்து வண்டியை தள்ளிக் கொண்டே சென்று வண்டி வாங்கிய மெக்கானிக்கிடமே திருப்பிக் கொடுத்து விட்டு வீட்டிற்கு நடந்தே வந்தார்.

“ஏன்’’ என்று கேட்டேன்.

‘‘அதெல்லாம் எனக்கு சரிப்பட்டு வராது’’ என்று ஒரே வார்த்தையில் முடித்துக்கொண்டார்.

இப்போது கூட நானும் அப்பாவும் சைக்கிளில் சென்று கொண்டு இருக்கிறோம் ஒரு வளைவில் சைக்கிள் திரும்பி மறைகிறது... ●

---

கவிதை

## ஒரு மழைக்காலம் ஒரு குடிசை ...

கோணிக்கதவு
பிய்ந்து இழையாடும்.

ஓங்கிய காற்று
பொத்தல் கீற்றை
உதிர்த்துக் கடத்தும்.

ஓதமேறிய சாணித்தரை
சுடுசாம்பலால் ஒத்தடமாகும்.

சவ்வுத்தாள் குடலை
ஒழுகல் தடுக்கும்.

நனைந்த சுள்ளிகள்
புகைக் காய்ச்சும்
அங்காடி அரிசிச்சோறு
விதையாய் உள்ளிறங்கும்.

பரப்பி வைத்த ஏனத்தில்
வழக்கின்றி
வந்தடையும் நீர்.

அலக்கில் அறுத்துவந்த
கிளேரிமரக் கொப்புகளைத்
திண்ணையில் ஒடுங்கிய
ஆடும் குட்டிகளும்
பரக்கப்பரக்கத் தின்னும்.

ஈர மண் சுவரின் வெடுப்பில்
தவளை ஓசையிடும்.

சேற்றுப் புண் ஆற்ற
சுட்டப் புளியங்காய் வைத்தியம்
ஒனைக்கை ஊட்டும்.

ஊதல் காலத்துத் தீனியாய்
வறுத்த உளுந்தும் அரிசியும்
அலுப்பாற்றும்.

புத்தகப்பையைப்
பத்திரப்படுத்த சிறுமி மனம்
அலைக்கழிக்கும்.

மழை
ஒரு எளியோருக்கானப்
பசியைப் பந்திவைக்கவும்
கூடும்.

ஆயினும் இவர்கள்
மழையை வஞ்சிப்பதில்லை.

கடம்பை அறிவு

ஆய்தல்

# விதைச்சொற்களால் கவிச்சித்திரம்

இரா. காமராசு




'ஏர்' மகாராசன் மாணவராயிருந்த பொழுதே கருத்தியல் களமாடியவர். ஈழம் குறித்தக் கரிசனமும் அடித்தள விளிம்புநிலை ஆய்வுப் பார்வையும் மீதூரப் பெற்றவர். கவிதை, திறனாய்வு, ஆய்வு, பண்பாட்டுச் செயல்பாடு, இதழியல், கல்வி எனப் பன்முக ஆளுமையாக மிளிர்பவர், கலாநிதி கா.சிவத்தம்பி வார்த்தைகளில் சொன்னால் பண்பாட்டுச் செயற்பாட்டாளர். மகாராசனின் அண்மைக் கவிதைத் தொகுப்பு 'நிலத்தில் முளைத்த சொற்கள்'.

இவரின் முதல் கவிதைத்தொகுப்பு 'சொல் நிலம்' (2017). இவருக்கு நிலம் தான் எல்லாமும். நிலத்தின் மக்கள் குறித்த அக்கறையும் ஆதங்கமுமே இவரின் கவிதை கள். பிரபஞ்சத்தின் ஆதித்தாய் நிலம். உயிர்களும் பயிர்களும் இவற்றின் இயங்கு நிலையும் நிலத்திலேயே கால்பாவி நிற்கின்றன.

இந்தக் கவிதைகள் யாவும் எளியவைதாம். எனினும் வலியவை. நேர்கோட்டுக் கவிதைகள் என்றாலும் கிடைமட்ட, செங்குத்துப் பார்வைக் கோணங்களைக் கொண்டவை.

நீரும் நிலமும் ஆதிப்பொது அதிசயங்கள். இவை அதிகாரத் தூண்டில்களுக்கு அகப்பட்ட வரலாற்றை, உரிமையுடைய மனிதர்கள் அகதிமையாக்கப்பட்ட வரலாற்றை இந்த நிலத்தில் முளைத்த சொற்கள் சித்திரப்படுத்துகின்றன.

**"அண்டத்தின் ஆதியை உணர்ந்து / மூதாதைகளின் தொன்மங்களைத் தேடி / தொல் நிலத்தில் வேர்கள் பாய்ச்சி / உறவுக் கிளைகள் சேர்த்து பேரிசைப் பண்கள் பாடி / மூச்சுக்காற்றை நிறைத்து / ஐந்திணைகளில் காமம் சுவைத்து / வழியெங்கும் கால் தடம் பதித்து / நீர்மையாய் வழிந்தோடும் / சொற்களால் நனைந்து நனைந்து / பாசில் படிந்த நிலம் / கருப்பம் கொண்ட / பிள்ளைத்தாய்ச்சியாய் / உயிர்களை சுமக்கின்றன/ நிலம் கோதிய சொற்கள்"**

எனத் தொடங்கி நிலத்தின் பன்முகப் பரிமாணங்களைக் கவிதைகளாகத் தருகிறார். இனம், மொழி, சாதி, பால், வர்க்கம் ஆகியவற்றை நிலத்தினொடு நிறுத்தி விவாதிக்கின்றன இக்கவிதைகள்.

'மண் மீட்டிய வேர்களின் இசை' என்றும், 'நிழலை அள்ளிப் பருகிக் கொண்டது உச்சி வெயில்'' என்றும், 'நீர் மலைத் தாய்ச்சிகள்' என்றும், 'செம்மூதாய்த் தொல் நிலம்' என்றும், 'ஒற்றைச் செம்போத்தின் நெடுங்கூவல்' என்றும், 'மழைக்காலத்தின் களவுப்பூ' என்றும் நிலத்தின் சொற்கள் விதவிதமாய் விரிகின்றன.

கருத்தியல் தெளிவும் அழகியல் நளினமும் அரசியல் கூர்மையும் மகாராசனின் கவிதையியலாக அமைகிறது.

மலைத்தாய்ச்சி, நிலத்தாய்ச்சி, கடல்த்தாய்ச்சி, மரத்தாய்ச்சி.... என்றெல்லாம் மிக இயல்பாக இவர் எழுதிச் செல்கிறார். மனிதர்களை மட்டுமல்ல சக உயிர்களோடு உயிரற்ற இயற்கைப் படைப்புகளையும் கூடத் தாயாக, உயிராகப் பார்க்கும் இந்த உயிர் நேயம் தமிழர் தொல்மரபின் நீட்சி.

தொகுப்பு முழுக்க உழுகுடிகளின் உயிர் அசைவு நுணுக்கமாகப் பதிவாகி உள்ளது.

**'உழுகுடிப் பாதங்களின் கொப்புளங்கள் / நிலமெனும் ஆத்மாக்களின் / அழுகைத் துளிகள் / கால்கள் நோகவும் / கொப்புளங்கள் பூக்கவும் / அரத்தம் கசியவும் நடந்த பாதங்கள் / பசி தீர்க்கும் ஒளி நிலங்கள் / உயிர் போகும் நிலத்தின் அழுகையை / கால் தோய நடந்து நடந்து / நைந்து போயிருக்கும் / உயிர்ச்சாமிகள்'**

நிகழ் வாழ்வின் பெரும் சிக்கல்களையும் இவரின் கவிதைகள் கவனப்படுத்துகின்றன.

**"ஊருக்குள்ளிருந்த மச்சு வீட்டையும் / சேரிக்குள்ளிருந்த குச்சுக் குடிசையையும் / வாரிச் சுருட்டிக் கொண்டு / ஊரையும் சேரியையும் / ஒன்றாக்கி விட்டுப் போயிருக்கிறது / இந்நிலத்துப் புயல் மழை"**

**"கண்களில் பூத்திருந்த / மகரந்தத் தூள்களை அப்பிக் கொண்ட / பூச்செடி இதழ்களில் தேன் பருகி / திக்குகளில் பறந்து திரிந்தன / வண்ணத்துப் பூச்சிகள்**

**கீகாட்டுப் பூக்களும் / மேகாட்டுப் பூக்களும் / அணைத்து மணத்துக் கூடிக் கிடந்தன**

**வனப்பேறிய வாஞ்சையோடு / பிஞ்சுகளை ஈனுகின்றன / நிறைசூலிப் பூக்கள்**

**விதை நெத்துக்களின் காலடியில் / மக்கிக் குவிந்திருக்கிறது / மனித வாழ்வின் சாதி ஆணவம்"**

இந்தக் கவித்தெறிப்பு மகாராசனின் மானிட நோக்கை உணர்த்தும்.

மருதநில மக்கள் வாழ்வை மட்டுமல்ல, மனித குலத்தின் ஒட்டுமொத்த வாழ்வையும் நிலத்தின் சொற்களில் கவிச்சித்திரங்களாக்கி உள்ளார். மொழியின், இனத்தின் வலியை, வாழ்வை, வதையை, வளத்தை, வலிமையை நிலத்தில் வேரூன்றி விதைச் சொற்களாக்கி விடுகிறார்.

**நிலத்தில் முளைத்த சொற்கள் / மகாராசன்/ கவிதைகள்! யாப்பு வெளியீடு/ விலை ரூ 100/**

# வெள்ளக்கல்லுத்தோடு

கோ.அருணகிரி



தோசக்காரிக்கிட்ட மாவு வாங்கிறமாரி பால்காரன்கிட்ட பால் வாங்க வேண்டி இருக்கு. ஆடுமாடு சத்தமும்.. வைக்கப்போரும் சாணி முட்டும் தடுக்கி விழுந்தாக்கூட ஆடுமாடு கட்டுற மொளக்குச்சில தான் தடுக்கிவுழன்னு... அப்படிப்பட்ட ஊசிமுத்தான் வூட்டுல பொறந்த என்ன அறச்சத்தம் பொறச்சத்தம் ஏன் கெவுளி சத்தம்கூட கேட்காத இந்த வெறும்பய வூட்டுல என்ன புடிச்சிக் கொடுத்து நான் மோட்டுவளையப் பாத்துக் குந்தி இருக்கேன்னு அம்மா மூக்க சிந்திக்கிட்டு அழுத மறுநாளே அம்மாயி இந்த சாம்பக்கலரு கன்னுக்குட்டியையும், ஒரு கருப்பு ஆட்டுக்குட்டியையும் உள்ளிக் கோட்டையிலேந்து ஓட்டியாந்து வுட்டுச்சி. அது என்னடான்னா செனப்படவுள்ள தெனம் ஒருத்தரு வூட்டுக் கொல்லையில மேஞ்சிட்டு வந்து சண்ட வேறு.

கீத்தப்போட்டா மச்சிப்போயி சீக்கிரம் ஒழுகுதுன்னு கடனஒடன வாங்கி கூரைக்கு வக்கலப் போட்டா அந்த எரவானத்து வக்கல புடுங்கித் தின்னுட்டு பொழுதுப்பட்டா ஒரு சண்ட. வூட்டுல பாலு கறந்து நெனச்ச நேரத்துல ஒரு காப்பித் தண்ணிப்போட்டு தொண்டைய நனைக்கலாமுன்னு பாத்தா இது இழுத்துவார சண்டைய சமாளிச்சே எனக்குத் தொண்டத் தண்ணி வத்திப்போச்சி. போரோட தின்ன மாட்ட புடுங்கிப் போட்டா கட்டாது திரும்ப ஊரிலேயே ஓட்டி வுட்டுராலுமுன்னு அம்மா முடிவு பண்ணிட்டு.

அப்பாவும் நானும் அந்தக் கன்னுக்குட்டிய வெயில் தாழ்ந்து ஓட்டிக்கிட்டு கௌம்புறோம். இங்க ஒரு விசயத்த சொல்லணும். அப்பா சாகையில எனக்கு ஒம்போது வயசு. ரெண்டு வருசம் சீக்கா கெடந்துதா அப்பா செத்துச்சு. பத்துப் பண்ணன்டு மையிலு கன்னுக்குட்டிய ஓட்டிக்கிட்டு போற அளவு அப்பா ஒடம்புல தெம்பும் நடஒடயும் இருந்திருக்குன்னா.. அப்போ எனக்கு ஆறு வயசோ, ஏழு வயசோதான் இருந்திருக்கணும். இன்னக்கி ரெண்டு புள்ளையோன்னா பொத்திபொத்தி வளக்குறோம்.

அன்னைக்கி வூட்டுக்கு ஆறேழு புள்ளையோ இருக்கும். ஒரு வூட்டுல பத்து புள்ளைங்க. அதனால அந்த வூட்டுக்குப் ‘பத்துப்புள்ளக்கார வூடு’ன்னு பேரு. கருப்புக் கன்னுக்குட்டியும் இந்த நடுப்பயலும் எங்கப் போனிச்சின்னு தெரியலன்னு தேடுவாவோ.

“ஏட்டியாயா இங்கதாண்டி இருக்கான். சோறு போட்டேன். தின்னுட்டு தூங்கிட்டான். நீ வந்து தூக்கிட்டுப் போறியா?”

“இல்ல.. இல்ல... தூக்கத்துல எழுப்புனா வெரண்டு கத்துவான். அங்கையே கெடக்கட்டும். காலையிலே வரட்டுமுனு சொல்லுவாவோ...” புள்ளைகளைப் பத்தி பெருசா பயமோ கவலையோ படாத காலம் அது.

அப்படித்தான் ஆறு வயசு சின்னப்பய என்னைய அப்பா மாடு ஓட்ட கூட அழைச்சிக்கிட்டுப் போனது. ஒரு வேப்பங்குச்சிய ஒடச்சி கையிலக் கொடுத்து,

“ஏய் சின்னவன... மாடு தேங்கி நின்னா மட்டும் இந்தக் குச்சியாள ஒரு அடி... அடி.. ரொம்ப சூத்துக்குப் பின்னாடி வராத, ஒதச்சிக்கிதச்சிப்புடும். கொஞ்சம் தள்ளியே வான்னு சொல்லி, அப்பா என்ன கூட்டிட்டுப் போனிச்சி. அப்பாவப் பத்தி என்கிட்ட இருக்குற ரெண்டு மூணு நெனவுல இதுவும் ஒன்னு.

அப்புறம் அம்மா அக்காவெல்லாம் நடவுக்குப் போன மதியநேரத்துல எங்கையோ சிமிண்டு லோடு எறக்கிட்டு உடம்பு பூரா சிமிண்ட்டும் தூசியுமா வந்து குளிக்க கௌம்பையில, நானும் குளிக்க வாரேன்னு சொல்ல, ஒரு பேப்பர எடுத்து எனக்கு கப்பல் செஞ்சிக் கொடுத்து, ஆத்துல தண்ணி நெறையப் போவுது. இன்னொரு நா குளிக்கலாம். நா குளிச்சிட்டு வார வர, இந்த கப்பல வுட்டு கரையில வெளையாண்டுட்டு இருன்னு கூட்டிப் போனது.

ஒரு சினிமா பாட்ட நான் பாடிட்டு இருக்க, அதக் கவனிச்ச அப்பா, அந்தப் படத்தோட பாட்டுப் புத்தகத்தை வாங்கியாந்து இதப்பாத்துப் பாடுன்னு சொல்லுது. வரிகளைத் தப்புத்தப்பா பாடுறேன்.

‘‘ஏய் நீ பாடுறேன்னுதா நா பாட்டுப்புத்தகம் வாங்கியாந்து தந்தேன். அப்பவும் நீ தப்பா பாடுறே. நீ புத்தகத்தைப் படிச்சிப் பாடுறியா? நீயா பாடுறீயான்னு கேட்டது.

அப்பப் புரியல. பாட்டுல நா ஆர்வமா இருக்குறதால பாட்டுப் புத்தகம் வாங்கித் தந்தா அதப் படிச்சி நா படிக்கவும் கத்துக்குவேன்னு அப்பா நெனச்சிருக்கும் போல.

லோடுமேன் வேல செய்ய முடியாம அப்பா கடைசிக் காலத்துல ஒத்தமாட்டு வண்டிய வாங்கியாந்து ஓட்டுனிச்சி. ஒருநா மதியம், அப்பாவோட வண்டி வீட்டுக்குப் போன வேகத்துல திரும்பி வருது. ஏதோ கோவத்துல அம்மா அன்னைக்கி சமைக்கலப் போல. பள்ளிக்கோடத்துல வெளையாண்டுக்கிட்டு இருந்த என்ன கூப்புட்டு சாப்ட்டியான்னுச்சு. ம்... பள்ளியோடத்துல சாப்ட்டா சரி... வண்டில ஏறிக்க. தெரு மொணங்குல இருக்குற அய்யரு கடையில தயிர்சாதம் வாங்கிக் கொடுத்துட்டு பத்திரமாப் பள்ளிக்கோடம் போடான்னு வண்டிய ஓட்டிட்டுப் போயிடுச்சு. அன்னைக்கி மதியம் அப்பாவும் சாப்புட்டுருக்குமானு எனக்கு இப்பவும் தெரியல.

வைக்கோலப் பரப்பி அதுமேல பாயவிரிச்சி கொஞ்சம் ஒசரமா மெதுமெதுன்னு மெத்த மாதிரி இருக்கும். அப்பாவின் ஒத்த மாட்டுவண்டி விரிப்பில் அமர்ந்து போவது தனிசுகம். வண்டியில் ரெண்டு மூணு பேர் ஏறிட்டா பின்பாரம் தூக்கும். முன்பாரம் தேவைப்படையில முன்னாடி வாடான்னு கூப்புட்டு ஒக்கார வைக்கும். வண்டி மாட்டுக் கழுத்தில் பூட்டப்பட்ட சட்டத்துக்கும், அப்பா காலுக்கும் இடையில் நா போயி நிப்பேன். அப்பா பொறங்கால கொஞ்சம் வெறப்பாக்கிக்கும். அந்தக் காலுமேல கால வச்சி மாடு பூட்டியிருக்கும் சட்டத்த சின்ன கைத்தாங்கலாப் புடுச்சிக்கிட்டு அப்பா என்னை தூக்கி வண்டியில் குந்த வைக்கிறதே ஒரு சாகசம்போல் கண்ணிமைக்கும் நேரத்துல நடக்கும்.

பள்ளியோடம் விட்டு பொழுதோட அஞ்சி ஆறுமணியப் போல கடைத்தெருவுக்குப் போயி, அப்பாக்கிட்ட அஞ்சி ரூவா பணம் வாங்கி, அரிசிதவசி, சாமாஞ்செட்டு, அவுத்திக்கீரக் கட்டுனு பெரும்பாலும் அவத்திக்கீரத் தண்ணி சாறுதான் கொழம்பு. இதெல்லாம் நா வாங்கியாந்து வச்சா, அம்மா அக்காவெல்லாம் நடவுக்குப் போயிட்டு வந்து சமைக்கத் தோதா இருக்குமுன்னு அம்மா எங்கிட்ட சொல்லிப்புட்டுப் போவும். பெரும்பாலும் இது நல்லவிதமா நடக்காது. சின்ன வெளக்கமாறு குச்சியாலப் பல்லக் குத்திக்கிட்டு அப்பா ஒக்காந்திருக்கும். ஒண்ணு கெடக்குற கடைத்தெருவ வெறிச்சுப் பாத்தப்படி.

“எங்கடா சின்னப்பயல... காலையில கௌம்பையில மூதேவி செருக்கி

ஒருத்தி எதுத்தாப்புல வந்தா. அவ மூஞ்சில முழிச்சிட்டு வந்தாலே அறுத்தக் கைக்குச் சுண்ணாம்பு கெடைக்காது. அது மாதிரியே இருக்குடா. மாடு தின்ன வைக்கலுக்குக்கூட ஒரு சவாரி வல்லேடா. நானும் தெக்கையும் வடக்கையும் பாத்துக்கிட்டுத்தான் ஒக்காந்திருக்கேன். வூட்டுலேந்து வந்தப்ப ஒரு ஐயர் குடும்பத்த சினிமா கொட்டகையில வுட்டேன். படம்விட பத்துமணிஆவும். கடத்தெருவுல இருந்தா வாரேன். இல்லேன்னா வேற வண்டிய பாத்துக்கோங்கன்னு சொல்லிட்டுதா வந்தேன். வேற வழியில்ல. அவ்வோளப் போயி கூட்டியாந்தா ராத்திரி நேரங்குறதால காரூவா, எட்டணா சேத்துக் கொடுப்பாவோ.

பெரும்பாலும் இப்படித்தான் போவோமா, காச வாங்கிட்டு சாமான வாங்கிட்டு வந்தோமான்னு இருக்காது.

''காசே இல்ல.. சவாரி வரட்டுமுன்னு நிக்கிற மாதிரி இருக்கு. இல்லாட்டி சாமான் வாங்கக்கூட காசு கிடைக்குமா சின்னவனே.. ஏ கைச்செலவுக்குக் கூட ஏதும் ஒன்னுரெண்டு வந்தா ஒன் கூடையே நானும் வந்துடுவேன். நீ என்னத் தனியா போகப்போறேன்னு'' ஒக்கார வச்சிக்கும் அப்பா.

ஏழு எட்டு மணிக்கெல்லாம் வண்டிய ஓட்டிக்கிட்டுப் போனாலும் ஓயி திட்டுவா. சினிமாவுட்டு சனங்க வரட்டும். ஏதாவது சவாரி வரும். இல்லாட்டிப் போயிடுவோம். அதுபோலவே சிலப்போ கெடைக்கும். சிலப்போ கெடைக்காது. சரிடா சின்னப்பயலே பகவான் போட்ட படி அவ்வளவுதான்னு வண்டியக் கட்டும்.

அப்பா வழக்கமா சாமான் வாங்குற கடை ஒன்னு ஒன்னுலேயும் மாடு தானாப் போயி நிக்கும். ஓ...ஓ...ன்னு அப்பா சின்ன சத்தம் மட்டும்தான் கொடுக்கும். காலையில காப்பித்தண்ணி வைக்க வெல்லந்ததூளு வாங்குற செட்டியார் கட. ராத்திரி தண்ணிசாறு வைக்க அவத்திக்கீரப்பாய் கட. இந்தக் கடையில எல்லாம் நேரம் ஆவாது. செத்த செத்த நாழியிலேயே வந்துரும். வண்டி கடைசியா போயி நிக்கிறக் கட அப்பா வழக்கமா குடிக்கிற 5ஆம் நம்பர் சாராயக்கடை. அங்க போயிட்டு வரமட்டும் செத்த நேரமாயிடும்.

''சின்னவனே பத்திரமா குந்திக்க. மாடு ஏதும் வெரண்டுச்சின்னா இந்தக் கயிறப்புடிச்சி லேசா இழு''ன்னு மாட்டோட மூக்கணாங்கயிறக் கையிலக் கொடுத்துட்டுப் போவும். அரை மணி நேரமானாலும் அப்படியே நிக்கிற மாடு, அப்பா வந்து வண்டியில ஏறி ஒக்காந்து தன்னோட காலால மாட்டோட கால லேசா ஒரு தட்டுத் தட்டுன ஒடனேயை, எப்பாடி வண்டி கௌம்புது! நாமளும் அப்பா செய்யுறமாரி அது காலத்தட்டுனா போவுமா? இப்படி யோசனையா இருக்கையில, தொண்டையச் செருமிக்கிட்டு வந்து வண்டியில ஏறி ஒக்காந்த அப்பா காறித்துப்பிய ஒரு சளித்துண்டு தூரப்போயி விழுந்து, தன் அருவருப்பான நிறத்திலிருந்து மண்ணின் நெறமாகவே மாறுனுச்சு.

சின்னப்பயலே இத வாயிலப் போடுறான்னு தன்னோட தோள்பட்ட பக்கமா மல்லாத்திக் காட்டுன உள்ளங்கையில இருந்த காராச்சேவ எடுத்து வாயிலப் போட்ட எனக்கு வேர்வை வாடையும், சாக்கனக்கட வாடையும் அதிகமாக இருந்ததால, பதத்துப்போன அந்தக் காராச்சேவு தன் வாடைய இழந்து நின்றது.

இப்படி பழைய ஞாபகத்த எல்லாம் நெனச்சிக்கிட்டு அப்பா பின்னாடி மாடு ஓட்டிப் போன நா செத்த மலச்சி பின் தங்கிட்டா,

''ஏலே.. நானும் மாடும் இவ்வளவு தூரம் வந்துப்போய் நீ எங்கடா ஒரு மைலுக்கு அந்தாண்ட வாரேன்னு'' அவரு சவுண்டு விட்ட ஒடனேயே நா ஓடுனேன். இந்தா ஊரு வந்துட்டு.. இன்னும் செத்தநாழின்னு அப்பா என்னை சமாதானப்படுத்துனுச்சி. ஒரு வழியா மாட்ட அம்மாயி வூட்டுல வுட்டுட்டு காலம்பறத் திரும்புவோம்.

வடசேரி மாட்டுத்தரவுக்கார ஆளுகிட்ட மாட்ட வித்த அம்மாயி, காச கையிலக் கொடுத்தா செலவாயிடும்முன்னு ஒரு ரோசனை பண்ணிச்சி.

''போட்ட நகையெல்லாம் வித்துப்புட்டுச்சி ஒம்புருச. எந்த

நல்லது கெட்டதுக்கு வந்தாலும் அறுத்த செறுக்கியாட்டம் வாரான்னு பட்டுக்கோட்டையில போயி வாங்கி வந்து கொடுத்துச்சு, அம்மாவுக்கு அந்த வெள்ளக்கல்லுத்தோட்ட.

ஏட்டியாயா அந்த தேங்காய் எண்ணெ சீசாவ எடு. கைகாலு எல்லாம் வறவறன்னு இழுக்குதுன்னு எண்ணெய் தேச்சிட்டு, தலைக்கும் லேசா எண்ணெய் வச்சி, அள்ளி முடிஞ்சிக்கிட்டு, போனா வந்தா கட்டிக்கனு ஒரு பூ போட்ட பொடவ இருக்கும். எல்லாத் துணியையும் வேலிலயும், படல்லயும் துவச்சிப் போடுற அம்மா, அந்தப் பொடவைய மட்டும் தொவச்சி, பக்கம் பக்கமா இருககுற மரத்துக் கிளையில முடிச்சிப்போட்டு காயவைக்கும். சுருக்கம் இல்லாம, காத்துலக் காஞ்சதும் எல்லாத் துணியோடயும் கொடிலப் போடாம நறுவிசா மடிச்சித் தகரப்பொட்டியில வச்சிடும்.

இப்படி ஊருக்கு போகையில அந்தப் பொடவையக் கட்டி, அந்த வெள்ளகல்லுத் தோட்ட போட்டா, அம்மா ஊருக்குப் போவுதுன்னு புரிஞ்சுக்கலாம். மூஞ்சிக்கு மாவடிக்கிற பழக்கமெல்லாம் அம்மாவுக்கு இல்லை. தல, கைகாலுக்குத் தேச்ச எண்ணெய்ப்பச கொஞ்சம் உள்ளங்கையில இருக்கும். ரெண்டு உள்ளங்கையையும் மொகத்துல தேச்சி, உச்சிவரைக் கையைக் கொண்டுபோய் படியாம நிக்கிறத் தலமுடியையும், ஒரு ஒதுக்கு ஒதுக்கிவிட்டு முந்தானையை எடுத்து அழுத்தி மூஞ்சையும் ஒரு தொடதொடச்சா, மொகம் பளிச்சுன்னு ஆயிடும். கண்ணாடி பாத்து இதையெல்லாம் அம்மா செஞ்சதே இல்லை. கடைசியா எரவானத்துல சொருவி இருக்கும் கண்ணாடிய எடுத்து ஒரு பார்வ பாத்துக்கும். சிலப்போ வாசல்வர போயிட்டுக்கூட.

‘‘யாயா... செத்த அந்தக் கண்ணாடிய எடுங்கடின்னு...’’ வாசல்லேயே நின்னு பாத்துக்குறதும் உண்டு.

வெள்ளக்கல்லுத் தோட்ட அம்மா போட்டுட்டுப் போறத அப்பா பாத்துட்டா அவ்வளவுதான். ஏதாவது மொடசட சொல்லி அடவு வைக்க வாங்கிட்டுப் போயிடும். அம்மா காதுல இருந்ததைவிட கடயில இருந்ததுதான் அதிகம். வெறும் காதோட ஊருக்குப்போனா அம்மாயி ஏண்டி குத்துன மூக்குக்கு குச்சியில்லாம இருந்தவளுவ எல்லாம் தேவையளுக்கு வரயில எப்படிலாத்திக்கிட்டு வாராருளுவ. நீ அதே பரதேசி கோலமா வருவியான்னு திட்டும். எண்ணெ எறங்கிப் போயிட்டு பத்தருவூட்டுலக் கழுவக் கொடுத்திருக்கேன்னு சமாளிக்கும். இல்லன்னா யாரு வூட்டுலாவது எரவத்தோடு வாங்கிப் போட்டுப் போவும். இல்லன்னா, அப்பா அடவு வச்சத அதுக்குத் தெரியாம தா செருவாடு சேத்துவச்சக் காசுல திருப்பி வச்சிக்கும். ஊருக்குப் போவதுன்னாலோ, ஏதும் தேவக்கார வூட்டுக்குப் போனாலோ அப்பாவுக்குத் தெரியாமல் முந்தானையில முடிஞ்சிக்கிட்டுப் போயி, பாமணி ஆத்தாங்கரைக்கு அந்தாண்ட போயி போட்டுக்கும். அதே மாரி ஊருலேந்து திரும்பையில தெருமொணங்குல நின்னு கழட்டி சீலயில முடிஞ்சுக்கிட்டு வெறும் காதோட வரும். ஒருவாட்டி அடகு வச்ச ரசீத புள்ளக்கொட்டாயில, கீத்து மடிப்புக்குள்ள சொருவி வச்சிட்டு, எங்கே வச்சேனு மறந்துட்டு வீடுபூரா சல்லடைப் போட்டுத் தேடியும் கெடைக்கல. அப்புறம் அடகு வச்சக் கடகார கையக்காலப் புடிச்சி வாங்குறாப்புல ஆயிட்டு. ரெண்டு வருசம் கழிச்சு, கீத்துப் போடயில ரசீது புள்ளக் கொட்டாலேந்து மக்கிவுழுது.

‘‘பெத்தவ நா குத்துக்கலாட்டாம் இருக்கையில நா பாக்க நீ போயிட்டியாடி யாயா’’ன்னு அம்மா செத்த அன்னைக்கு மாரடிச்சி அழுதுக்கிட்டு அந்த அம்மாயி மொதப் பாத்தது அம்மாவோட காதத்தான்.

இப்பக்கூட ஏண்டா அவ காதுல அந்தத் தோட்டப் போடாம இருக்கியன்னு கொடுத்த சவுண்டுல, தோட்ட அம்மா எங்க வச்சிருக்குன்னு ஆளுக்கு ஒரு பக்கமாத் தேட, அம்மாவோட ரகசிய இடங்கள் தெரிஞ்ச நடக்கா அரிசிப் பானைக்குள்ள இருந்து எடுத்தாந்திச்சு.

மொதமொத எந்தப் பயமும் இல்லாம அப்பாவுக்கு நேரா அம்மா அந்தத் தோட்டப்போட்டுக்கிட்டு நாற்காலில குந்தி இருந்துச்சு. உயிரற்ற அம்மாவின் காதில் உயிர்ப்புடன் மின்னிக் கொண்டிருநத்து அந்த வெள்ளக்கல்லுத்தோடு. ●

கட்டுரை

# ஓசைகள் அன்றும் இன்றும்

சு.இராமசுப்பிரமணியன்

ஒலி உருவாகவேண்டுமானால் ஏதேனும் ஒரு பொருள் அல்லது துகள் அதிர்வுறவேண்டும் என்கிறது இயற்பியல். உருவாகும் ஒலிக்கு அதிர்வெண் உண்டு. ஒரு விநாடி நேரத்தில் ஏற்படும் முழு அதிர்வுகள், அதிர்வெண் என்று அழைக்கப்படும். அந்த அதிர்வெண் *20* ஹெர்ட்ஸ் முதல் *20,000* ஹெர்ட்ஸ் வரையிலும் உள்ள ஒலியைத்தான் நாம் நம் காதுகளால் கேட்டு உணரமுடியும். அதிர்வெண் கூடும்போது கேட்கும் ஒலி மென்மையாக இருக்கும். அதிர்வெண் குறையும்போது அதுவே வன்மையாக இருக்கும். ஆண்குரலைவிடப் பெண்குரல் கேட்பதற்கு இனிமையாக இருப்பதற்கு, பெண்குரலின் அதிர்வெண், ஆண் குரலின் அதிர்வெண்ணைவிட அதிகமாக இருப்பதே காரணம். குரல் என்பதும் ஒலியைத்தான் குறிக்கிறது.

ஒலிதான் ஓசை. இயற்கையில் எத்தனையோ வகையான ஓசைகள் உள்ளன. பறவைகள், விலங்குகள் எழுப்பும் ஓசைகள், ஆர்ப்பரித்து இறங்கும் அருவிகளும், சலசலவென நீர் ஓடும் ஆறுகளும் ஓடைகளும் ஏற்படுத்தும் ஓசைகள், கடல் அலைகள் ஓயாமல் எழுப்பிக்கொண்டிருக்கும் ஓசைகள், வீசும் காற்று ஏற்படுத்தும் ஓசைகள் என்று ஓசைகள் பலவகைப்படும். இயற்கையில் எழும் ஓசைகளில் பெரும்பாலானவை மனதிற்கு இதமானவை. நல்லபாம்பு சீறுவதும், புலி உறுமுவதும், யானை பிளிறுவதும் அச்சத்தை ஏற்படுத்தும் ஓசைகள்.

ஓசை இசையும்போது அது ‘இசையாக’ (music) மனதை வருடுகிறது. அப்படி இசையாதபோது, ‘இரைச்சலாக’ (noise) மனதை நெருடுகிறது. எது இசை, எது இரைச்சல் என்பது எழும் ஓசையில் மட்டுமல்ல கேட்பவரைச்சார்ந்தும் இருக்கிறது. ஒருவருக்கு இசை எனத்தோன்றுவது, இன்னொருவருக்கு இரைச்சலாகத் தோன்றக்கூடும்.

**காட்டில் எழும் ஓசைகள்:**

சங்க இலக்கியங்களில் ஒலியானது ஓசை, ஒதை, பூசல் என்று பலபெயர்களில் குறிப்பிடப்படுகிறது. பத்துப்பாட்டுக்களில் ஒரு பாட்டு மலைபடுகடாம். ‘கடாம்’ என்பதும் ஒலியைக்குறிக்கும் சொல்தான். மலையில் இயற்கையாக எழும் பல்வேறு ஓசைகளின் தொகுப்பு மலைபடுகடாம்’ என்று ஆகிறது.

நன்னனிடம் பரிசில்பெற்றுத்திரும்பும் கூத்தன், மற்றொரு கூத்தனையும் அவனது சுற்றத்தினரையும், மன்னன் நன்னனிடம் ஆற்றுப்படுத்துவதுதான்,‘மலைபடுகடாம்’. அவர்கள் கடந்துசெல்லும் வழி, வழியில் ஏற்படும் இடையூறுகள், அவற்றை எப்படி எதிர்கொள்ளவேண்டும், என்னென்ன உணவினை யார்யார் தருவார்கள்போன்ற அனைத்தையும் ஆற்றுப்படுத்தும் கூத்தன் கூறுவதுதான் மலைபடுகடாம். அப்படியான மலைப்பயணத்தில் என்னென்ன ஓசைகளை கேட்கலாம் என்றும் ஆற்றுப்படுத்தும் கூத்தன் விவரிக்கிறான்.

> ‘‘அருவி நுகரும் வானர மகளிர்
> வருவிசை தவறாது வாங்குபு
> குடைதொறும்
> தெரிஇமிழ் கொண்டதும் இயம்போல்
> இன்னிசை’’
> (மலைபடுகடாம். வரிகள் 294-296)

அருவியில் நீராடும் வான்மகளிர் அருவிநீரைக்கைகளால் தடுத்துவிடும்போது, ஒருவிதத் தாளத்துடன்கூடிய இன்னிசை கேட்கும்.

> ‘‘இலங்குஏந்து மருப்பின் இனம்பிரி
> ஒருத்தல்
> ..........................
> அறல்வாழ் கூந்தல் கொடிச்சியர் பாடல்’’
> (மலை. 297-304)

வழிதவறிவந்து தினைப்புலத்தில் மேயும் யானைக்கூட்டத்தின் தலைவன்யானையை வளைக்கக் குறவர்கள் எழுப்பும் ஓசையும், முள்ளம்பன்றியின் முட்களால் காயமுற்ற கானவர் எழுப்பும் ஓசையும், புலிபாய்ந்த

கணவனின் மார்பில் உண்டான வலியைக்குறைக்கக் கொடிச்சியர் பாடும் பாடல் ஓசையும் கேட்கும்.

**''தலைநாள் பூத்த பொன்னிணர் வேங்கை**

**..........................**

**சிறுமை உற்ற களையாப் பூசல்''**

**(மலை. 305-315)**

முதல்நாள் பூத்தப் பொன்னிறம்கொண்ட வேங்கை மலர்களைப் பறிக்கும்போது மகளிர் எழுப்பும், 'புலி புலி' என்னும் ஓசை கேட்கும். கருவுற்ற பெண்யானையை, ஆண்யானைப் பாதுகாத்துவருகிறது. இருந்தும் வலிமையுள்ள புலி ஒன்று அப்பெண்யானைமீது பாய்ந்துவிடுகிறது. அதனால் அப்பெண் யானை எழுப்பிய ஓசை இடிமுழக்கம்போல் கேட்கிறது. அதனைக்கேட்ட மந்தியின் கைநழுவி அதன் குட்டி பள்ளத்தில் வீழ்ந்துவிடுகிறது. குட்டிமந்திக்குத் தப்பிக்க வழிதெரியாது என்பதால் மந்தி எழுப்பிய ஓசை மலையெங்கும் கேட்கிறது.

**''அருங்குறும்பு எறிந்த கானவர் உவகை''**

**(மலை. வரி 318)**

தேன்கூட்டை அழித்துத் தேனைக் கொள்ளைகொண்டபின், கானவர் கொண்ட மகிழ்ச்சியால் எழுந்த ஓசை.

**''வான்தோய் மீமிசை அயரும் குரலை**
**நல்எழில் நெடுந்தேர் இயவுவந் தன்ன**
**கல்யாறு ஒலிக்கும் விடர்முழங்கு இரங்கிசை''**

**(மலை, வரிகள் 325-330)**

மான்தோலால் செய்யப்பட்ட சிறுபறை எழுப்பும் ஓசையுடன் கள்ளுண்டு களிகொண்டு குறவர்கள் தங்கள் மனைவியருடன் ஆடும் குரவைக்கூத்து எழுப்பும் ஓசையும், தெருக்களில் தேர் ஓடிவரும்போது எழும் ஓசையைப்போன்று மலையிலிருந்து விரைந்து வரும் ஆற்றுநீர் முடங்கிகளில் ஏற்படுத்தும் ஓசையும் இசைபோல கேட்கின்றன.

**''நெடுஞ்சுழிப் பட்ட கடுங்கண் வேழத்து**

**............**

**விரவுமொழி பயிற்றும் பாகர் ஓதை**

**............**

**கிளிகடி மகளிர் விளிபடு பூசல்''**

**(மலை. வரிகள் 325-330)**

காட்டாற்றுவெள்ளத்தின் பெருஞ் சுழியில் அகப்பட்ட யானையின் சினத்தைத் தணித்துத் தறியில் கட்டுவதற்காக யானைப் பாகன்கள் எழுப்பும் வடமொழியும் தமிழும் கலந்த ஓசையும், தினைப்புலத்தில் கிளியைவிரட்ட மகளிர் வாயாலும், தட்டையாலும் எழுப்பும் ஓசையும் கேட்கும்.

**''இனத்தில் தீர்ந்த துளங்குஇமில் நல்லேறு**

**...........**

**கோவலர் குரவரோடு ஒருங்கு இயந்து ஆர்ப்ப**
**வல்இதழ்க் குளவியும் குறிஞ்சியும் குழைஅய்''**

**(மலை. வரிகள் 330-335)**

முல்லையும், குறிஞ்சியும் அருகருகே அமைந்திருக்கும் நிலப்பகுதிகள். முல்லை நிலத்தில் மேய்ந்துகொண்டிருந்த ஏறு ஒன்று கூட்டத்தைவிட்டு விலகி, வழிமாறி குறிஞ்சி நிலமான மலைப்பகுதிக்குள் வந்துவிடுகிறது. அதனைக்கண்ட பசுமுகம்கொண்ட மான் ஒன்று விரைந்து இறங்கிவருகிறது. குறிஞ்சியின் மரையானும், முல்லையின் நல்ஏறும் பொருதுகின்றன. அதனால் ஓசை எழுகின்றது. அந்தச் சண்டைக்காட்சியைக் குறிஞ்சி நிலக்குறவரும், முல்லைநில ஆயரும் ஒருங்கமர்ந்து கண்டு ஆரவாரம் செய்கின்றனர்.

**''காந்தள் துடுப்பின் கமழ்மடல் ஓச்சி**

**................**

**கன்றுகடாஅ உறுக்கும் மகாஅர் ஓதை**
**பன்றிப் பறையும் குன்றகச் சிலம்பும்''**

**(மலை. வரிகள். 336-343)**

பலாமரத்தில் பழுத்தப் பலாப்பழங்களில் தின்றதுபோக மிச்சமுள்ள பழங்களிலிருந்து கொட்டைகளை எடுப்பதற்குச் சிறுவர்கள் கன்றுகளைப் பிணைத்து ஓட்டுவர். கன்றுகளை மணம்வீசும் காந்தள் மடலால் அடிப்பர். அப்போது ஓசை எழும். கன்றுகளைப் பிணைத்து ஓட்டி, பழங்களைப்பிதுக்கிக் கொட்டைகளைப் பிரிக்கவேண்டுமானால், எந்த அளவிற்குப் பலாப்பழங்கள் விளைந்திருக்கின்றன என்பதையும் நாம் புரிந்துகொள்ளமுடிகிறது.

வழியெங்கும் கரும்பு ஆலைகள் உள்ளன. அவற்றில் கரும்புச்சாறு மழைபோல் பொழிகிறது. சாறு பிழிய கரும்புகளை ஒடிக்கும்போது ஓசை எழும்புகிறது. கல்லுரல்களில் தினைக் குற்றும் மகளிர் பாடும் வள்ளப்பாடல்களின் ஓசையும், சேப்பங்கிழங்கையும், மஞ்சளையும் மலைப்பன்றிகளிடமிருந்து காப்பதற்கு

எழுப்பப்படும் பன்றிப்பறை ஓசையும் கேட்கும்.

''மலைபடு கடாஅம் மாதிரத்து இயம்பக்''
(348)

'கடாம்' என்பதற்கு ஆண்யானையின் 'மதம்' என்னும் ஒரு பொருளும் சொல்லப்படுகிறது. புலவரின் கவிமனம், ஓங்கி உயர்ந்த மலையை ஒரு யானையாக உருவகம் கொள்கிறது. நாலாதிசைகளில் இருந்தும் வரும் ஓசைகள் ஒருங்கிணைந்து, ஒரு மதம்கொண்ட ஆண்யானை உரத்த குரலில் பிளிறுவதுபோல கேட்கிறது. அதுவும், 'மலைபடுகடாஅம்' என்பதற்குக் கவித்துவமாகப் பொருள் தருவதாகவும் அமைந்துவிடுகிறது.

இன்றைய கவிதைத் தொகுப்புகளுக்குத் தலைப்பாக, ஏதேனும் ஒரு கவிதையின் தலைப்பையே கவிஞர்கள் தெரிவு செய்வதுபோல, 'மலைபடுகடாஅம்' என்னும் சொல்லே, இப்பாடல்களுக்குத் தலைப்பாகவும் அமைந்துவிட்டது.

**நாட்டில் எழும் ஓசைகள்:**

மலைகள் சூழ்ந்த காடுகளில் எழும் பல்வேறு ஓசைகளை மலைபடுகடாம் வெளிப்படுத்தியதுபோல், சங்க காலத்திலேயே நாகரிகம் அடைந்த நகரமும். பாண்டியமன்னர்களின் தலைநகருமான மதுரையில் எழுந்த ஓசைகளை மதுரைக்காஞ்சி காட்சிப்படுத்துகிறது.

''ஐம்பால் திணையும் கவினி அமைவர''
(மதுரைக்காஞ்சி, வரி-326)

ஐம்பால் என்பது இங்கு ஐந்து பிரிவுகள் என்னும் பொருளில் வருகிறது. பாண்டிய நாட்டில் ஐவகை நிலங்களும், அவற்றிற்கான ஒழுக்கங்களும் சிறப்பாக இருந்தன என்பதாகும்.

**மருதநிலத்து ஓசைகள்:**

''கம்புட் சேவல் இன் துயில் இரிய
மீன்சீவும் பாண்சேரியொடு
மருதம் சான்ற தண்பணை சுற்றி,
ஒருசார்''
மதுரைக்காஞ்சி, வரிகள் (254-270)

குளங்களில் வலைவீசி மீன் பிடிக்கும்போது உருவாகும் ஓசையும், வலைஞர்கள் பிடித்துவந்த மீனுக்குவிலைகூறி கூவும் ஓசையும், கரும்பு ஆலைகளில் எந்திரங்கள் கரும்பைப் பிழிதலால் ஏற்படும் ஓசையும், வயல்களில் களைபறிப்பவர்கள் எழுப்பும் ஓசையும், எருதுகளின் வருத்தம் போக்கிக் கள்ளுண்ணும் களமர் எழுப்பும் ஓசையும், விளைந்த நெல் வயல்களில் நெல்லை அறுவடைசெய்வோர் முழக்கும் பறையோசையும், திருப்பரங்குன்றத்தில் விழா எடுப்போரின் ஆரவாரமும், புதுவெள்ளத்தில் நீராடும் ஆண், பெண் இணையர் எழுப்பும் மகிழ்ச்சி ஆரவாரமும் ஆகிய ஓசைகள் அனைத்தும் பரந்துவிரிந்த வானில் ஒருமித்து ஒலிக்க, குருகுப் பறவைகள் குரல் எழுப்ப, பாண்சேரியில் ஒவ்வொரு வீட்டு மாடத்திலும் மீன் சீவும்போது அவர்களின் ஆடல்பாடல் ஓசையும் ஒருங்கிணைந்து மருதநிலத்துப் பண்பை உணர்த்துவனவாக உள்ளன. அன்றைய மதுரை நகரைச் சுற்றிலும் இருந்த பாணர்வசிக்கும் சேரிகளில் வீடுகள் மேல்மாடங்களுடன் கட்டப்பட்டிருந்தன என்னும் அரிய செய்தியும் நமக்குத் தெரியவருகிறது.

**குறிஞ்சிநில ஓசைகள்:**

"தினைவிளை சாரல் கிளிகடி பூசல்
...........
இலங்குவெள் அருவியொடு சிலம்பகத்து இரட்ட
கருங்கால் குறிஞ்சி சான்ற வெற்பணிந்து
அருங்கடி மாமலை தழீஇ ஒருசார்"
(மதுரைக்காஞ்சி, வரிகள், 291-301)

தினைப்புலத்தில் கிளிவிரட்டும் ஓசை, அவரையின் இளம்தளிரை மேய்வதற்கு வரும் காட்டுப்பசுவை விரட்டும் ஓசை, வெட்டியகுழியில் வீழ்ந்த மலைப்பன்றியை பிடிக்கும் ஆரவாரம், வேங்கை மலர்களைப் பறிக்கும் இளமங்கையர் 'புலிபுலி' என்று கத்தும் ஓசை. மலைப்பன்றியைப் புலி அடித்து வீழ்த்துவதால் எழும் ஓசை, வெண்மை நிறத்தில் நீர்வீழும் அருவியின் ஓசை என்று இத்தனைவகையான ஓசைகள் குறிஞ்சி நிலத்தில் கேட்க கூடியனவாக இருந்தன.

**கடைத்தெருவில் எழுந்த ஓசைகள்:**

''வகைபெற எழுந்து வானம் மூழ்கி
சில்காற்று இசைக்கும் பல்புழை நல்லில்
யாறுகிடந் தன்ன அகல் நெடுந் தெருவில்
......................
கயம்குடைந் தன்ன இயம்தொட்டு இமிழிசை

மகிழ்ந்தோர் ஆடும் கலிகொள் சும்மை
ஏவுகண் டன்ன இருபெரு நியமத்து''
(மதுரைக்காஞ்சி, வரிகள், 357-365)

அங்காடித்தெரு, ஆறுபோல் நீண்டும்–அகன்றும் கிடந்தது. அத்தெருவின் இருமருங்கிலும் சாளரங்களைக்கொண்ட நல்ல வீடுகள் இருந்தன, வீடுகளில் பல்வேறுபட்ட மக்களின் பேச்சொலி இசைபோல் எழுந்தது. திருவிழாக்கள் பற்றிய செய்திகளைப் பெரிய முரசுகளை அறைந்துத் தெரியப்படுத்தினர். அக்கடைத் தெருக்களில் எழுந்த ஓசையானது, இசைக்கருவிகளை இயக்கி அதனால் மகிழ்ந்து ஆடும் இசைபோல் இருந்தது. இக்காட்சிகள் நாளங்காடி, அல்லங்காடி என்னும் பகல், இரவு கடைத்தெருக்களுக்கும் பொருந்தும்.

**பகல் கடைகளின் பேரொலி:**

''மழைகொளக் குறையாது புனல்புக மிகாது
கரை பொருது இறங்கும் முந்நீர் போலக்
கொளக்கொளக் குறையாது தரத்தர மிகாது
கழுநீர் கொண்ட எழுநாள் அந்தி
ஆடுதுவன்று விழவின் நாடு ஆர்த்தன்றே
மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடல்
நாள் அங்காடி நனந்தலைக் கம்பல்''
(மதுரைக்காஞ்சி, வரிகள், 424-430)

மழைமேகங்கள் கடல் நீரை எத்தனை முறை முகர்ந்தாலும் கடல் நீர் குறைவதில்லை. எத்தனை ஆறுகள் கடலில் நீரைக் கொண்டுவந்து சேர்த்தாலும் கடல்நீர் உயர்வதும் இல்லை. போலவே, பகல் கடைவீதிகளில் மக்கள் எவ்வளவு வாங்கினாலும் கடைகளில் சரக்கு குறைவதில்லை. சரக்குகளைக் கொடுப்போர் கொண்டுவந்து கொடுத்துக் கொண்டிருந்தாலும் கையிருப்பு கூடுவதும் இல்லை. என்னே ஒரு சமநிலை வணிகம்! விழாக்காலங்களில் ஏழாம்நாள் தீவினைகளைக் கழுவ நீராடல் உண்டு. அப்போது கூடும் மக்களின் ஆரவாரம் பெரிதாக இருக்கும். அதுபோன்றதொரு ஆரவாரம் பகல் நேரத்துக் கடைவீதிகளில் எழுகிறது.

சில பத்தாண்டுகளுக்கு முன்பு வரையிலும், நாஞ்சில் நாட்டில் திருமணம் முடிந்த மறுநாள் 'ஏழாம் நீர் சடங்கு' என்னும் விளையாட்டு நிகழ்ந்தது. அத்தான் கொழுந்தி முறையில் உள்ள ஆண்களும், பெண்களும் மஞ்சள்நீர் ஊற்றி விளையாடுவார்கள். அந்த ஏழாம்நாள் சடங்கு என்பதுகூட இப்பாடல் குறிப்பிடும் திருவிழாக்களின் ஏழாம்நீர் சடங்கிலிருந்து வந்து தொடர்ந்திருக்கக்கூடும்.

**சேர நாடும், பாண்டிய நாடும்:**

''கொடும்பறைக் கோடியர் கடும்புடன் வாழ்த்தும்
தண்கடல் நாடன் ஒண்பூங் கோதை
பெருநாள் இருக்கை விழுமியோர் குழீஇ
விழைவுகொள் கம்பலை கடுப்பப் பலவுடன்''
(மதுரைக்காஞ்சி, வரிகள் 523-526)

பறைமுழக்கும் கோடியர் (கூத்தர்) கடல்நாடன் சேரமன்னனை சுற்றத்துடன் வாழ்த்துவர். சேரமன்னன் முன்பு பல கலைகளையும் கற்று அறிந்தோர் கூடிப் பலரும் விரும்பும் விதத்தில் தருக்கம் செய்வர். அதுபோன்று மதுரை நகரின் நால்வகைத் தெருக்களிலும் ஆரவாரம் இருந்தது. புலவர் மதுரை நகர் கடைவீதிகளைப் புகழ்வதற்கு சேரமன்னனின் அரசவையை உவமை கூறுகிறார். புலவர்கள் தமிழ் மண்ணுக்குச் சொந்தமானவர்கள், மன்னனுக்கு அல்ல என்பதை இவ்வரிகள் உணர்த்துகின்றன.

இவைதவிர, அந்தியில் சிவன், திருமால், செவ்வேள் ஆகியோருக்கு நடத்தப்படும் பூசையில் முழங்கும் இசைக்கருவிகள் எழுப்பும் ஓசை, அந்திக்கடையின் ஆரவாரம், வெறியாட்டு, குரவைக்கூத்து காரணமாக எழும் ஓசைகள், வைகறையில் வேதம் ஓதும் ஓசை, மருதப்பண் எழுப்பும் ஓசை போன்று இன்னும் பலவகையான ஓசைகள் மதுரை மாநகரில் கேட்கக்கூடியனவாக இருந்தன.

**புகார்ப் பட்டினத்துக் கடைத்தெருவில் எழுந்த ஓசைகள்:**

பாண்டிய நாட்டில் மதுரை நகர் உள்நாட்டு வணிகத்திற்குச் சிறந்து விளங்கியதுபோலவே சோழநாட்டில் புகார் நகரில் வெளிநாட்டுவணிகம் சிறப்புற விளங்கியது. புகார் நகரத்துச் சிறப்புக்கள் 'பட்டினப்பாலை'யில் செறிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

''வெறியாடு மகளிரொடு செறியத் தாஅய்க்
குழல்அகவ யாழ்முரல

முழவு அதிர முரசுஇயம்ப
விழவுஅறா வியல்ஆவணத்''

(பட்டினப்பாலை, வரிகள், 155-158)

செவ்வேளை (முருகனை) வழிபட்டு வெறியாடும் மகளிர், வங்கியம் இசைக்க, குழல் ஒலிக்க, யாழ் முரல, முழவுகள் அதிர மக்கள் விழா எடுத்தனர். புகார் நகரத்துக் கடைத்தெருக்கள் இடையறாது விழாக்கள் நடந்துகொண்டிருக்கும் அகலமான தெருக்களாக இருந்தன.

**ஓசைகள் அன்றும் இன்றும்:**

முன்பெல்லாம் சிற்றூர்களில் ஓலை வீடுகள், ஓட்டுவீடுகள், ஒன்றிரண்டு காரை வீடுகள் இருந்தன. வீட்டிற்குச் சுற்றுச்சுவர் இருக்காது. அப்படி இருந்தால் முழங்கால் உயரத்தில் மண்சுவர்கள் இருந்தன. மகிழ்ச்சியோ, துக்கமோ ஒருவீட்டில் நிகழ்வது அண்டை வீடுகளுக்கும் தெரிந்திருந்தது. அடுப்புப் பற்றவைக்க கங்குவாங்க, சுண்டக்கறி வாங்க, உறைமோர் வாங்க, சுண்ணாம்பு வாங்க என்று பெண்கள் வேலி (கட்டைமண்சுவர்) தாண்டுவார்கள். அன்றைய காலத்தில் யாரும் அநாதையாக உணர்ந்ததில்லை. என்னதான் சண்டைகள் இருந்தாலும், முதியவர்களையும், குழந்தைகளையும் வெறுப்பின்றி ஆதரித்தார்கள். ஒருவீட்டில் பேசியது மற்ற வீடுகளுக்கும் கேட்டது.

குழந்தை பிறந்த வீடு, பெண்குழந்தை வயதுக்குவந்த வீடு, திருமணவீடு, இழவு வீடு என்று அனைத்திலும் மற்றவர்கள் பங்களிப்பு இருந்தது. வீட்டுமுற்றத்தில் பெண்கள் அமர்ந்து பாடுபேசினால், இளையவர்களும், பெரியவர்களும் ஊர்ப்பொது இடங்களில் அமர்ந்து பேசினார்கள். அம்மி அரைக்கும் ஓசை, நெல் குத்தும் ஓசை, அவல் இடிக்கும் ஓசை, ஆடு மாடுகள் எழுப்பும் ஓசை, மழைக்காலங்களில் தவளைகள் கூட்டாக எழுப்பும் ஓசை, என்று அனைத்துவிதமான இயல் ஓசைகளும் கேட்டன. ஆனால் இன்று ஒற்றைக்குடும்பங்களாக மாற்றம்கண்டு, ஆளுயரச் சுற்றுச்சுவர்களுடன் தனித்தனி வீடுகளில் அடைபட்டு, தொடர்பற்று மனிதர்கள் வசிக்கிறார்கள்.

அன்றுவிவசாயமும்,ஆடுமாடுவளர்ப்பும் மக்களின் முதன்மைத்தொழில்களாக இருந்தன. ஆடு மாடுகள் எழுப்பும் ஓசை, மாடுகளுக்குத் தண்ணீர் காட்டும்போது, புல், வைக்கோல் போடும்போது, அவற்றை மேய்ச்சலுக்கு அனுப்பும்போது எழும் ஓசைகள், வயலுக்கு வண்டிகளில் உரம் அடித்தல், தண்ணீர் பாய்ச்சுதல், உழுதல், நடுதல், களையெடுத்தல், அறுவடை செய்தல், அடித்துத்தூற்றி நெல்லை வீடு கொண்டுவந்து சேர்த்தல் ஆகிய ஒவ்வொன்றிலும் ஆண்களும், பெண்களும் எழுப்பும் ஓசைகள் அன்று வழக்கமாகக் கேட்கக்கூடியனவாக இருந்தன..இன்றைய வேளாண்மை முற்றிலும் இயந்திரங்கள் சார்ந்ததாக மாறிவிட்டன. இயந்திரங்களின் இரைச்சல் கூடி, மனிதர்களின் உரையாடல் குறைந்துவிட்டது.

மிக்சி, கிரைண்டர், துணிதுவைக்கும் இயந்திரம் என்று வீட்டிற்குள்ளும் இரைச்சல். வீட்டிற்கு வெளியேயும் இயந்திரங்கள் அதிக அளவில் புழக்கத்திற்கு வந்துவிட்டதால் அவை எழுப்பும் இரைச்சல்.

மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் குலவை ஓசையும் இல்லை, துக்கத்தை வெளிப்படுத்தும் அழுகை ஓசையும் இல்லை. ஒலிபெருக்கிகள் அந்த வேலையைச் செய்கின்றன. வீட்டிற்குள்ளும் இரைச்சல், வீட்டிற்கு வெளியிலும் இரைச்சல். எங்கு சென்றாலும் ஒலிபெருக்கிகள் உச்சத்தில் முழங்கும் இரைச்சல். வரைமுறையற்ற ஒலிபெருக்கிகளின் பயன்பாடுகளுக்கு ஆன்மிகமும், அரசியலும் முதன்மையான காரணிகளாக விளங்குகின்றன.

இன்று மனிதர்கள் இயந்திரங்களாக மாறிவருகிறார்கள். மனிதத்தன்மையை முற்றிலும் அறுத்தெடுத்து, உணர்வுகளற்றப் பிண்டங்களாக மாற்றும் 'செயற்கை அறிவு' தொழில்நுட்பமும் வந்துகொண்டிருக்கிறது. இன்றைய மனிதர்களின் வாழ்வில் போலித்தனங்களும், செயற்கையும் அதிக அளவில் ஊடுருவிவிட்டன. அதனால்தான் இயற்கையை அழிப்பதுபற்றிய எவ்வித குற்ற உணர்ச்சியும் இல்லாமல் இருக்கிறோம். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தத் தமிழர்களின் வாழ்வு பெரிதும் இயற்கை சார்ந்ததாக இருந்துள்ளதை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. அவர்கள் இயற்கையை நேசித்தார்கள். எதிர்காலதலைமுறையினருக்காக இயற்கையை அழிக்காமல் விட்டுச் சென்றார்கள். ஆனால் நாம்?

●

நினைவுகள்

# இடுப்பு வாரும் கருப்பு பின்னித்துண்டும்

## கலைபாரதி

அப்பாவாகும் வரை தெரியவே இல்லை அப்பாவின் அருமை .தெரியும் போது அப்பா அருகில் இல்லை. வாழும் காலத்தில் அப்பா என்னவாக இருந்தார் என்றால் எல்லாமுமாக இருந்தார் என்று தான் சொல்லவும் தோன்றுகிறது. தந்தையோடு கல்வி போகும் என்று சொல்வார்கள். என்னைப் பொருத்தவரை அவ்வாறு போகவில்லை. இன்றுவரையிலும் தொடர்கிறது .அதனை சாத்தியமாக்கியது அம்மாவின் பேருழைப்பு என்பது சத்தியமான உண்மை.



ஈதலும் இசைபட வாழ்தலும் அப்பாவிற்கான வாழ்வியல் சாட்சியங்கள். ஒன்றரைவேலி சொந்த நிலம். முப்பது மாடுகள்.அதனைப் பார்த்துக்கொள்ள அதாவது கொல்ல குடிகாட்டு வேலைக்கு மூன்று ஆட்கள் .அதில் ஒருவரான ராசி அண்ணனுக்கு அப்பா செய்து வைத்த திருமணம். சாதி சனங்களுக்கு மனமு வந்து அள்ளிக் கொடுத்தது. எல்லோருடனும் அனுசரணையாக பழகுவது என்கிற பெருமித வாழ்வு அப்பாவின் வாழ்வு.

சின்னப்பய வாத்தியாருக்குத்தான் படிக்கணும். எவ்வளவு சத்தியமான வார்த்தை. அப்பாவின் வாய்ச்சொல் அப்படியே பலித்தது. ஆனால் பார்ப்பதற்கு அப்பாதான் இல்லை.

அப்பா வாய்விட்டு அழுதும் நான் பார்த்திருக்கிறேன். ஒன்று அப்பாவின் தங்கை எனது அத்தை இறந்தபோது. மற்றொன்று அப்பாவின் நண்பர் ராமு மாமா மரணித்தபோது. துக்கத்திற்குப் போய்விட்டு வீட்டுக்கு வந்த பிறகும் கதறி கதறி பெருங்குரலெடுத்து அப்பா அழுததை இப்போது நினைக்கும் போதும் கண்களின் ஓரத்தில் கண்ணீர் துளிர்க்கின்றது.

உள்ளபடியே அப்போதைய வாழ்வு பெருமித வாழ்வு தான். வறுமையின் சுவடுகள் துளிகூட நெருங்காத அற்புதமான வாழ்வு அது. .அதற்கு அடிப்படையானது அப்பாவின் சிங்கப்பூர் புலம்பெயர் வாழ்வு. அப்பாவுக்குப் பின்னரும் எத்தனையோ பேர் வெளிநாடுகளுக்குப் போய் வர இருந்தாலும் ஊரில் சிங்கப்பூரார் என்கிற அடைமொழி அப்பாவுக்கு மட்டும் தான் உண்டு .அது அப்பாவின் அடையாளமாகவும் மாறிப் போயிருக்கின்றது.

ஊரில் நடக்கின்ற நல்லது கெட்டது அனைத்திலும் அப்பாவின் தலையீடு இருக்கவே செய்யும். வயல் உழவுக்கு மாடு வேண்டுமா? மருத்துவமனைக்கு செல்ல வண்டி வேண்டுமா.?. கல்யாணம் காட்சி நல்லது கெட்டது என்று அனைத்திலும் அப்பாவின் உதவி அனைவருக்குமே உண்டு. உறவுகள் நண்பர்கள் ஊர்க்காரர்கள் என்று யாராக இருந்தாலும் அள்ளிக் கொடுத்த கை அவர்களுடையது.

அப்பாவுடன் என் சிறு வயது அனுபவம் ஒன்று நினைவுக்கு வருகிறது. நான்காம் வகுப்பு ஆசிரியர் விசுவநாதன் பாடம் நடத்திக் கொண்டிருக்கிறார் .தமிழ்ப்பா பாடம் .அந்தப்பாடம் கூட இப்போதும் நினைவில்...

முன்பொருநாளில் ஒரு பொழுது
மூதூர்தனிலே ஒருவணிகன்
பொன்னன் என்பது அவன் பெயராம்
பொருள் மிக சேர்த்து வாழ்ந்திருந்தான்
........ .........
இந்தப்பெரிய மரத்தினிலே
அந்தப் பெரிய பழம் இருந்தால்
இந்த நேரம் என் தலை தான்
ரத்தம் வடிய பிளந்ததிருக்கும் ..

பாடம் போய்க்கொண்டிருக்கிறது

.அப்பா கூப்பிடுகிறார்.ஆசிரியரிடம் முடிவெட்டி விட்டு அனுப்பி விடுகிறேன் என்று. போகாமல் அடம்பிடித்த என்னை ஆசிரியர்தான் கட்டாயப்படுத்திப் போகச் சொல்கிறார்.கடைக்குச்சென்று முடிவெட்டி விட்டுதிரும்பவும் வகுப்பறைக்கு வந்த நான் தேம்பித் தேம்பி அழுகிறேன். ஏன் என்று ஆசிரியர் கேட்டதற்கு பாடம் போய்விட்டது என்று பதில் சொல்கிறேன். இன்று வரை எனக்குப் புரியவில்லை.. அது படிப்பா..? நடிப்பா..? என்று.

ஒருமுறை இடும்பாவனம் அத்தாச்சி அவங்க நகையை அடகு வச்சி தரச் சொல்லி உதவி கேட்டு இருக்கிறார்கள். அப்பாவும் மன்னார்குடி இந்தியன் வங்கியில் நகை அடகு வைத்து பணம் கொடுத்து இருக்கிறார்கள். ஒரு ஆறு ஏழு மாதங்கள் கழித்து நகையை திருப்பிக் கொண்டு பாலாஜி பேருந்தில் கம்பியை எக்கிப்பிடித்து நின்று கொண்டு வரும்போது இடுப்பு வாரில் இருந்த நகையை எவனோ திருடிவிட்டான். அப்புறம் என்ன ..நகைக்கு பதிலாக 100 குழி வயல் சாகுபடிக்கு கொடுத்து.. அப்புறம் புதிதாக நகையை எடுத்துக் கொடுத்து.. இதுபோன்ற ஏராளமான கொடுத்ததுகளும் அப்பாவின் வாழ்வில் நிறைய உண்டு.

நன்றாக போய்க் கொண்டிருந்த எங்கள் வாழ்வை எண்பதுகளில் வந்த பெரு வெள்ளம் ஒன்று புரட்டிப் போட்டது. 30 மாடுகளில் ஆறு ஏழு மாடுகள் ஒரே நாளில் ஒரே நேரத்தில் இறந்துவிட அப்போதிருந்தே கஷ்ட காலமும் தொடங்க ஆரம்பித்தது. இருந்த போதிலும் சிரமம் எங்களை நெருங்க விடாமல் தான் அப்பாவும் அம்மாவும் பார்த்துக் கொண்டார்கள்.

ஆனாலும் அப்பா இன்னும் கொஞ்ச காலம் எங்களோடு இருந்திருக்கலாம். அப்பாவின் மரணம் அநியாய மரணம் தான். பணியின் பொருட்டு நகரம் நோக்கி இடம் பெயர்ந்தபோது என் உடமையாக நான் வீட்டிலிருந்து எடுத்து வந்தது அப்பாவின் நினைவாக அவரது இடுப்பு வாரும் கருப்பு பின்னித் துண்டும்.

இன்றோடு 32 ஆண்டுகள். இன்றும் அப்பாவின் இடுப்பு வாரையும் அவரது கருப்பு பின்னித் துண்டையும் தொட்டுத் தடவிப் பார்த்து நீவிக்கொடுத்து நகர்கிறது இன்றைய பொழுது... ●

---

கவிதை

# காதல் பெருமழை



விழி முகில்
மனம் நிலம்
காதல் பெருமழை..

ஏதுமறியாத என்னை
பச்சை மண்ணை
விதவிதமாய் வனைக்கும்
காதல் குயத்தி நீ..

உன் விழிகள்
மேய.. மேய..
காத்திருந்து முளைக்கும்
அருகு நான்..

ஈரம் வற்றிப் போன
அறுவடைநிலத்தில்
தப்பு விதையாய்
பிழைத்துக் கிடக்கிறேன்

வாடிய பயிரைக்
கண்டபோதெல்லாம்
வாடிய நீ
ஓடியே வருவாய் என..

நான் பாறை
நீ விதை
காதல் கோடைமழை
நான் வழிவிட வேண்டும்
நீ வேர்விட வேண்டும்
இதுதான் விதி..
மனப்பூ மணக்கும்
இதுவே கதி..

மழைப்பாடகன் நான்..
காதல் மழைக்காலம் இது..
மழைப்பாட்டினால்
குளிப்பாட்டுகிறேன்
உன்னை..
அது உயிர்ப்பாட்டு..

இடங்காண்கோட்டை
சிவகுமார்

சிறுகதை

# ஆவர்த்தனம்

## மீனாசுந்தர்

தரையில் கொட்டிக் கிடந்த புங்கன்மர நிழலில் வண்டியை நிறுத்திவிட்டு உள்ளே சென்ற பரந்தாமனைக் கதவுக்கு எதிரிலிருந்த சன்னல் காற்று தழுவிக் கொண்டது. வியர்த்து கசகசத்திருந்த உடம்பிற்கு அது அவ்வளவு ரம்மியமாய், சுகமாய் இருந்தது. அந்தச் சிலுசிலுப்பை அனுபவித்துக் கொண்டார் பரந்தாமன். அகலவாக்கிலிருந்த அந்த அறையின் மையமாய்ச் செவ்வக வடிவில் பெரிய மேசையொன்றும் அதனைச் சுற்றி வரிசை கட்டியிருந்த இரும்பு நாற்காலிகளும் வெறிச்சோடிக் கிடந்தன. மேசையில் அந்த மாதத்தில் வெளிவந்த மாத இதழ்களும், வார இதழ்களும், அன்றைய நாளிதழ்களும் கலைந்து கிடந்தன. தனக்கு முன் பலரும் வந்திருக்கக் கூடும். படித்தவர்கள் கலைத்துப் போட்டிருக்கலாம். நூலகங்கள் முடியும் தருணத்தில் நூலகர் எல்லாவற்றையும் ஒழுங்கு செய்து வகைபிரித்து அடுக்கி வைப்பதைப் பலமுறை பார்த்திருக்கிறார் பரந்தாமன்.

பரந்தாமன் நூலகருக்கான இருக்கையை நோக்கினார். அதிலும் ஆளில்லை. நூலகர் இயற்கை உபாதையைக் கழிக்க வெளியில் சென்றிருப்பாரென நினைத்துக் கொண்ட பரந்தாமன், இரும்பு நாற்காலியொன்றில் தன்னைப் பொருத்திக் கொண்டு அமர்ந்தார். அவருக்கு எதிரில் கிடந்த அன்றைய நாளிதழலொன்று என்னை எடுத்து வாசியுங்கள் என்பதைப் போல அவரைப் பார்த்துப் படபடத்தது. எடுத்துப் பிரித்த போது, இந்தியத் தேர்தல் ஆணையம் பாராளுமன்ற தேர்தலை நடத்துவதற்குத் தயார் நிலையில் இருப்பதாக அறிவிப்பு செய்திருந்ததைப் பார்த்து விவரங்களை அறிய செய்திக்குள் மூழ்கினார்.

தேர்தல் தேதி விரைவில் அறிவிக்கப் படுமென்றும், தேர்தல் நியாயமாகவும், நடுநிலையோடும் நடத்தப்படுமென்றும், யாராவது தவறிழைக்க முற்பட்டால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தயவுதாட்சண்யமில்லாமல் தண்டனை வழங்கப்படுமென்றும் எப்போதும் போல இப்போதும் தேர்தல் ஆணையம் எச்சரிக்கை செய்திருந்ததைப் படித்து பரந்தாமன் உதட்டில் மெலிந்த புன்னகை நெளிந்தோடிற்று. அதை வெளியில் சிந்திடாமல் தனக்குள்ளாகவே விழுங்கிக் கொண்டார்.

பரந்தாமனுக்கு சொந்த அலுவலக மொன்றில் பணியாளராக ஊர் முருகன் குடியில் கிடைத்த தன் வேலை என்றாலும் கல்வித்துறை நிமித்தம் மதுரைக்குக் குடியேறியவர், அங்கேயே வீட்டைக் கட்டி நிலைபெற்று விட்டார். முருகன்குடியில் அவரின் பேர் சொல்ல பூர்விக வீடிருந்தது. பெற்றோருக்கு அவர் ஒரே பிள்ளையென்பதால் அவர்கள் போய்ச் சேர்ந்த பிறகு, இவரே அனைத்தையும் பார்க்க வேண்டி வந்தது. கொஞ்சம் தோட்டமும் விவசாய நிலமும் முருகன்குடியில் பரந்தாமனுக்குப் பெற்றோரின் சொத்துகளாய் வந்து சேர்ந்திருந்தன. நகர விரிவாக்கத்தில் இவரின் நிலத்தைச் சுற்றி மனைகள் போடப்பட்டு நிலத்தின் விலை எகிறி நின்றாலும் தனது நிலத்தைக் காவு கொடுக்க பரந்தாமன் தயாரில்லை. அதில் விவசாயம் தான் செய்வேனென இன்னமும் ஒற்றைக்காலில் நிற்கிறார். ஆகவே, கால இடைவெளியில் அவர் முருகன்குடிக்கு வந்து செல்வதை வழக்கமாக்கி வைத்திருந்தார். இரண்டு ஆண்டுகளாய் உடல்சோர்வு அதிகமாகவிருப்பதால் நேரடி விவசாயத்தைத் தவிர்த்து நிலத்தைப் போக்கியத்திற்குக் கொடுத்து விட்டதால், ஆறு மாதத்திற்கு ஒருமுறையோ அல்லது வருடத்திற்கு ஒருமுறையோ வர முடிந்தாலே பெரிது என்றாகி விட்டது.

வருகை தரும் காலங்களில் ஒரு வார காலமாவது ஊரில் தங்கிவிடுவார். தன் பால்ய நண்பர்களைப் பார்த்து அலாவலாவுவார். உறவினர் வீடுகளுக்குச் சென்று வருவார். ஊரையும் ஆசைதீரச் சுற்றிப் பார்ப்பார். என்னயிருந்தாலும் பிறந்த ஊர் மீதான பாசம் அலாதியானது என்பதைச் சொல்லாமல் சொல்லும் பரந்தாமனின் நடவடிக்கைகள். அங்கிருக்கும்

நூலகத்திற்கும் தவறாமல் சென்று வருவதை வழக்கமாக்கி வைத்திருந்தார் அவர். நூல் வாசிப்பு அவர் சிறு பிள்ளையாக இருக்கும் போதே தொற்றிக் கொண்ட பழக்கம். அம்மாவின் வழியாக அவருக்குள் புகுந்த கொண்ட ஆத்மராகம் அது. வாசிப்பை விட முடியவில்லை என்பதை விட ஓய்வுபெற்ற அவருக்கு நூலகமே இப்போது ஆகப்பெரிய அணுக்கத்துணை. நூலகத்தின் புரவலர் பட்டியலில் கூட மூன்றாவது பெயராக பரந்தாமன் பெயர் பொறிக்கப்பட்டிருந்தது. ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன்பு நூலகத்திற்கு ஒருமுறை வந்தபோது முன்பிருந்த நூலகர் கேட்டுக் கொண்டாரெனச் சேர்ந்து கொண்டார். ஆயிரம் ரூபாய் பணம் செலுத்திய விபரமும் பெயருடன் சேர்த்து எழுதப்பட்டிருந்தது. அதையொரு முறை பார்த்துக் கொண்டார். முகத்தில் அப்படியொரு விவரிக்க முடியாத பெருமித உணர்வு. மகிழ்வின் பரவல்.

நூலகப் புத்தகங்கள் அடுக்கப்பட்ட இடத்திலேயே நெடுநாட்கள் ஆழ்ந்த தியானத்திலிருப்பதைப் போல் தெரிந்தன. எவரும் தொட்டுத் தூக்கிக் கொஞ்சவில்லை போலும், முகங்களில் பவுடர் பூசிய புழுதிப் படிமம். ஒட்டடைப் பூச்சிகள் சௌகரியமாய் நூலாம்படையிழுத்து ஆடிக் கொண்டிருந்தன. ஒருவருமின்றி தனியாகத் திறந்திருந்த நூலகத்தின் அந்தப் பேரமைதிச் சூழல், பரந்தாமனை என்னவோ செய்தது. நூலகரை நெடுநேரமாய்க் காணவில்லையென்று யோசித்துக் கொண்டிருக்கும் போதே விடலைப் பையனொருவன் அலைபேசியில் மூழ்கியவாறு பாதையைக் கூடக் கவனிக்காமல் நடந்து வந்து நூலக வாசல்மேடையில் சரியாக ஏறுவதாக நினைத்து கதவில் மடாரென்று இடித்துக் கொண்டான். அப்போதும் அலைபேசியிலிருந்து அவன் கண்களை எடுக்கவில்லை. வலதுகையில் அலைபேசியைப் பிடித்தவாறு இடதுகையில் இடிப்பட்ட இடத்தைத் தடவி விட்டுக் கொண்டான்.

செய்தித்தாளில் மூழ்கியிருந்த பரந்தாமன் நிமிர்ந்து அந்தக் காட்சியைப் பார்த்தார். ''ஏந்தம்பி பாத்து வரக் கூடாதா?'' என்றவரின் குரலை அவன் சட்டை செய்யவில்லை. அக்கறையான அந்த வார்த்தைகளை அவன் அப்படி அலட்சியம் செய்வானென்று பரந்தாமன் எதிர்பார்க்கவில்லை. கிஞ்சிற்றும் தலையை நகர்த்தாமலும் நிமிர்த்தாமலும் அலைபேசியிலேயே மூழ்கிக் கிடந்த அவனுடைய தோரணை பரந்தாமனை வெகுளச் செய்தது. என்ன நினைத்தாரோ?! சற்று அமைதியடைந்து தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டார்.

வந்த பையன் பார்ப்பதற்கு ஒடிசலாகத்தான் இருந்தான். எலும்புகளைத் தோல் போர்த்தியது போல அப்படியொரு நோஞ்சான் உடல்வாகு. வெளிறிய நிறம். நீளமான கூரிய நாசி. மூக்கை உறிஞ்சிக் கொண்டேயிருந்தான். சைனஸ் பிரச்சனை இருக்கும் போல என நினைத்துக் கொண்டார் பரந்தாமன். வந்தவன் மின்விசிறியை சுழலச் செய்துவிட்டு நேராக நூலகர் இருக்கையில் போய் அமர்ந்து கொண்டான். நூலகரின் பையனாக இருப்பான் போலிருக்கிறதென நினைத்துக் கொண்டார் பரந்தாமன். அவசர வேலையின் போது நூலகர் தன் மகனை அமரச் செய்து வெளியில் சென்றதை முன்பொருமுறை முருகன்குடிக்கு வந்திருந்த போது பார்த்திருக்கிறார். ஆனால் முகம் மனதில் பதியவில்லை. இவன் புதியவன் போலத் தெரிந்தான். அவன் மூத்தவனாகவும் இவன் இளையவனாகவும் இருக்கலாமெனத் தன்னைச் சமாதானம் செய்து கொண்டார்.

வந்த நொடியிலேயே எதிரிலிருக்கும் மேசையில் தனது தலையைக் கவிழ்த்துப் போட்டுக் கொண்டான். தலைக்குக் கீழாக அலைபேசியை ஆடாமல் அசையாமல் வாகாகப் பிடித்துக் கொண்டான். அலைபேசியை மையமாகப் பிடித்தவாறே அவனது விரல்கள் அலைபேசியில் அங்குமிங்கும் பரபரவென ஓய்வின்றி இயங்கிக் கொண்டிருந்தன. ஏதோ இணைய விளையாட்டில் ஈடுபட்டிருப்பான் போலிருக்கிறது. கார்ப்பந்தயம் போல ஒன்றையொன்று முந்திச் செல்லும் சப்தம். அவனது முகமும் அகமும் அலைபேசி தரும் முடிவுகளுக்கேற்ப மாற்றம் காண்பதைப் பரந்தாமனால் உணர முடிந்தது. நெற்றியைச் சுருக்குவதும், பிறகு இயல்பாவதுமாய் அருகில் என்ன நடந்தாலும் தனக்குக் கவலையில்லை என்பதைப் போல அவனின் செயல்களிருந்தன.

பரந்தாமனுக்கு தனது வயதை மீறிய ஒரு பதற்றமும் சினமும் வெடித்துக் கொண்டு வந்தது. செய்தித்தாள்களில் கண் பூச்சிகள் மட்டுமே அங்குமிங்கும் அலைந்து மேய்கின்றனவே ஒழிய மனம் அடங்கவில்லை. அலைபேசியின் சப்தத்தை வேறு அவன் உச்சத்தில் வைத்திருந்தான். சப்தத்தை மீறிப் பரந்தாமனால் எதுவொன்றையும் வாசிக்க முடியவில்லை. திணறினார். பெரும் தொந்தரவாக உணர்ந்தார். பலரும் அமைதியாக அமர்ந்து வாசிக்க வந்துசேருமிடத்தில் இவன் இவ்வாறு அநாகரீகமாய் நடந்து கொள்வதை பொறுக்க முடியாமல் வாயைத் திறந்தார்.

“தம்பி...”

மெல்ல அழைத்துப் பார்த்தார் பரந்தாமன். அவனது செவியில் அச்சொல் சென்று சேர்ந்ததாவெனச் சந்தேகிக்கும்படி அவனது செயல்களிருந்தன. திரும்பவும் ஒருமுறை கொஞ்சம் சப்தம் கூட்டியழைத்துப் பார்த்தார். அவன் அசைவதாயில்லை. கருமமே கண்ணாக அவன் அலைபேசியில் மூழ்கிக் கிடந்தான். பொறுமையிழந்து இருக்கையிலிருந்து எழுந்து அவனுக்கு எதிரில் போய் நின்றார். அப்போதும் தனக்கெதிரே ஏதோ நிழலாடுகிறதே என்று கூட அவன் நிமிரவில்லை. பரந்தாமனுக்குச் சினம் உச்சத்திலேற அவனுக்கெதிரேயிருந்த மேசையைச் சற்று அழுத்தமாகவே தட்டினார். சப்தம் கேட்டு ஒரு நொடி நிமிர்ந்து பார்த்தவன். என்னவென்று கேட்காமலேயே மீண்டும் தலையைக் கவிழ்த்துக் கொண்டான். பரந்தாமன் திரும்பவும் மேசையைத் தட்டினார். அவன் நிமிர்ந்து “என்னங்க சார்?” என்று சிடுசிடுத்துக் கேட்டான்.

இது நூலகம் தம்பி' என்றார்.

“ஆமா..யாரு இல்லைன்னு சொன்னா?”

பரந்தாமனுக்கு அவனது அப்பாவித்தனமான பதிலைக் கேட்டுச் சிரிப்பு வந்து விட்டது.

“தெரியும் தம்பி. இது வாசிக்கிறதுக்குப் பொதுமக்கள் வர்ற இடம். இங்க சப்தம் போட்டு பேசக்கூடாதுன்னு விதியிருக்கு”

“இங்க யாரும் யாருகிட்டவும் பேசலயே” என்றான் திரும்பவும் எடக்காக.

“அடுத்தவங்ககிட்ட பேசல. ஆனா உங்க செல்லோட சப்தம் தாங்க முடியலை. ரொம்ப தொந்தரவா இருக்கு. எதையும் வாசிக்க முடியல. அதை நிறுத்தி வச்சிட்டு வீட்டுக்குப் போன பிறகு பாருங்க” என்றார்.

அவன் வைத்தகண் வாங்காமல் அவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

“அப்பா..எங்க போயிருக்காங்க?” என்றார் பரந்தாமன்.

அவன் அதற்கும் பதில் பேசவில்லை.

“செல்ல ஆப் பண்ணி வச்சிட்டு கொஞ்ச நேரம் நீங்களும் எதையாவது புத்தகத்தை எடுத்துப் படிங்க” என்றார்.

“எனக்குப் புத்தகம் படிக்க புடிக்காது” என்றான்.

“தொடக்கத்துல அப்படித் தான் இருக்கும். படிச்சிப் பாருங்க. ரொம்ப புடிக்கும்” என்றார் பரந்தாமன்.

அவன் எதையும் சட்டை செய்யவில்லை. என்ன நினைத்தானோ அவனுக்குக் கண்கள் கரைகட்டி நின்றன. அவன் விருட்டென இருக்கையிலிருந்து எழுந்து நூலகத்தை விட்டு அவனது வீட்டை நோக்கிப் பதட்டமாய் நடந்தான்.

***

பரந்தாமன் வீட்டிற்குச் செல்லலாமென நினைத்த நேர்த்தில் நூலகம் நோக்கி இரண்டு பெண்பிள்ளைகள் வந்தனர். அவர்களிருவரும் அங்கிருந்த பரந்தாமனை நூலகர் என்றெண்ணி வணக்கம் செய்தனர். அரசுப் பள்ளியில் ஆறாம் வகுப்பு படிப்பதாகவும் பள்ளி ஆண்டு விழாவை முன்னிட்டு நடைபெறும் கட்டுரைப் போட்டிக்குத் தயார் செய்ய புத்தகம் வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டிருந்தனர். பரந்தாமன் அவர்களிடம் தான் நூலகர் இல்லையென்றும், சிறிதுநேரத்தில் நூலகர் வந்து விடுவாரென்றும் தகவல் சொல்லி மேசையிலிருக்கும் புத்தகங்கள், நாளிதழ்களை வாசித்துக் கொண்டிருக்கும்படி அறிவுறுத்திக் கொண்டிருக்கும் போதே, பைக்கில் வந்து இறங்கிக் கொண்டிருந்தார் நூலகர் பொன்னுரங்கம். பின்னால் அலைபேசிப் பையன் கண்களில் கண்ணீர் வழிய அமர்ந்திருந்தான். விடுவிடுவென நூலகத்திற்குள் புகுந்த பொன்னுரங்கம் பரந்தாமனைப் பார்த்துச் சீறினார்.

“சார்.. உங்களுக்கெல்லாம் நாகரீகம்ன் னாலே என்னான்னு தெரியாதா?”

பரந்தாமனுக்கு அந்த வார்த்தைகள் என்னவோ செய்தன. இருப்பினும் பொறுமை காத்தார்.

''வந்ததும் வராததுமா என்னங்க சார் இப்படி தெரியாதவங்ககிட்ட பேசற மாதிரிப் பேசறீங்க?''

''தெரிஞ்சவங்ககிட்ட நடந்துகிற மாதிரியா நீங்க நடந்துருக்கீங்க? அவன் ஒரு சின்னப்பய. அவன் வயசென்ன? உங்க வயசென்ன? அவனைப் போயி வம்பிழுத்து இப்படிக் கதற விட்டா உங்ககிட்ட அப்பறம் எப்படிப் பேசறது?''

"நான் வம்பிழுத்தேனா?''

பரந்தாமன் அப்படிக் கேட்டதும் பொன்னுரங்கம் தன் மகனைப் பார்த்து வினவினார்.

''டேய்..உங்கிட்ட செல்லு பாக்கக் கூடாதுன்னு யாருடா சொன்னா?''

"இவரு தான்''

பரந்தாமனைப் பார்த்து கை நீட்டினான் அவன்.

"அப்பறம் என்ன சார்? இதுக்கு மேலயும் உங்களுக்கு என்ன வேணும்?''

''செல்லு பாக்கறது பாக்காதது அவங்கவங்க விருப்பம் சார். நூலகத்துல வந்து சப்தமா வச்சிக்கிட்டு பலதையும் பார்க்கிறப்ப மத்தவங்களுக்குத் தொந்தரவா இருக்கக் கூடாதுல்ல? அதத் தான் சொன்னேன்''

"உங்களுக்கு என்ன தொந்தரவு வந்திச்சி? நீங்க பாட்டுக்கு வாசிக்க வேண்டியது தான?''

"எப்படி சார் இப்படிப் பேச முடியுது உங்களால்? அங்க பாருங்க நீங்களே என்ன எழுதிப் போட்டிருக்கீங்க?''

அவர் காட்டிய இடத்தில், "அமைதி.. அடுத்தவருடன் பேசாதீர்கள், அலைபேசி பயன்படுத்தாதீர்கள். இவ்விடம் வாசிப்பதற்காக மட்டுமே'' என்று அறிவிப்புப் பலகையிருந்தது.

பொன்னுரங்கத்தால் எதுவும் பேச முடியவில்லை. இருந்தும் சமாளிக்கும் விதமாக, '' இருக்கு சார். எல்லா நேரத்துலயும் அதையே பிடிச்சிக்கிட்டு நிக்க முடியுமா?'' என்றார்.

''விதிமுறையெல்லாம் எங்களுக்கு மட்டும் தானா?''

பரந்தாமன் திருப்பிக் கேட்டார்.

"சார்..புரிஞ்சிக்கிடுங்க. காலையிலருந்து அவன் கால்ல விழாத குறை தான். வீட்டுல ஆயிரம் வேலையிருக்குங்க சார். அவன் பாட்டுக்கு எதையாவது பாத்துட்டுப் போறான். நீங்க புடிச்சிருந்தா இருங்க. இல்லன்னா எதுவும் புத்தகம் வேணும்ன்னா கூடத் தர்றேன் எடுத்திட்டுப் போயிப் படிச்சிட்டு வந்து கொடுங்க. தயவுசெஞ்சி அவங்கிட்ட எதுவும் வம்பு பண்ணிக்கிட்டு இருக்காதிங்க...''

பொன்னுரங்கம் கெஞ்சும் தொனிக்கு இறங்கி வந்திருப்பதைப் பரந்தாமன் அதிர்ச்சியாகப் பார்த்துக் கொண்டிருந்தார். திரும்பவும் பொன்னுரங்கமே பேசினார்.

எப்பவாவது வர்றீங்க? வந்தமா பே''னமான்னு இருங்க சார். இங்க உள்ளவங்க யாராவது உங்கள் மாதிரி கேக்கறாங்களா பாருங்க? அவனவனுக்கும் ஆயிரம் கஷ்டங்க சார். நீங்க நல்லபடியா ரிட்டயர்டு ஆயிட்டிங்க. பென்சன் வருது. எல்லாத்தையும் முடிச்சிட்டீங்க. வேற கவல எதுவுமில்ல. அதான் இதுலயெல்லாம் கவனம் செலுத்துறீங்கன்னு நெனக்கிறேன்''

பொன்னுரங்கத்திற்கு பரந்தாமன். என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் தடுமாறினார்.

''சார் என்னைய விட்டுத் தள்ளுங்க. இங்க பாருங்க சின்னப் புள்ளங்க படிக்க வருதுங்க. நீங்க உங்க வேலைய விட்டுட்டு வீட்டு வேலை செய்யறதுக்குப் போறது தப்பு. உங்க மகன கொண்டாந்து உக்கார வக்கிறதுமில்லாம இப்படித் தான் இருப்பேன்னு சொன்னா எப்படி சார்?''

கொஞ்சம் காட்டமாகவே கேட்டார்.

''அதையெல்லாம் கேக்கறத்துக்கு எங்களுக்கு அதிகாரிங்க இருக்காங்க சார். நீங்க கேக்க வேண்டாம்''

''நானும் இந்த நூலகத்தோட புரவலர்ங்க''

"இருந்திட்டுப் போங்க. அதுக்காக நீங்க போடுற சட்டத்துக்கெல்லாம் நாங்க ஆட முடியாது''

பொன்னுரங்கம் சட்டென முகத்தை முறித்துக் கொண்டார். பிறகு தன் மகனைப் பார்த்துச் சொன்னார்.

"டேய்..நீ போயி அங்க உக்காருடா'' என்று தனது இருக்கையைக் காட்டினார்.

பையன் சென்று அமர்ந்து கொண்டு திரும்பவும் அலைபேசியின் மீது விரல்களை ஓட விட்டான். பொன்னுரங்கன் தனது வீட்டை நோக்கி விட்ட வேலையைத் தொடர்வதற்காகச் சென்று கொண்டிருந்தார்.

பொன்னுரங்கத்திற்கு இரண்டு அண்ணன்கள். இருவரும் இரண்டு பிரதானமான அரசியல் கட்சிகளில் பொறுப்பிலிருந்தார்கள். இரண்டாவது அண்ணன் தான் தற்சமயம் அந்தப் பகுதியின் கவுன்சிலர். எல்லாவற்றிலும் அதிகாரம் செலுத்தும் குடும்பம். அடாவடிக்குப் பேர் போனவர்கள். பொன்னுரங்கன் எப்படியோ இந்த வேலைக்கு வந்து அமர்ந்தவர், உள்ளூரிலேயே பக்கத்துத்தெரு நூலகத்திற்கு பணி மாறுதல் வாங்கி வந்து அமர்ந்துகொண்டு வைத்ததே சட்டமென ஆடிக் கொண்டிருக்கிறார். மகனுக்குச் செல்லம் கொடுக்கிறேன் என்ற பெயரில் தவறாக வழிநடத்திக் கொண்டிருப்பதை உணரும் நிலையில் அவரில்லை. மகன் அவரை மீறி விட்டானென்பது அவனது நடவடிக்கையிலேயே தெரிந்தது. அலைபேசியின்றி இனி அவனால் ஒரு நொடியும் வாழ முடியாது என்றளவிற்கு அதீத மோகியாகிவிட்டான் அவன். எந்நேரமும் அதை நோண்டிக் கொண்டிருப்பதும், விளையாடுகிறேன் என்ற பெயரில் அலைபேசியின் வழியாக வன்மத்தையும், ஆக்ரோசத்தையும் தனக்குள் சிறிதுசிறிதாக இறக்கிக் கொண்டிருக்கிறான் என்ற ஆபத்தை உணராதவர்களை என்ன செய்ய முடியும்?

பரந்தாமன் தனக்குள் நொந்து கொண்டார்.

தங்கள் வேலைகளுக்கு இடையூறு செய்யாமல் பிள்ளைகள் இருந்தால் சரிதானென்று பெற்றோர்கள் அலைபேசிகளை தாரை வார்த்து விடுகிறார்கள். தொந்தரவு செய்யாமல் என்னவாவதுசெய்துதொலைக்கட்டுமென்ற யோசனைக்கு பொன்னுரங்கமும் அவரது மனைவியும் வந்து நெடுநாட்களாகி விட்டன. அவன் எல்லைமீறிப் போய்க் கொண்டிருப்பதை அவர்களால் கணிக்க முடியவில்லை. ஆகவே பிறர் சொல்லும் எந்தக் கருத்துகளையும் அவர்களால் ஜீரணிக்க முடியவில்லை.

பரந்தாமன் ஊரிலிருந்து மதுரைக்குக் கிளம்பி வந்து ஒருவாரக் காலம் வரையும் அந்தச் சிந்தனையாகவே இருந்தது. பொன்னுரங்கம் எடுத்தெரிந்து பேசியது ஒருபுறமிருப்பினும். பிள்ளையை இப்படி கண்ணுக்குத் தெரிந்து வீணடிக்கிறாரேயென்ற ஆதங்கம் வாட்டிற்று. செல்கிற நேரமெல்லாம் வாஞ்சையுடன் பேசியவர் தான். இந்த முறை இப்படி நடந்து கொண்டது மனத்துக்கு ஆற்றமுடியாத கஷ்டமாக இம்சித்தது. ஊரில் முக்கிய அரசியல் புள்ளிகள் என்றாலும் நூலகத்ததில் பணி புரியும் ஓர் அக்கறையுள்ள பணியாளராய் அவர் நடந்து கொள்ளவில்லையே என்ற பாதிப்பு பரந்தாமனுக்கு இல்லாமலில்லை. நூலகம், மருத்துவமனை,பள்ளி,வங்கிபோன்றபொது நிறுவனங்களில் பணிபுரிவோர் எவ்வளவு பொறுப்புடனும், கனிவுடனும் பணியாற்ற வேண்டியவர்கள். ஏன் பொன்னுரங்கம் அவ்வாறு நடந்து கொண்டார்? செய்கிற பணியின் உன்னதத்தை, மேன்மையை அறியாதவரா அவர்?

அதற்குப் பிறகு இரண்டொருமுறை சொந்த ஊருக்குச் சென்ற போதும் என்னவோ நூலகத்திற்குச் செல்ல வேண்டுமென்று பரந்தாமனுக்குத் தோன்றவில்லை. நினைவிற்கு வந்த போதும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டார். எதற்கு வீண் வம்பென்று தோன்றிற்று. வீட்டில் பல புத்தகங்கள் இன்னும் வாசிக்கப்படாமலேயே கிடக்கின்றன. எதற்காகத் தான் நாம் நூலகத்திற்குச் செல்ல வேண்டுமெனத் தன்னை ஆறுதல் செய்து கொண்டார்.

நெடுநாட்களுக்குப் பிறகு இந்தமுறை ஊருக்கு வந்திருந்த பரந்தாமனுக்கு பெரியநாயகியம்மன் கோவிலுக்குச் சென்றுவரத் தோன்றிற்று. அடுத்தத் தெருவிலிருந்த தன் தங்கையையும் பார்த்து வரலாமென முடிவுசெய்து மாலை வேளையில் புறப்பட்டுப் போனார். அம்மனைப் பார்த்து வணங்கி அவள் காலடியில் சாஷ்டாங்கமாய்ச் சரணடைந்து வந்தால் கிடைக்கும் மனநிம்மதியே தனிதான் என அவர் அவ்வப்போது நினைத்துக் கொள்வார். ஆலயத்திற்குள் சென்று, அம்மனைக் கண்டு வணங்கி நெற்றி நிறைய திருநீற்றையள்ளி பூசிக்

கொண்டு அருகிலிருந்த தெப்பக்குளத்துப் படித்துறையில் அமர்ந்து சற்று காற்று வாங்கலாமென வந்த போது எதிரில் வந்தார் பொன்னுரங்கம்.

உடலும் மனமும் தளர்ந்து காணப்பட்ட அவரைக் கண்டதும் பரந்தாமன் எதுவும் பேசாமல் தலையைத் தாழ்த்திக் கொண்டார். பரந்தாமனின் செயல் பொன்னுரங்கத்தை வெகுவாகப் பாதித்தது. அவர் விடவில்லை. தானாகவே வலியவந்து பேசினார்.

“சார் நல்லாருக்கீங்களா?”

“இருக்கேங்க”

பரந்தாமன் செயற்கையாய் ஒரு புன்னகையை உதிர்த்து விட்டு நகர முயன்றார். யாரைக் கண்டாலும் “வீட்டுல நல்லாருக்காங்களா? குழந்தைங்க சவுக்கியமா?” என இயல்பாய் குசலம் விசாரிப்பவர் பரந்தாமன். இப்போது பழக்கதோசத்தில் அவ்வாறு கேட்டுவிடக் கூடாதெனத் தன்னைச் சிரமமப்பட்டு அடக்கிக் கொண்டார். பொன்னுரங்கம் நெருங்கி வந்து பரந்தாமனைக் கையெடுத்து வணங்கி, பின் அவரது இரு கைகளையும் கோர்த்து இறுக்கிக் கொண்டார். பரந்தாமன் இணங்க முடியாமலும் மறுக்க முடியாமலும் திணறினார்.

‘‘மன்னிச்சிடுங்க சார். என்னைய மன்னிச்சிடுங்க. அன்னிக்கி உங்கள் நான் அப்படிப் பேசியிருக்கக் கூடாது”

பரந்தாமன், அவரின் சொற்களைக் கேட்டுப் பதறினார்.

‘‘அட.. மன்னிப்பு கேக்ற அளவுக்கு என்ன நடந்து போச்சி? அதை இன்னமுமா நினைவில வச்சிருக்கீங்க. நான் அப்பவே மறந்திட்டேன் அதை”

இடம் பொருள் கருதிப் பொய் பேசினார் பரந்தாமன்.

‘‘இல்ல சார்..நான் அப்படிப் பேசியிருக்கக் கூடாது.பேசியிருக்கக் கூடாது..”

சொன்னதையே திரும்ப திரும்ப சொல்லிக் கொண்டிருந்தார் பொன்னுரங்கம்.

ஏன் அவ்வாறு நடந்து கொள்கிறாரென்று பரந்தாமனுக்கு உள்மன வாதிப்பாகவிருந்தது. பரந்தாமன் இயல்பாகி விட்டதைப் போல அவரிடம் காட்டிக் கொள்ள முயன்றார்.

‘‘சரி.. அதை விடுங்க சார். வீட்டுல நல்லாருக்காங்களா? பையன் எப்படியிருக்கான்?”

பரந்தாமன் கேட்டது தான் தாமதம்.

பொன்னுரங்கத்தின் கண்களிலிருந்து நீர்ச்சரம் பொலபொலவென உதிர்ந்தன.

பரந்தாமன் சட்டெனப் பதறிப் போனார்.

“அட..என்னங்க சார்? ஏன் இப்படிக் கலங்கறீங்க?”

“வீணாப் போயிட்டேன் சார்.. வீணா போயிட்டேன். இந்த பெரியநாயகியும் கண்ணத் தொறக்க மாட்டேங்கிறா. அவ என்னக்காவது கண்ணத் தொறக்க மாட்டாளான்னு தான் வாரந்தவறாம குடும்பத்தோட இங்க வந்திட்டு இருக்கோம்”

பரந்தாமனுக்கு எதுவும் புரியவில்லை. அவருடன் உரையாடியவாறே நடந்து சென்று கொண்டிருந்த பொன்னுரங்கம் வடக்குவாசல் பக்கமாய் அழைத்துச் சென்றார்.

வடக்குவாசல் படிக்கட்டுகளில் அமர்ந்திருந்தனர் பொன்னுரங்கத்தின் மனைவியும் மகனும்,இவர்களைக் கண்டதும் மனைவி எழுந்து நின்று கையெடுத்தார். பதில் வணக்கம் சொல்லிவிட்டு பரந்தாமன் அவரைக் கவனித்தார். அவரது முகத்திலும் அப்படியொரு சோகம் ததும்பும் வாட்டம். அருகில் அமர்ந்திருந்த மகன் எந்தச் சிந்தனையுமின்றி கையில் அலைபேசியிருப்பதைப் போலக் கற்பனை செய்துகொண்டு வெறுங்கையால் விரல்களைக் காற்றில் ஒட்டிக் கொண்டிருந்தான். முகத்தில் அப்படியொரு ஆக்ரோசம். மெலிந்த புன்னகை. இவர்கள் எவரையும் கவனிக்கவோ, இவர்களின் சொற்களைக் கேட்கும் நிலையிலோ இல்லை அவன்.

“ந்தக் கொடுமையைப் பாருங்க சார்..”

பொன்னுரங்ம் திரும்பவும் குலுங்கினார். அவரது மனைவி முந்தானையைச் சுருட்டி வாயைப் பொத்திக்கொண்டு கேவினார். என்ன ஆறுதல் சொல்வதென்று தெரியாமல் பரந்தாமன் தவித்தவாறே கோவில் கோபுரத்தைப் பார்த்துக் கையெடுத்து நின்றார். ●

நகர்வலம்

# அம்ரா பக்கங்கள்







‘இ.பி.கோ.326–ஆவது பிரிவின் கீழும் மதுவிலக்கு சட்டத்தின் கீழும் புதுக்கோட்டையில் பிரபல நடிகர் கைது, மது அருந்திய குற்றத்திற்காகவும், தனது சொந்த வீட்டில் மதுவகை பாட்டில்கள் வைத்திருந்ததற்காகவும், மது அருந்தி பக்கத்து வீட்டுக்காரர்களான செல்லையா, சந்தானம் பிள்ளை ஆகியோரிடம் சண்டைக்குச் சென்று அவர்களுக்குப் பலத்தக் காயத்தை ஏற்படுத்தியதற்காகவும் கைது செய்யப்பட்டார்' என்று அந்த நாளில் ஒரு சினிமா பத்திரிகையில் செய்தி வந்தது.

யார் அந்தப் பிரபலமான நடிகர்? அன்றைக்கு சூப்பர் ஸ்டாராக விளங்கிய பி.யூ.சின்னப்பாதான் அந்தப் பிரபல நடிகர். புகழேணியின் உச்சியில் இருந்த சின்னப்பா, தான் சம்பாதித்த காசில் புதுக்கோட்டை நகரமெங்கும் வீடுகளாக வாங்கிக் குவித்திருந்தார். ஒரு கட்டத்தில் புதுக்கோட்டை சமஸ்தானத்து அரசர், ‘‘இனி சின்னப்பா புதுக்கோட்டையில் வீடு எதுவும் வாங்கக்கூடாது,’’ என்று கட்டளை பிறப்பிக்கும் அளவுக்கு நிலைமை கட்டுக்கடங்காமல் போனது. அவ்வளவு வளமையில் வாழ்ந்தவர் பி.யு.சின்னப்பா!

மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் மாதம் 15 ரூபாய்க்கு வேலைக்குச் சேர்ந்தவர் பி.யு.சின்னப்பா. பிறகு ஜூபிடர் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்து டைரக்டர் பி.கே. ராஜா சாண்டோ இயக்கிய 'சந்திரகாந்தா' படத்தில் இணை கதாநாயகனாக சினிமா உலகத்திற்குள் நுழைந்தார்.

1940–இல் மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரித்து வெளிவந்த 'உத்தமபுத்திரன்' என்ற படம் சூப்பர் ஹிட் இதனால் சின்னப்பாவும் சூப்பர் ஸ்டார் ஆனார். சின்னப்பாவிற்கு சினிமாவிற்குள் வந்த காலத்திலிருந்தே மதுப்பழக்கம் இருந்திருக்கிறது. பிறகு அவரது புகழ் வளர வளர மதுப்பழக்கமும் வளர்ந்துவிட்டது.

முடிவு, புதுக்கோட்டையில் தனது நண்பர்களுடன் ‘மணமகள்’ படத்தைப் பார்த்துவிட்டு வீடு திரும்பிய சின்னப்பா அன்றிரவே சென்னைக்குக் கிளம்பிக் கொண்டிருந்தபோது, ‘மயக்கமாக வருகிறது’ என்று ரத்தம், ரத்தமாக வாந்தியெடுத்து மயக்கமடைந்தார். அடுத்த அரை மணி நேரத்தில் அவரைப் பரிசோதித்த டாக்டர், கையை விரித்து விட்டார். ஆமாம், மிதமிஞ்சிய குடியால் பி.யு.சின்னப்பா

இறந்து போனார். அப்போது அவரது வயது 36 தான்! இன்னும் நீண்ட காலம் திரைப்படத் துறையில் கோலோச்சி இருக்கவேண்டிய பி.யு.சின்னப்பா உயிரைக் கொண்டு போனது, மதுக்குடியே!

1947 ஆகஸ்ட் மாதம் 15ஆம் தேதி இந்தியா சுதந்திரம் அடைந்தது. இதை நாட்டு மக்களுக்குப் பிரகடனப்படுத்த பிரமாண்டமான சுதந்திர விழா டெல்லியில் நடந்தது. அந்த விழா மேடையில் சுமார் 10 நிமிடம் மட்டுமே தனது நாதஸ்வரத்தை வாசித்துக்காட்டினார் டி.என்.ராஜரத்தினம் பிள்ளை. இதைக் கேட்டு இந்திய முதல் பிரதமர் நேரு அசந்து போனார். இவரது நாதஸ்வர இசைக்குப் பிறகுதான் இந்திய சுதந்திரப் பிரகடனத்தையே நேரு வாசித்தார். அப்போது அவரிடம் நேரு "உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார். "ஊரில் திருடர் பயம் அதிகமாக இருக்கிறது. எனவே கரண்ட் வேண்டும்" என்று கேட்டார் ராஜரத்தினம் பிள்ளை. இதைச் சொல்லிவிட்டு டெல்லியிலிருந்து புறப்பட்டு ஊர் திரும்பிய ராஜரத்தினம் பிள்ளையை ஊரில் இருந்த மின்சார விளக்குகள், கண்சிமிட்டி வரவேற்றன!

ஒரு கச்சேரிக்கு, தான் வரும்போது எழுந்து நிற்காத மாவட்ட கலெக்டரிடம் ராஜரத்தினம் கேட்டாராம்.."ஏம்பா... நான் இந்தக் கச்சேரிக்கு மட்டும் மூவாயிரம் ரூபாய் வாங்கியிருக்கேன். உன் மாசச் சம்பளமே ஆயிரத்தைத் தாண்டாது. நீ பெரியவனா, நான் பெரியவனா?"

ஒருசமயம் கலெக்டர் என்ன, மைசூர் மகாராஜாவையே ஒரு பிடி பிடித்துவிட்டார். கச்சேரி முடிந்ததும் கைதட்டிப் பாராட்டிய மகாராஜா, "கணக்குப்பிள்ளை, பணத்தை எடுத்துவந்து பிள்ளைக்குக் கொடு" என்றாராம். உடனே பிள்ளை, பக்கவாத்தியம் வாசித்தவரைக் கூப்பிட்டு, "மேளக்காரரே... பணத்தை வாங்கும்..." என்று சொல்லிவிட்டு, மகாராஜாவிடம், "நீங்கள் மாநிலத்துக்கு ராஜா என்றால் நான் இசைக்குச் சக்கரவர்த்தி ஐயா", என்று சொல்லியிருக்கிறார். அப்புறம் மகாராஜா தன் கையாலேயே பிள்ளைக்குச் சன்மானம் செய்தாராம்!

1936இல் வெளியான முதல் பேசும் தமிழ்ப் படமான டி.பி. இராஜலட்சுமி இயக்கி, நடித்த 'மிஸ் கமலா'வில் கடைசியில் வரும் ஒரு திருமண நிகழ்ச்சியில் டி.என். ராஜரத்தினம் பிள்ளை நாதஸ்வரம் வாசிப்பார். இதுதான் சினிமாவுக்கு அவர் அறிமுகமான விதம்.

பிறகு 1940இல் அமெரிக்கரான எல்லீஸ் ஆர்.டங்கன் இயக்கிய 'காளமேகம்' படத்தில் டி.என்.இராஜரத்தினம் கதாநாயகனாக தோன்றி நடித்தார்.

இப்படி புகழ் பெற்றிருந்த டி.என். இராஜரத்தினம் மீது ஒரு மணி நேரத்தில் ஒரு கேஸ் அதாவது 12 பாட்டில்கள் மதுவை அருந்தும் அளவுக்கு மதுவிற்கு அடிமையாக இருந்தார். 1930இலிருந்து 1950வரை அவர் சம்பாதித்த தொகை ரூபாய் 5 கோடி. முதலில் கார் வாங்கிய நாதஸ்வர வித்வான்.

ஆனால் மிதமிஞ்சிய குடியினால் 1956 டிசம்பர் மாதம் 12ஆம் தேதி மாரடைப்பால் இறந்து போனார். தன் வாழ்நாளில் 5 கோடி ரூபாய் சம்பாதித்த டி.என். இராஜரத்தினம் பிள்ளை இறந்தபோது, அவரது ஈமச்சடங்கு செலவுகளைச் செய்தவர் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன்!

இந்திய விடுதலைப் போரில் மதுவிற்கு எதிரான போராட்டத்தை காந்தியார் முன்னெடுத்தார். அவரின் மதுவிலக்குக் கொள்கையில் தீவிரமான பற்று கொண்டவராக விளங்கியவர் என்.எஸ். கிருஷ்ணன், மதுவிலக்குக் கொள்கையை தான் மிகவும் நேசித்த கலைத்துறை மூலம் எங்கும் பரப்ப விரும்பினார்.

1930-களில் 'தேசபக்தி' எனும் நாடகம் மூலம் மதுவின் தீமைகளை எங்கும் எடுத்துரைத்தார்.1938ஆம் ஆண்டு சென்னை மாகாண முதல்வராக இருந்த இராஜாஜி மதுவிலக்கைக் கொண்டு வந்தபோதிலும், அதனை சென்னை மாகாணம் முழுவதும் கொண்டு வந்தவர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாரே. 1948 ஆம் ஆண்டு அக்டோபர் 2 அன்று முழு மதுவிலக்குக் கொள்கை நடைமுறைக்கு வந்தது. அப்போதே முதல்வர் ஓமந்தூரர் முன்னிலையில் நடைபெற்ற பெரும் பொதுக்கூட்டத்தில் மதுவிலக்கு குறித்து நகைச்சுவை ததும்ப பாடல்களைப் பாடி

*அனைவரின் பாராட்டையும் பெற்றார் என்.எஸ்.கிருஷ்ணன்.*

*அறிஞர் அண்ணா படைப்பில் உருவான 'நல்லதம்பி' திரைப்படத்தில் ஒரு பாடல். மதுவிலக்கை வலியுறுத்தி கலைவாணர் மதுரம் இருவரும் நகைச்சுவைப் பாடல் ஒன்றைப் பாடுவார்கள்.அன்று அப்பாடல் பட்டிதொட்டியெங்கும் ஒலித்து, மக்கள் மனதைப் பெரிதும் ஈர்த்தது.*

*கணவன்மார்கள் மது குடித்துக் குடித்து குடும்பத்தைச் சீரழித்த கதையை மதுரம் விளக்கும் பாடல் வரிகள் இதோ:*

**''குடி கெடுத்த குடியொழிஞ்சது**

**அடிதடி சண்டையதுங் கொறஞ்சது**

**ஆணும் பெண்ணும் புத்தி யறிஞ்சது'**

**- எங்க நாட்டிலே**

**அக்டோபர் ரெண்டுக்கு மேலே**

**தாலிக் கயிறு தனியாயிருக்கும். தங்கமிருக்காது அதிலே தங்கமிருக்காது,**

**தண்ணி குடிக்கத் தகரக் கொவளை சொம்புமிருக்காது வீட்டிலே சொம்புமிருக்காது!**

**பாலு வாங்கக் கொழந்தப் பசிக்குப் பணமிருக்காது கையிலே பணமிருக்காது!**

**பாழுங்கள்ளைக் குடிப்பது மட்டும் நாளுந்தப்பாது எந்த நாளுந் தப்பாது,**

**கூலிக்காசில் சோளம் வாங்கிக் கூழுகாச்சி வச்சிருப்பா!**

**ஆள சந்த ஆம்பிளைதான் அதையும் வித்துக் குடிச்சிடுவான் கடைக்குப் போவான்.... கள்ளக் குடிப்பான் காரியமில்லாமே சண்டைக்குப் போவான் வடைய ரெண்டை வாங்கிக்குவான்.**

**வழிநெடுகப் பேசிக்குவான்**

**வந்து கதவைத் தட்டுவான்**

**வாயில் வந்ததைத் திட்டுவான்!**

**வாழ்வின் சுகத்தை விரும்பும் பெண்ணை வஞ்சகக்காரியென்று ஒதப்பான்;**

**அவன் வாரிசுக்காகக் கருவைத் தாங்கும் வயித்திலே எட்டி மிதிப்பான்.**

**அப்பப்பா இந்தக் கள்ளுக்குடியை நம்ம நாட்டை விட்டு ஒழிச்ச,**

**அந்த நல்ல மனுசன் காலுக்குக் கோடி கோடி கோடி கோடி கோடி கும்பிடு!''**

*மதுப் பழக்கத்திலிருந்து விடுபட்ட கணவனாக என்.எஸ்.கிருஷ்ணன் பாடும் வரிகள் இதோ:*

**''மனுசனாகிப் போனேன் இப்ப நான் மனுசனாகிப் போனேன்,**

**பனைமரப் பாலு பட்டை பிராந்தி. பக்கம் வந்தா எடுக்குறேன் வாந்தி,**

**இரண்டாம் தேதி வருவதற்கு முன்னே, அக்டோபர் மாதம் இரண்டாம் தேதி வருவதற்கு முன்னே,**

**எங்கண்ணுக்குள்ள இரண்டாளாகத் தெரிஞ்சுது பெண்ணே சுருண்டு சுருண்டு நான் சும்மா படுப்பேன்,**

**சுதியை விட்டுக் கூடப் பாட்டுகள் படிப்பேன்,**

**வரண்ட காரவடை வாத்து முட்டை கருவாட்டைத் தின்னவாய் நாத்தம் நீங்கி நான் மனுசனாகிப் போனேன்!''**

*மதுவிலக்குப் பிரச்சாரத்தைப் பற்றி மக்களுக்குப் புத்திமதி சொல்லி படம் எடுத்த என்.எஸ்.கிருஷ்ணன், அதிக மது அருந்தி வந்ததன் காரணமாக ஏற்பட்ட மஞ்சள் காமாலை, குடல் வீக்கம் நோயினால் 1957 ஆகஸ்ட் 30ஆம் தேதியன்று சென்னையில் உள்ள அரசு பொது மருத்துவமனையில் இறந்து போனார்.*

*அடுத்ததாக நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி. அன்றைய காலத்தில் புகழ் பெற்ற நாடக சபாக்களில் ஒன்றான மங்கள கான சபா நஷ்டத்தில் இயங்கி வந்தது. இதை என்.எஸ்.கிருஷ்ணன் விலைக்கு வாங்கி, என்.எஸ்.கே. நாடகசபா என்று பெயர் மாற்றி, கே.ஆர்.ராமசாமியிடம் நிர்வாகப் பொறுப்பை ஒப்படைத்தார். கே.ஆர்.இராமசாமி குடிப்பழக்கத்திற்கு ஆட்பட்டிருந்ததால், கம்பெனி இப்போது பெருத்த நஷ்டத்தில் மது குடித்தவன் நிலையாகத் தள்ளாடத் தொடங்கியது.*

*இந்த நாடக சபா மூலமாகத்தான் அண்ணாவின் 'வேலைக்காரி' நாடகம் பிரபலமடைந்தது. இந்த நாடக சபாவிற்காக காஞ்சிபுரத்தில் 'திராவிட நாடு' ஏட்டை நடத்தி வந்த அண்ணாவிடம் ஒரு நாடகம் எழுதித் தருமாறு கே.ஆர். இராமசாமி வேண்டினார். அண்ணாவைச் சந்திக்கும்போதுகூட கே.ஆர்.இராசாமி*

போதையிலேயே இருந்திருக்கிறார். இதைப் பார்த்து அண்ணா அப்போதே கடுமையாகக் கண்டித்திருக்கிறார்.

பிறகு அண்ணா 'ஓர் இரவு' என்ற நாடகத்தை எழுதிக் கொடுத்தார். கே.ஆர்.இராமசாமி, என்.எஸ்.கிருஷ்ணன் சிபாரிசில் 'சிவசக்தி' என்ற படத்தில் கதாநாயகனாக நடித்தார். பிறகு 1969இல் வெளிவந்த எம்.ஜி.ஆர் நடித்த 'நம் நாடு' படம்வரையிலும் நடித்துப் பெரும் புகழைப் பெற்று வந்தார். அடுத்த இரண்டு வருடத்திலேயே அதாவது 1971 செப்டம்பர் மாதத்தில் தனது அதிகபட்ச குடியினால் இறந்து போனார்.

சரி.அடுத்த நபர் யார்..? சாவித்திரி..

தமிழில் 85, தெலுங்கில் 92, இந்தியில் 3, கன்னடத்தில் 1, மலையாளத்தில் 1. இதெல்லாம் அவர் நடித்தப் படங்கள். அந்தக்காலத்திலேயே கால்களில் தங்கக் கொலுசு அணிந்திருந்த நடிகையாக இவர் இருந்திருக்கிறார்.

இவர் நடிகர் ஜெமினிகணேசனின் இரண்டாவது மனைவி, 1951இல் நடிகையான சாவித்திரி, தனது சொந்த நிறுவனமான ஸ்ரீசாவித்திரி புரொடெக்ஷன்ஸ் சார்பில் 'குழந்தை உள்ளம்' என்ற படம் எடுத்தார். ஜெமினிகணேசன் கதாநாயகன். சவுகார்ஜானகி, வாணிஸ்ரீ ஆகியோர் கதாநாயகிகள், படம் படுதோல்வி.

இரண்டாவதாக சிவாஜியை வைத்து 1971ஆம் ஆண்டு 'பிராப்தம்' என்ற படத்தைத் தயாரித்தார். இந்தப் படமும் படு தோல்வி. இதனால் தனது சொத்துக்களை பெரியளவிற்குத் தொலைத்தார். தூக்கம் இல்லாமல் துக்கம் தாளாமல், எப்போதும் மது போதையுடனேயே இருந்தார் நடிகையர் திலகம் சாவித்திரி. வாழ்வின் ஒட்டு மொத்த நிம்மதியும் இழந்த சாவித்திரி, கடைசி காலத்தில் கோமாவில் படுத்த படுக்கையில் இருந்தவர், 1981 டிசம்பர் 26 நள்ளிரவில் இறந்து போனார்.

தனது உழைப்பால் வெற்றி முகத்தில் இருந்த சமயத்தில்தான் 'மாடி வீட்டு ஏழை' சொந்தப் படம் எடுத்து அதில் தனது சொத்துக்களையெல்லாம் இழந்து, கடைசியில் குடியில் மூழ்கி கல்லீரல் வீங்கி இறந்து போனார் நடிகர் ஜே.பி. சந்திரபாபு.

குடியினால் அழிந்த சினிமா பிரபலங்கள் இவர்கள் மட்டுமல்ல, கவிஞர் கம்பதாசன், கவியரசு கண்ணதாசன் இப்படி இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம். குடி காரணமாக உடல் நலத்தையும் தங்கள் செல்வங்களையும் இழந்த பிரபலங்கள் பட்டியல் நீளமானது.

'குடியினால் குடை சாய்ந்த கலைக் கோபுரங்கள்' என்ற தலைப்பில் அறந்தை நாராயணன் ஒரு புத்தகமே எழுதி இருக்கிறார். கலையுலகைச் சார்ந்தவர்கள் குடியினால் சீரழிந்த கதைகள் விலாவாரியாக இதில் விரவிக் கிடக்கிறது.

"குடிப்பழக்கம் உடலுக்குக் கேடானது என்பதை அனுபவபூர்வமாகவே நான் உணர்ந்திருக்கிறேன். ஆம்! நான் குடிகாரனாக இருந்திருக்கிறேன். மொத்தத்தில் விளைவுகள் என்ன தெரியுமா?"

**கல்லீரல் நோய்**

**குடலிறக்கம்**

**வயிறு வீக்கம்**

**நுரையீரல் புற்றுநோய்**

**இதயத்தில் இரத்த ஓட்டம் பாதிப்பு**

**மூளையில் மஞ்சள் காமாலை**

**வலிப்பு நோய்**

தமிழ்நாடு மருத்துவமனையினர் கொடுத்த கெடு 'இன்னும் இரண்டே இரண்டு ஆண்டுகள்'. அந்த இரண்டு ஆண்டுகளைக் கடந்து, இப்போது போனஸ் நாட்களில் இந்த நூலை எழுதிக் கொண்டிருக்கிறேன். இளைய தலைமுறையினருக்காக. இந்தச் சமுதாயத்திற்காக நான் ஆற்ற வேண்டிய கடமையாகக் கருதி இந்த நூலை எழுதி முடித்திருக்கிறேன்.

இளைஞர்களே, மது மற்றும் போதைப் பழக்கத்துக்கு ஆளாகாதீர்கள்!"

தனது நூலின் முன்னுரையில் இப்படி எழுதியிருக்கிற அறந்தை நாராயணன்,

'தமிழ் சினிமாவின் வரலாறு' படைத்த புதுயுக புருஷன், அதே மதுவுக்கு அடிமையாகி, சீக்கிரமே காலமாகிப் போனது காலத்தின் பெருந்துயரம்!

●

கட்டுரை

# ஆத்தா ஏறுனா பஸ்ஸு.. எறங்குனா.. டிஸ்ஸு..!

இரா.மோகன்ராஜன்



அம்மாவ பெத்த அம்மாவ நாங்க ஆத்தானுதான் சொல்லுவோம். கோடகால வெக்கைக்கும் பள்ளிக்கூட லீவுக்கும் ஆத்தாவீட்டுக்கு போறது அவ்வளவு குளும. ஆத்தா பேச்சு, அதும் வெத்தல போட்ட வாய் சிரிப்பு அதவிட குளும. மன்னாருகுடி பக்கத்துல வாக்கப்பட்ட கிராமம் ஆத்தாவோடது. ஊரு குளும ஆத்தாவால் வந்ததா இல்ல அங்க மனுசபய தவறி உளுந்தாலே மொளச்சுப்போற மண்ணால வந்ததான்னு இப்ப வரைக்கும் எங்களுக்குத் தெரியல.

அந்த மண்ணுள உளுந்த பொன்னு கூட மொளச்சிரும் அப்படியான மண்ணு. மாசிமாச காய்கறிங்க, சித்திர பலாப்பழம், நிலக்கடல, சோளம், தை மாசக் கரும்பு, எல்லாம் ஆத்தா கூட எங்க ஊரு டவுனுக்கு அந்த அந்த சீசனுக்கு பஸ்ஸு ஏறிடும்.

கொண்டாங்குடுத்தான் வீட்டுக்கு வீசின கையோட ஆத்தா வந்ததா நெனப்பு தெரிஞ்ச காலத்துலேந்து தெரியல. இடுப்புல ஒரு மூட்ட, கையில ரெண்டு பையி. கையி பையில அதிரசம் இருக்கும். இல்லே காளாவாக்கர செட்டியாரு கட பக்கோடா, நல்லெண்ணையில செஞ்ச வீட்டு மரவள்ளிக்கெழங்கு வட இருக்கும். கொறஞ்சது பத்து இருவதாவது இருக்கும். சித்தப்பா, பெரியப்பா அவுங்க கொழந்தங்க எல்லாருக்கும் இருக்கும். கூட்டுக் குடும்பத்துல பொண்ண குடுத்துட்டு தன்னோட பேரப்புள்ளைங்களுக்கு மட்டும் ஊட்டுற மனுசி ஆத்த கெடாயாது.

ஆத்தா கொண்டுவர பலகாரம், காய்கறிங்க. திண்ணா மட்டும் ருசி இல்ல. எல்லாருக்கும் பச்சனங்கள் கொடுத்துட்டு வெத்தலயக் கிள்ளி வாயில போடுற

வரைக்கும் நாங்க ஒரு பச்சனத்தையும் பல்லுலபடாம வேடிக்கை பாப்போம் பச்சனத்து ருசி கிடக்கட்டும் ஆத்தா பஸ்ஸுல ஏத்தி மூட்டைகள கொண்டு வர கத இருக்கே அதுதான் ருசி. ‘வடசேரி பஸ்ஸுக்காரன் சொல்வா(ன்) ‘‘இந்தா ஆத்தா வந்துட்டுடா பேரபுள்ளகளுக்கு சொத்த எடுத்துக்கிட்டு’’என்று. ‘‘ஆரு சொத்துடா எல்லாம் என் பேரப் புள்ளைகளுக்குதான. ஓம் பஸ்ஸயா எழுதி கேட்டுட்டன். ஏத்தி வச்சுட்டு, ஏ மடில எடுத்து வையுடா’’ம்பான்.. ‘‘ஏன் ஆத்தா இந்த மூட்டைலாம் ஓம் பேரப்புள்ளயளா மடில ஒக்காத்தி வைக்க’’ம்பான்... ‘‘ஆமா இல்லானா நீதான் அதுக்கும் சேத்து டிக்கட்டு போட்டுடுவியே ஒன்ன தெரியாதா’’ம்பா..

ஆச்சா.. அடுத்தகத எங்க வூரு பஸ்ஸு.. அதுல எடம் புடிக்கிறது கூர ஏறி கோழி புடிக்கிற கத... ஒன்னு இல்ல, ரெண்டு இல்ல.. அத்தன மூட்டைங்களயும் உய்ய்ய்யனு பிலாப்பல கொசுவா மொய்க்கிற பஸ்ஸுல ஏத்துறதுன்னா சும்மாவா.. பஸ்ஸுல ஏற முடியாத, எடம் புடிக்க முடியாத அத்தன பேரும் ஆத்தாவ ஏக வசனத்துல திட்டினாலும் அதுக்கு காதுல ஏறாது. ஆனா பதிலு ஏசலு வராமப் போவாது. ‘‘ஏ.. வயசானவ மூட்ட முடிச்சுக்கள வச்சுட்டு நிக்கறனே உங்களுக்கு ஈசு எறக்கம் இருக்கானு’’ கேட்டாப் போதும் காலேசு பசங்க, புள்ளங்கனு போட்டி போட்டு, ஆத்தாவோட மூட்ட முடிச்சு, ஆத்தா எல்லாத்தையும் ஒரே எத்துல ஏத்தி பஸ்ஸலே ஒக்கார வச்சுடும். கண்டட்டரு பஸ்ஸுக்குள்ள நகர முடியாம ஆத்தா வச்சுருக்க மூட்ட முடிச்சுக்ளப் பாத்து ரொம்ப கடுப்பாவான்.

இத கதயா சொல்லிபுட்டு ஆத்தா எங்களயெல்லாம் வெத்தல வாய் நெறய சிரிப்பாணியோட ஒரு பார்வ பாக்கும் பாருங்க.. கெழங்கு வடயத் தின்ன வாயி பொளந்து நிப்போம்.. அநியாயத்துக்கு ஆத்தா அந்த கதக்கு எடவெளி குடுக்குறது அந்த கண்ட்டர விட கடுப்பாவும். ‘‘ஏ.. சொல்லு ஆத்தா.. வெத்தல நரம்ப அப்பறம் கிள்ளலாம்,’’ னு பசங்க நாங்க சொல்லுவோம்.

‘‘ஏத்தா.. விசால கெலம சந்தைக்கு இப்பவே கடயத் தூக்கிட்டு வந்துட்டியா’’ம்பா(ன்) கண்டட்டரு.. அவ்வள நெசநெசப்புலயும் எனக்கு சிரிப்பாணிய வரும்பாரு.. ‘‘ஆமாடா.. இது கொண்டு போயிதான் நா கடபோட்டு பொழக்கப்போற(ன்).. எல்லா ஏ பேரப் புள்ளகளுக்குதாம்பே.. அவ(ன்) நம்புனாதான?.. ‘‘நீ நம்புனா நம்பு..போ.. ஆனா நம்ப மாட்ட. நீ அதுக்கும் சேத்து டிக்கட்டுல போடுவ.. அவம் அப்பவும் நம்பாம ஆந்த கண்ணுல முழிப்பா(ன்)’’ மூட்டயக் கொண்டுவார சரி.. இந்த பிலாபலத்த ஏத்தா இப்படி கொண்டு வந்து வச்சு சனங்கள குத்துறம்பா(ன்)...

‘‘ஏலேய் பிலாபல முள்ளு குத்தி ரெத்தம் வராது..உரிச்சு தின்னா வலியுந் தெரியாது போய்யா’’ம்பன்’’(ன்).. ‘‘அதுசரி பிலாபலம் ஓம் பேரப்புள்ளகளுக்கு முள்ளுக் குத்து எங்களுக்கா’’ம்பா(ன்).. ‘‘ஏ நா எறங்கன ஒடன வாங்கித்தாரம்பேன்....’’ பா.. கண்டட்டரு அப்பதான் சிரிப்பான்.. ‘‘ஏத்தா இப்படி உசிர வாங்குறம்’’பான்..’’

‘‘ஏத்தா ஒனக்கு கோவமே வராதா இம்புட்டு திட்டு வாங்கிக் கொண்டுவார... ‘‘அவம் பஸ்ஸுல ஏத்துறதே பெரிசு கோவபட்டா எம்பேரப்புள்ளகள கைய வீசிக்கிட்டு பாக்கவர முடியுமா.. ஆத்தா கைய பார்த்து ஏமாந்துற மாட்டிங்களா’’ ம்பா...

ஆத்தாவும் தாத்தாவும் கொல்லக் காட்டுல பலனப் போட்டு, மாஞ்சு கவலத் தண்ணி எறச்சு, மன்னாருடி சந்தைக்கு எடுத்துட்டுபோக தாத்தா கிட்ட ஒரு கணக்கும் ஆத்தாகிட்ட பேர புள்ளகளுக்கு கொண்டுகிட்டு போற கணக்கும்தா(ன்) இருக்கும். இதுல தாத்தா யாவராத்துக்கு எடுத்துட்டுப்போற மூட்டைய விட எங்களுக்கு ஆத்தா கொண்டுவார மூட்டதான் ரொம்ப..

பிலாபலத்துக்கு தாத்தா ஒரு கணக்கு போட்டு வெச்சுருப்பாரு..பாலு காய ஆரம்பிச்சு செவக்க ஆரம்பிச்சதும் அவரு மன்னாருடி போய் செட்டியாரு கட பலவாரத்த சப்புக் கொட்டி சாப்புட்டுபுட்டு கொஞ்சத்த மடியில கட்டிட்டு வாரதுக்குள்ளார ஆத்தா

பிலாபலத்த ஆஞ்சு வெச்சுடுவா.. வந்ததும்.. வராததுமா.. இந்தா இத எடுத்துட்டு போயி பேரபுள்ளக கிட்ட குடுத்துட்டுவாம்பாரு.. மடில செட்டியாரு பக்கோடாவுக்கு பிலாப்பலம் கொடுத்த வாக்கு கணக்கும். ஆத்தாவ வெஞ்சிட்டே தோள்ள தூக்குற பிளாபளத்த பேரபுள்ளக வீட்டுல கொண்டு வந்துதாம் எறக்குவாரு. பலம் முள்ளு குத்தாம இருக்க ஒரு பூதுவாலய தோள்ள போட்டுகிட்டே கிளம்பி வந்துடுவாரு.

ஏத்தா தாத்தாவ இப்படி கஷ்டபடுத் துறனு கேட்டா.. "ஆமாடா நா மட்டும் இந்த வீட்டுல வந்து பவுசா இருக்கேம் பாரு. ஒங்க தாத்தாவ மட்டும் கஷ்டப் படுத்தறேம்"ம்பாள். அதுக்கு பின்னாடி ஒரு கத சொல்றதுக்குன்னே இருக்கும்..

அது அதும் வாக்கப்பட்ட கதயிலேருந்து ஆரம்பிக்கும். எத்தனையாவது தடவனு யாருக்கும் தெரியாது. ஆனா கேக்க அத்தன ஆர்வமா இருக்கும். நெலக்கடலய அவிச்சு வெச்சுட்டு, பக்கத்துல ஆத்தா ஒடச்சுதர கடலைய திண்ணுக்கிட்டே கேப்போம்.. கடல ருசியா... ஆத்தா கத ருசியா... எது ருசின்னு சொல்ல முடியாது. அப்படி ஒரு கத..ஆத்தாவ.. தாத்தா பொண்ணு பாக்க போன கதய மட்டும் சொல்லமாட்டா.. "ஆமா... நா பாத்தன். என் மன்மதம்பா.."

ஆத்தாவ பொண்ணு எடுக்க போனவங்க பொண்ணு குடும்பாய்ங்களோ என்னமோனுட்டு கூட்டு வண்டி கட்டிக்கிட்டு நடுநிசியால போய் நின்னுருக்கானுங்க தாத்தா ஊராளுங்க.. ஆத்தா ஊரு ஆளுங்க ஆத்துக்கரயில பாத்துட்டு எம்புட்டு இவ்வளவு தூரம்னு விசாரிக்க, பொண்ணளைக்கத்தான் மாப்புள்ளனுருக்கானுங்க.. இவ்வளவு நிசிலயா வருவிங்கனு கேக்க யாரு சொன்னது, விடியிரதுக்கு இன்னும் கொஞ்சம் நாழில கெடக்குனு சொல்ல, கேட்டவங்க யாருரா பயித்தாரைங்கனு பாக்க.. அந்தா பாரு விடிவெள்ளிக்கு முந்தின கருக்கலு நட்சத்திர முன்னுருக்காய்ங்க.. ஆனா அப்படியும் நம்பல..அவிங்க கிளம்பி பொண்ணுவீட்டுக்கு மூலாசுக்குப் போக.

தாத்தா ஊராய்ங்க மட்டும் சும்மாவா... பொண்ணு வீட்டுக்கு அதா ஆத்தா வூட்டுக்கு நாலு வூடு தள்ளி சந்தால நின்னு கோழி மாரி கூவிருக்காய்ங்க... பொண்ணு வீட்டுக்காரய்ங்க அடிச்சு புடிச்சு எழும்பி எடேய் தொந்தியா வீட்டு சேவ கோழி கூரையில நின்னு கூவிட்டுடோய் வண்டியக் கட்டுங்கடோய்னுருக்கானுங்க. ஆத்தாவ அடிச்சு புடிச்சு கெளப்பி சோடிச்சு தலைக்கு தாழம்பு ஜட பின்னி ராத்திரினு தெரியமாயே பொண்ண கூர வீட்டுக்கு கெளப்பிட்டானுங்க...

"தாழம்பு வாசத்துக்கு எட்டூரு பேயி பின்னாக்க வந்துருமா.." "வராம... ஏ பொறந்தவ வீட்ட விட்டு நா போறப்ப ஓ தாத்தா ஊருக்காரய்ங்க வண்டிலயும் நடையுலயு அப்படித்தான் பின்னாடியே வந்தாயங்க..." "ஊரு வெலகிப் போக போக கண்ணுல தண்ணியா ஊத்துது... அப்பவும் நெனைக்கன்" "என்னடா போற வழியில ஒரு கானா கோழி கூட கண்ணுல படலயேனு..." "கூட வந்த கூறுகெட்ட தோழிக்காரியும் பேந்தனு முழிக்கா.. அப்பதா கூட்டு வண்டி காரனெ கேக்குறன்.. ஏய்யா.. வெல்லன வெல்லனனு சொல்லி கெளப்பிவிட்டீரு. ஓம்ம ஊருகாரவெ... விடிஞ்சாப்பல கருக்கல தெரியலேயேங்க..." ஆத்தா வெத்தல போட்டு திரும்ப ஆரம்பிக்க எல்லாருக்கும் வெல்லம் கொடுத்தா... "ஏத்தா கதய சொல்லு இப்பதானே கல்ல திண்ணம்ங்குறோம்.." "ஏ ஒம்மாகாரி திட்டவா வயிறுமுட்ட பேரனுவோளுக்கு கல்லையக் கொடுத்து வவுத்து வலி வரணு(ம்)"

"அதெல்லாம் வராது சொல்லு ஆத்தா"னு இன்னும் நெருக்கா ஒக்காந்தோம். பெரிய நெல்லு பானையில அம்மா நெல்லு அவிக்கிற வாசனை மூக்க தொலைக்க "ஆமா ஓ ஆத்தா கதய கேளு அது எங்க அப்பன வய்யிறதுக்குனே சொலும்"பா(ள்).. ஏம்மா ஒனக்கு இந்த கத தெரியுமா"ம்போம்..." இதா இந்த பானை நெல்லு கணக்கா அம்புட்டுத்தடவ சொன்ன கததாம்"பாள்.. நீ சொல்லு ஆத்தா.. வண்டிக்காரரு என்னா சொன்னாரு...

"வண்டி மாட்ட தரருகுச்சு குடுத்து வெரசா ஓட்டிக்கிட்டே சொல்லவாம் மனுசன்" ஆத்தாக்கு பெருமூச்சு பான நெல்லு அவிச்ச ஆவிபோல வெந்து அடங்கி வரும்.." எங்கன கருக்கலு வராது..

நடுநிசில..ன்னாம்பாரு...” “ஏலேய் யாருலே நீ வண்டிய நிறுத்துறான்ம்.. பாரு... தோழிக்காரி எக்கா பேசாம வாங்குறா... ஏலே நா யாரு தெரியுமாடா... உப்பூரு பக்கிரி கொலக்காரம் பொண்ணு... அந்தமா(ன்) செறையெல்லாம் அவருக்கு அத்துபடிடா அவம் பொண்ணுடானுவம்...'' ஓடுற வண்டிய இழுத்துபுடிச்சு முண்டாச கழட்டி தோளுல போட்டுகிட்டு “அதுக்கு இப்ப என்னா ஓ அக்காளுக்குன்னு கேக்குறா வண்டியோட்டி... தோழிய சாடையா பாத்து...' “அட கொப்புறானே.. அவம் யாருங்கற..?” யாரு ஆத்தா... ஆத்தா அந்த ஆவேசத்த இன்னும் முந்தானயிலேயே முடிஞ்சு வச்சுருக்காப் போல. “தாயேளி..ஓ தாத்தாதாம்.!''. ''வந்துச்சுபாரு எனக்கு வெரசு..ஏம் ஒம்வூருல இப்படித்தான் நடுராவுல பொண்ண கடத்திப் பரிசம் போடுவிறானு கேட்டன்.'' ''அப்படினு யாரு சொன்னா..னு தாரு குச்ச மூஞ்சிட்ட நீட்டி ஆட்டி ஆட்டிச் சொல்லுதாரு... கோட்டூரு மைனரு ஒம்ம பொண்ணு கேட்டு வந்தாரு.. இங்கன வெளக் குடிக்கார(ன்) கட்டினா வெளங்காம போயிருவேனுதா(ன்) ராவோட ராவோ நாங்க பரிசம் போட்டம் தாயி.. எல்லாம் ஓ பொறந்தவயங்க ஏற்பாடுதான்னாரு..” “அப்புறம் நா என்ன பேசுறது..?”

''வெளக்குடில பொண்ணு கேட்டு தாமசமா முடிவு சொல்றம்னு அண்ணகாரன் சொல்ல எடையில வடசேரிக்கு தட்டுமாத்திட்டா(ன்) கூடப்பொறந்த களவாணிக. அண்ணிக்கு மாட்டின கழுத்துடா ஓ தாத்தாகிட்ட.. ஆனா கொலகாரம் பொண்ணுனு நா ஆரம்பிச்சா.. ஓ தாத்தா ஊருக்குதான் சிலம்பகாரரு. எனக்கு பொட்டி பாம்புதாம்னு'' நமுட்டு சிரிப்பாணி பொத்துக்கும்.

“ஓ தாத்தாக்கு மூணு தொடுப்பும்பா (ள்) ஆத்தா. ஒண்ணு காலாக்கர செட்டியாரு கட எண்ண சட்டி.. லெட்சுமி கொட்டாவ அப்பறம்..எம்சியாரு.” பலியா கெடந்துட்டு மனுசன் நிசிலதான் வருவாரும்பா..அதுல ஒரு ஆதங்கம் இருக்கும்.

கோட லீவுக்கு சிறுசுல ஆத்தாவீட்டுக்கு போயி திரும்புவோம்.. பொங்கலுக்கு வெளஞ்ச கரும்பு கட்ட லாரில ஏத்தி விட்டுட்டு வூட்டுக்கு வாறப்ப சொல்லுவா. “ஏ பெரியபுள்ள, சின்னபுள்ள கொள்ளை பொறத்துல ஒங்க நரகல இப்பதாண்ட அள்ளி கூட்டி போட்டுட்டு'' வந்தம்பா..ஏன்தா அப்படின்னா..எம் பேரபுள்ளகளதா பாக்க முடியல நரகலாவது காஞ்சிட்டு நெனப்பா கெடக்கட்டும்னுட்டுதாண்டாம்பா(ல்)''. எம்புட்டு பாசம்.. வெறுப்பா பாக்குற நரகல அவ அன்பா பாத்தா.. இன்னைக்கு கையில் செல்ல வச்சு சீமையில இருக்குறவங்களயே ஒருத்தர ஒருத்தரு பாத்துக்குற காலம். அப்பலாம் டாய்லெட்டு கீய்லெட்டு ஏது?. சவுக்க காடும், கத்தரி கொல்லையும்தா(ன்).

தாத்தா பேப்பரு படிப்பாரு.. ஆத்தா கைநாட்டு. ஆனா ஒலக விசயத்துல தாத்தாக்கு மேல வெவரம். தெனப்படி ரேடியோ பொட்டிய வச்சு லண்டன் பி.பி.சி.தமிழோசை கேப்பா..ஈழ பிரச்சனை பத்தி தெளிவா பேசுவா..சுந்தரண்ணா.. அவளுக்கு சொந்த அண்ணா போல ஏ இன்னைக்கு சுந்தரண்ணாக்கு என்னாச்சுனு கேப்பாளாம். ஆனந்தி சூரியப்பிரகாசம் அந்த எலங்க பொண்ணு என்னமா பேசுதும்பா.. ஏ இந்த சந்திரிகா ஏம்பா ஒரு பொம்பளயா இருந்துகிட்டு தமிழு சனங்கள் இப்படி கொடும படுத்துறாம்பா..'' பிரபாகரன மாதிரி ஒரு வீரன் தமிளாளுங்களுக்கு இனி கெடைக்க மாட்டங்கடா'' புள்ளம்பா.. எப்பனாச்சும் என்னோட கவிதை, கடிதம் தமிழோசையில் படிச்சாங்கன்னா ஒடன மாமாவ வுட்டு கடுதாசி போட்டுடுவா(ள்).. ஒம் பேர படிச்சாங்கடா லண்டன்ரேடியோலம்பா(ள்). காத, ஆத்தா கண்ணாவும், எழுத்தாவும் வெச்சுருந்தா(ள்)..

காலொடிஞ்சு படுத்த படுக்கையா கெடக்கா. பாக்க சகிக்கல. ஏம்பா மூஞ்சிய திருப்பிக்கிறா. “பாக்க புடிக்கலையாங்கும். ''இல்லத்தா ஒண்ண இந்த நெலமயில பாத்ததுல்ல.. எள்ளுக் கட்ட ஒத்த ஆளா தூக்குவியே''ம்பேன்..கண்ணு கடையில தண்ணி வழியிது.. “ஒனக்கு ஒன்னுமே நா செய்யலிய்யா''ம்பா(ள்).. ஏத்தா அப்படி சொல்ற.. அதா என்னய எழுத்தாளனா ஆக்கிருக்கியே! அது போதும்த்தா,'' ம்பேன். ●

ஆய்தல்

# குடம்பி சிறுகதைகள்

**மணி அமரன்**




கவிதைகளைக் காதல் செய்தாலும் கதைகளோடுதான் நாமெல்லோரும் இங்கே வாழ்ந்துகொண்டிருக்கிறோம். யாரிடம்தான் கதைகள் இல்லை. இங்கே எல்லோரும் கதைகளை மடியில் கட்டிக்கொண்டுதான் திரிகிறோம். நடந்தது, நடப்பது, ஏன் நடக்கப் போவதும் கூட நிஜங்களாகவும், கற்பனைகளாகவும் கதைகளாகவும் மாறிவிடுகின்றன.

உண்மையில் ‘கதை சொல்லி’ என்பவர்கள் அந்தந்தக் கதைகளை எழுதும் எழுத்தாளர்கள்தான் ஒரு நிகழ்வு மற்றும் அந்த நிகழ்வுகளில் வரும் கதாபாத்திரங்கள், அதன் விளைவுகள் என்று எல்லாவற்றுக்கும் ஒரு வடிவம் கொடுத்து கதைகளாக்கி நம் கைகளில் தருகிறார்கள்.

‘குடம்பி’ எனும் இந்த நூலில் இருபத்தி நான்கு சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. ஆனால் அவை ஒவ்வொன்றும் பேசுவதெல்லாம் பெருங்கதைதான்.

நூலாசிரியர் நிழலி அவர்கள் பெரும்பாலும் கற்பனைகளை தூரத்தில் கட்டி வைத்துவிட்டு, தன்னுடைய எழுத்துகளில் நிஜம் பேசுபவர். இந்நூலில் வரும் கதைகளும் பேசுவது அத்தனையுமே நிஜங்களைத்தான்.

எதுவொன்றும் தள்ளி நின்று பார்க்கும்போது அழகாகவும், அருகில் சென்றால் அதற்கு வேறு ஒரு முகமும் இருக்கும்.

குடம்பியின் கதைகளை அருகே நெருங்கிச் சென்று பார்த்தால் நிஜங்களெல்லாம் நெருப்பெனச் சுடுகிறது நம்மை. எல்லாம் நமது பக்கத்து வீடு, பக்கத்துத் தெரு, பக்கத்து ஊரில் நடக்கும் கதைகள்தான். அவர்களுக்கென்னவென்று கடந்து போயிருப்போம் இத்தனை நாளும் இந்நூலின் கதைகள் வழியாக அவர்களின் உலகம் சென்று, உள்ளம் சென்று நெருங்கிப் பார்த்தால், படித்தால் நம்மால் உணர முடியும் அவர்களின் மறுபக்க அசலை. வலிகள், போராட்டங்கள், கைவிடப்பட்ட தனிமைகள் என்று எளிய வாழ்வின் எழுத்துக்கள் நம்மை எட்டி உதைக்கின்றன.

நிழலி அவர்கள் தனது கதைகளில் யாரையும் குறை சொல்லவில்லை. ஊரும் உலகமும் இப்படித்தான் இருக்கிறது என்று கதை கதையாக எழுதிப்போகிறார்.

அதேநேரம் அவரிங்கு யாருக்கும் எந்தவொரு தீர்வையும் தரவில்லை. அவரவர் வசதிக்கும் வாழ்வுக்கும் தக்க ஆளுக்கு ஒரு தீர்வை வைத்திருக்கிறோம் நாம். எது சரியென்று படுகிறதோ அதை தீர்வாக்கிக்கொள்ளுங்கள்.

கிராமிய மொழி நடைகளோடு, பழமொழி சொலவடைகள் வரும் இடங்களில் கிழுமத்தூர் கிழவிகள், நிழலியின் எழுத்துகளில் கூடுவிட்டு கூடு பாய்கிறார்கள். சிறுவயது முதல் நிறைய நிறைய மனித முகங்களை வாசிப்பவர்களால்தான் இவ்வாறு எழுதமுடியும். தான் கண்டு கேட்டு வளர்ந்த மண்மொழியை நிழலி அவர்கள் அசாதாரணமாக எழுதிப்போயிருக்கிறார் தன் எழுத்துகளில்,

சொலவடைகள் மட்டுமா... தெம்மாங்குப் பாடல்களிலும் தேன் பாய்ச்சுகிறார் நிழலி.

திண்ணையில் தொலைத்த தெம்மாங்கு என்ற கதையில் சீராங்காயி கிழவியாக காலை நீட்டி வெற்றிலை போட்டுக்கொண்டே பாடுவது உண்மையில் அந்தக் கிழவியல்ல. நிழலி அவர்களேதான்.

**களத்து மேட்டுல இல்லையினா**
**காத்து வாங்க போயிருப்பேன்..**

**கம்மா கரையில இல்லையினா**
**காட்டு பக்கம் போயிருப்பேன்**

**ஆத்து மேட்டுல இல்லையினா**
**அடுத்த ஊரு போயிருப்பேன்.**

**அடுப்பங்கரையில் இல்லையினா**
**ஆத்தா வூட்டுக்கு போயிருப்பேன்..**

**பொழுது சாய இல்லையினா**
**புருசன் கூட போயிருப்பேன்..**

**திண்ணையில இல்லையினா**
**திங்களோடு போயிருப்பேன்**
**தேடாத தவிக்காத எம்பேத்தி!**

இப்படி சீராங்காயாகவே நிழலி அவர்கள் கதைக்குள் வாழ்ந்திருக்கிறார்.

''திண்ணையில் தொலைத்த தெம்மாங்கு'' என்ற இந்தக் கதை, நம் கண்முன்னே நாமாகவே தொலைத்து வந்த வாழ்வியலின் சாட்சியாக நிற்கிறது.

''வலியின் பேரின்பம்'' எனும் கதை, பிறந்த குழந்தையின் பசிக்குச் சுரக்காத மார்போடு, துயருறும் தாயின் மன உணர்வுகளைப் பேசுகிறது. எழுத்தில் காணும் தாயின் மனவோட்டமும், வலியும் காட்சிகளாகக் கண்முன் விரிகிறது அழும் குழந்தைக்குத் தனது பாலைக் கொடுத்துப் பசி போக்கும் சக பெண்ணொருத்தியின் மூலம் மனிதமும் பேசுகிறது இக்கதை.

இந்தக் கதையில் வரும் தான் பெறாத குழந்தைக்காக பால் சுரக்கும் கருணை கொண்ட தாயின் வடிவிலும், 'கூண்டுப் பறவை', 'நீ நீயாக' போன்ற கதைகளில் வரும் தாயின் வடிவிலும், இதுவரை நாம் நேரில் காணாத கடவுளைக் காண வைத்திருக்கிறார் நிழலி.

கடவுள் இருக்கும்போது இந்தச் சமூகத்தில், சாத்தான்கள் இல்லாமல் இருக்குமா! ''உணர்வில்லா உறவுகளின் கீறல்கள் என்ற கதையில் 'புவனிகாவின் அண்ணனாகவும், உறவு' என்ற கதையில் அத்தையாகவும், சாத்தான்கள் இங்கே நம்மோடு உலவிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

என்னதான் படித்து நாமெல்லாம் அறிவுஜீவிகள் ஆகிவிட்டாலும், இப்போதும் சிறு புறக்கணிப்பு இருந்துகொண்டுதான் இருக்கிறது. சக மனிதர்களான திருநங்கைகள் மீது, சிலர் படித்து அரசு மற்றும் தனிப்பட்ட பலதுறைகளில் வெற்றி பெற்றுச் சாதித்துக்கொண்டிருந்தாலும் இன்னும் பெரும்பாலான திருநங்கைகள், பிச்சையெடுத்தல் மற்றும் தவறான தொழில்களில் ஈடுபடுவது போன்றவை ஒட்டுமொத்த திருநங்கை சமூகத்தின் மீதும் மோசமான பார்வையை விழச்செய்கிறது.

திருநங்கைகளைக் கருவாகக் கொண்டு ஐந்து கதைகள் குடம்பியில் இடம்பெற்றுள்ளன. அங்கும் இல்லாமல் இங்கும் இல்லாமல் இரட்டை வாழ்வுக்கு நடுவில் தனதிந்தப் பிறவியின் முழுமை என்னவென்று தேடி அதை நோக்கிய பாதையில் சிறகு விரித்துவிடத் துடிக்கும் குடம்பி தன்னை கேலி கிண்டல் வசைச்சொற்களால் இறுகப்பிடிக்கும் சமூக விரல்களுக்கு தனது வண்ணங்களையே பரிசாகத் தந்துவிட்டு தனக்கான வாழ்வைத்

தேடிப் பறக்கிறாள். அவள் சிறகுகளுக்கு வண்ணம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் பறக்க வானம் இருக்கிறது.

குடம்பியோடு சேர்த்து

/உறவுகளின் கீறல்கள்/

கூண்டுப்பறவை / மகதி / நீ நீயாக / என்ற தலைப்புகளின் கீழ் வருகின்ற கதைகள் திருநங்கைகளின் வாழ்வியல் வலிகளைத் துயர் சொட்டப் பேசுகிறது. இந்தச் சமூகம் இடம் தருகிறதோ இல்லையோ ஆனால் நிழலி அவர்களின் மனதிலும் கதைகளிலும் திருநங்கைகளுக்கு அத்தனை இடம் தந்துள்ளார்.

சுரக்காத மார்பு, சுமையான மார்பு, இல்லாத மார்பு இன்னும் பாடல்களுக்குள்ளும் கவிதைகளுக்குள்ளும் சிக்கித் திணறும் மார்பென்று பெரும்சுமையோடு பேசுகிறது “மார்பகம் பேசட்டும்” என்ற கதை.

“நங்கேலி” எனும் கதையோ இருக்கின்ற மார்பை அறுத்தெறிந்த ஒருத்தியின் துணிச்சல்தான் அத்தனை பெண்களின் மானம் காக்கும் ஆடையாக இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்று நங்கேலியின் உயிராக பேசுகிறது.

ஒவ்வொரு விடுதலைக்கும் ஒரு உயிர் தேவைப்படும் என்பதை மார்பறுத்துக் கிடந்தவளின் கண்களில் ஒளியாகப் பரவியது என்கிறார் நிழலி.

வரலாறு கதையாகும் போது அது தன்னை காலத்தின் கல்வெட்டில் பத்திரப் படுத்திக்கொள்கிறது. குடம்பியில் உயிர்த்தெழுந்த நங்கேலி இனி ஒருபோதும் சாகப்போவதில்லை இது சத்தியம்.

சம்பங்கி / வனத்தி ஆகிய இரண்டு கதைகளும் இந்தத் தொகுப்பில் முக்கியமான கதைகள்,

சம்பங்கி ஆண் குழந்தை வேண்டும் என்பதற்காக தன் குடும்பத்தாலும் கணவனாலும் பிள்ளை பெறும் இயந்திரமாகவே மாறிப் போனவளின் கதை.

அறிவு விரிவாகி விட்டது நமக்கு. இன்னும் சில ஆண்டுகளில் நிலவில் வீடு கட்டி குடியேறுவோம். ஆனால் அங்கு சென்றும் ஆண் குழந்தை தான் வேண்டும் அரசமரம்தான் சுற்றுவோம் என்று பழைமைவாதக் கொடியை மறக்காமல் நட்டு வைப்போம்தான் போல! மறுப்பதற்கில்லை.

வனத்தி ஆண்டாண்டு கால தீட்டின் கறையை அடித்துத் துவைக்கிறாள்.. அள்ளி எரிக்கிறாள்.

இன்னாருடையவள் /அடையாளம்/ அவசரம் / போன்ற கதைகளில் வரும் பெண் பாத்திரங்கள் தனக்கான சிறைகளை உடைத்து விட்டு விடுதலையாகி விட சிறகு விரிக்க நினைத்தாலும் சமூகம் மற்றும் வீட்டிற்குக் கூட்டுப்பட்டு தன் சிறகுகளைத் தானே வெட்டிக்கொண்டு மீண்டும் கூண்டுக்குள் முடங்கிக் கொள்கிறார்கள்.

“சன்னல் தாங்கிய நினைவு” என்றொரு கதையின் வாசிப்பு அனுபவத்தை எழுத்தில் இறக்கி வைப்பது அத்தனை சுலபமல்ல. பூர்வி கதையில் வரும் “பூர்வி” கிழவியின் மரணத்தைக் கண் நடுங்கத்தான் படிக்கவேண்டும்.

இந்நூலில் வரும் பல கதைகள், கதைகள் வாசிப்பவர்களையும் துயருக்குள் ஆழ்த்திப் போவதுதான் நிழலி அவர்களின் எழுத்தின் பலம்.

குடம்பியின் கதைகள் எல்லாம் பெண்களின் வலிகள், உணர்வுகள், மனக்குமுறல்கள், அவர்கள் சந்திக்கும் பிரச்சனைகள், அடித்தட்டு மக்களின் அன்றைய, அடுத்த நாளைக்கான போராட்டங்கள், கைவிடப்பட்ட முதுமைகள் என்று எளிய மனிதர்களின் குறிப்பாக பெண்களின் உலகமாய் இருபத்தி நான்கு கதைகளைச் சுமந்துகொண்டு சுழல்கிறது.

நிழலி அவர்களின் எழுத்துக்களை உள்நாட்டு அயல்நாட்டு எழுத்து ஜாம்பவான்களின் கதைகளோடு ஒப்பிட்டுக் காட்டி அவரைப் போல என்று சொல்லிக்கொள்ள போவதில்லை நான். மாறாக பின்னாளில் வாசிக்கும் கதைகளுக்கு குடம்பி நூலில் வரும் நிழலி அவர்களின் கதைகளை உதாரணமாகக் காட்டிக்கொள்வேன்.

நூல்: குடம்பி - சிறுகதைகள் -
நிழலி-அன்னை ராஜேஸ்வரி பதிப்பகம் -
சென்னை

கட்டுரை

# கிழங்கட்டைகள்

- சூர்யகலா சரவணன்

இந்த மண்ணின் மொழியை இன்னும் தன் வறண்டு போன நாவின் மூலம் வழக்காடி கொண்டு. இந்த மண்ணின் கலாச்சாரத்தை தன் கைத்தடி போல் விடாமல் இறுக பிடித்துக்கொண்டு இன்றைக்கோ நாளைக்கோ என நடமாடிக்கொண்டும், நகர்ந்து கொண்டுமிருக்கும் நாடி தளர்ந்த உயிர்கள்; காடு வா வா என அழைக்கும் அன்பர்கள்; அவர்கள் வீடு போ போ என்று துரத்தும் எங்களின் வேண்டா வெறுப்புகளும் அவர்களே தன் இறப்பை எப்படியெல்லாம் கொண்டாட வேண்டுமென்று சொல்லுமளவிற்கு வாழ்ந்து விட்டுச் சென்ற எங்கள் மண்ணின் காலச்சுவடுகள்.

உணர்வுகளின் மிச்சங்கள் அவர்கள் இந்த மண்ணில் தேங்கி கிடக்கும் கள்ளம் கபடமில்லா கடைசித்துளி பாசத்தைத் தன் சுருக்குப்பைகளில் சேர்த்து வைத்திருக்கும் சொச்சங்கள் அவர்கள்.

சொற்களால் எவ்வளவு அடித்தாலும் வாங்கிக்கொள்ளும் கிழங்கட்டைகள் அவர்கள். எவ்வளவோ பெரிய தத்துவங் களையும் தன் மண்டைக்குளே சேகரித்து வைத்து நாம் சோர்ந்திருக்கும் நேரத்தில் சொலவடையாய்ச் சொல்லி தேற்றும் கிழமண்டைகள் அவர்கள்.மனிதத்தைத் தன்னுள் கனமாய் வைத்திருக்கும் இந்த மண்ணின் பாரங்களும் அவர்களே.

வீட்டுக் காவலுக்குத்தான் அதுவொளை வைத்திருக்கிறோம் என பகிரங்கமாக ஒத்து கொள்வோம்.நல்லது கெட்டது சொல்ல கிழடு கட்டைய வேணும்தான் கிடக்கட்டும்ன்னு போட்டுருக்கோம் என்போம். தெய்வமாகவும் போற்றுவோம்.போய்த் தொலைய மாட்டேங்குதுவோன்னு எக்கச்சக்கமாய் பேசுவோம்.பழைய சாமான் கேட்டு கூறிகிட்டு வரானே அவன்கிட்ட இதுவொளை தூக்கி போடனும் தொல்லை தாங்கலங்குது என்போம்.

அதுவொளை வீட்டில் வைத்திருந்தாலே பெரிய ஆச்சர்யம் தான்.ஆயர்ருவா பணம் வாங்கி குடுக்குது அதான் வச்சிருக்கானுவோ இல்லண்ணா என்னிக்கோ அம்மாக் குளம் அனுப்பிருப்பானுவோ என அலட்சியப்படுத்துவோம்.ஐஎன்ஏ பென்சன் அம்பதாயிரம் வாங்குது அதான் ஆஸ்பத்திரி வைத்தியம். இல்லண்ணா இந்நேரம் ஊசியப்போட்ருவவோ என உதாசினப்படுத்துவோம்.

கண்ணை பார்த்தே வயித்துக்கு சோறும் போடும் அன்னபூரனியாகவும் சாணிய கரைச்சி ஊத்தி அடிச்ச பொம்பளை போக்கிரியாகவும், எவரையும் வாய்நழுவி பேசாத வாயில்லா பூச்சியாகவும்,வராவன் போறவனையெல்லாம் வம்பிழுக்கும் கிராக்கிகளாகவும், அன்று அப்படியெல்லாம் வாழ்ந்து, இன்று படுக்கையில் வீழ்ந்து கிடக்கும் எங்க வூட்டு பெருசுகளின் வரலாறையெல்லாம் தோண்டி பார்த்தால் இப்படிதான் இருக்கும்.

மனித உணர்வுகளின் மொழி புரிந்தவள் மட்டுமல்ல அந்தக்கிழவி வாயில்லா ஜீவன்கள் கூட அவளைக்கண்டு ஆர்ப்பரிக்கும் அன்புக்காரி. அவளுக்கும் அதுங்களுக்குமான அந்த மொழியே அன்பின் உருவம்.

கெழவி, தலக்கரக்கட்டை மாதிரி கைப்பட்டை,நல்ல சாப்பாடு சாப்ட்டு சக்கரை, உப்புன்னு, ஒரு சீக்கும் கிட்ட வராத கட்டான உடம்போட உழைச்ச கட்டைன்னு பெயரெடுத்த அவளுக்கு ஆடு மாடு அடுத்த வீடு, வெத்தல சீவ, மாரியம்மா,காளியம்மா, வயல் வாய்க்கா, கஞ்சித் தண்ணி, புள்ள புருசன், மாமியா மாமனா,மன்னாருடி மதுக்கூரு, சிங்கப்பூரு இதனைத் தவிர ஒன்றுமே தெரியாத இந்த கிழவிக தான் ரெண்டு தலைமுறைய கருவாக்கி ஒரு குடும்பத்தையே உருவாக்கி வைச்சாளுவோ. கலபுள்ள பெத்து காலம் பூரா உழைச்சு, காலுல ஆணி விழுந்து, கூனிப்போய் கிடந்தாலும் கொழுப்பு கொறையாது அவளுக்கு.

கம்ப ஊணிக்கிட்டு தென்னை மட்டை வெட்டி, சீவு கிழிச்சு வெலக்கமாறு கட்டி, வேப்பங்கொட்டை பொறுக்கி,

புளியங்கொட்டை சேத்து, புருசனுக்கு தெரியாம உளுந்து எள்ளு பதுக்கி, வித்து காசாக்கிய தற்சார்பு பொருளாதார வாதிகள் இந்த கைநாட்டு கிழவிகள்.

உடம்புல எங்க வலிச்சாலும் தலையில் கோடாலித்தைலம் தடவும் முன்னெச்செரிக்கைவாதிகள். சிமிழி எண்ணெய் (மண்ணெண்ணெய்) தேய்த்தே தன் வலி போக்கிய வைத்திச்சிகள். கண்ணே தெரியாத நவீன கண்காணிப்பு கேமிரா அந்தக் கிழவி.

கண்ட மாத்திரையையும் கண்ணாபுன்னான்னு முட்டாய் மாதிரி முழுங்கி, கம்பவுண்டரையெல்லாம் டாக்டராக்கி அய்யா ஒரு தெம்பு டானிக்க குடுங்கய்யா.?? என கொடுமைப்படுத்தும் குழந்தை அவள். கண்ணே தெரியாத கண்காணிப்பு கேமிராவும் ஒரு சத்தம் குடுத்தா ஊருக்கே கேட்கும் ரேடியாவும் அவளே. டீதூள் பேப்பர் தான் அவளோட வெத்தலை மட்ட. வெத்தலையையும் போயிலையையும் போட்டு சுண்ணாம்ப வைச்சு நல்லா கசக்கு கசக்குன்னு கசக்கி வெத்தல மெல்லும்போது வாயோரம் எச்சி வழியும். எதுக்கு போட்டுருக்கம்னே தெரியாம, மேசட்டையும் போடாம ஏனோ தானோன்னு வயித்துல கிடக்குற அந்த சேலை முந்தானைய எடுத்து வாயை தொடச்சிக்கிட்டே பேசும் அந்த அறைகுறையே எங்கள் மண்ணின் அழகியல்.

நித்தம் மருமவளோடு மல்லுக்கட்டி கொண்டு, என் வீடு என் வாசன்னு வைராக்கியமாய் இருந்துகிட்டு, வாயில வந்ததையெல்லாம் பேசிகிட்டு வாழ்ந்துட்டு போன அழகான ராட்சசிக் கிழவிகளும் இங்குண்டு.. அவளுக்கும் (மருமகள்) என் நிலைமை வராமலா போய்டும் நீங்க பார்க்கதானே போறிய.!!! என புலம்பிக்கொண்டே.

எமன் என்னிக்கு எனக்கு ஏட்டெடுத்து பாக்குறானோ அன்னிக்கு போவோம் என அன்னாடம் காச்சியாய் நடவு நாத்துக்கு ஓடி உழைத்து, பிழைத்து ஓரமாய் ஓர் கீத்து கொட்டாயில வாழும் ஒத்தை கிழவிகளும் இங்குண்டு.

கச்சய வய மண்ண கரைச்சு ஊத்துனதும் அவோ உசுரு பெய்த்தாம் பாரேன் என சொல்லும்போதே "வயல்லயே கிடையா கிடந்தவொண்ணே... அவோ வயன்னா உசுருப்பா.ஆடு மாட்டை அந்த பக்கம் ஓட்டமுடியுமா மம்பட்டிய தூக்கிட்டு அடிக்கல்ல வருவவோ ஏ அப்பா.. எப்படியாப்பட்ட ஆளு'' என அந்த கிழவனின் சாவுக்கிடையில் சொல்லும் செய்தி அது. சைக்கிள் ஒட்டாத தெரியாத, சட்டை உடம்பில் ஒட்டாத சந்ததியினர் அவர்கள். உழுவத் தெரியாதவன் அந்த நிலத்தில் கால் வைச்சா அந்த நிலைமே உருப்படாது தரித்திரியம் புடிச்சப் பய என உழவால் ஓதி பூமிய சாமியா கும்புட்டவங்க.

சக மனிதனின் பெயரே தெரியாமல் உறவையே பெயராக்கி பெருமையாய் மச்சினன் மெவன், உடப்பொறந்தா மெவன், அம்மான் மெவன் என கூப்பிட்டு உறவு முறவுகளை உயர்த்திய உன்னத மனிதர்கள் சும்மா இருப்பதே அவருக்கு பிடிக்காது. சுள்ளாப்பா இருக்கணும் அப்பதான் மேலுக்கு பலம் என சொல்லிக்கிட்டே ஊறுகாய் மொளவாயை கடிச்சிக்கிட்டே ஒரு சட்டி பழையதை ஒரே ஆளாய் குடிக்கும் அந்த பொக்கை வாய் கிழம். பூட்டக்கட்ட தோசையோட பூண்டு மொளவா போட்டு அரைச்ச ரோசாப்பூ தொவையன்னா ஒரு டெசன் தோசை திங்கும் கிழம், உடும்பு கீரின்னு ஒன்னையும் விடாது. காயை வைத்த தேங்காயையெல்லாம் கத்தியை வைச்சு செத்த நாழில கீரும் கால்நடை போன கையாலாத தாத்தாக்கள் எங்களுடையவர்கள். நடுக்குற கைய வைச்சிகிட்டு நச்சு நச்சுன்னு புளியம்பழம் உடைத்தெடுக்கும் கிழப்புலிகள் அவர்கள்.

முழங்கொட்டாச்சி ராவைக்கல்லாம் கடுக்குது இருந்தாலும் நான் ஏன் வேலைக்கு போரேன் தெரியுமா.?? அந்த வொக்காளவோலி மொவன் எனக்கு சாவுமொத போடப்பிடாது என பெத்த மகனிடம் கூட சுயமரியாதையை விட்டுத் தராமல் சுருட்டின் புகையிலேயே சோகத்தையெல்லாம் ஊதித்தள்ளுபவர்கள் தாத்தாக்கள்.

காது, கண்ணு போயும், ஆனாவுக்கு அடியெழுத்து தெரியாட்டியும், ஐம்பது வருச அரசியலை அப்படியே கரைத்துக் குடித்த அழுக்கு வேட்டிகள் அவர்கள். அப்பறம் ஊருக்கு நாலு கிழம் படிச்சிருக்கும், ஒன்னு ரெண்டு வாத்தியார் உத்யோகத்தும் போய்ருக்கும், அதவிட கொடுமை சிங்கப்பூரு

கிழம் இதுங்க கிட்ட மாட்டுனோம் அவ்வளவுதான் காதுலேர்ந்து ரத்தம் மட்டும் தான் வராது. கொஞ்சம் அவனை விட்டுட்டு அங்குட்டு இங்குட்டு போய் உக்காருடி. நான் ஒன்னும் நடுவுல வந்து உக்கார மாட்டேன் என வரைமுறையே இல்லாம பேசும் வம்புனிக்கிழவன்களும் உண்டு.

அப்பையெல்லாம் தஞ்சாவூர்ல போய் கொறவன், கொறத்தி செட்டு கொண்டாருவோம் அவளுவொளை யெல்லாம் பார்த்தா எட்டு கண்ணும் விட்டெரியும்டா. இப்பல்லாம் வர்ராளுவோ வத்தகாச்சியாட்டம்... என இந்த வருச திருவிழாவிலும் ஆடல் பாடல் பார்க்க காத்திருக்கும் கிழங்களும் இங்குண்டு.

ரெண்டு மூனு கிழடுவோ ஒன்னா சேந்துட்டா ஊரையே வித்துதான் பேசும். கெட்டவார்த்தை கொக்கரிக்கும். சிரிப்பு உடைக்கும்.

வேடிக்கையாத்தான் இருக்கும். வீடும் தாங்காது. நாடும் தாங்காது. அடிச்சே துரத்துனாலும் ஆம்பளை புள்ளை தான் வேணும்னு வரம் கேட்கும் புரியாத புதிர்கள் தான் அவர்கள். பேரப்பிள்ளைகளுக்கும் அவர்களுக்குமான உறவே இம்மண் கொண்ட பேரன்பின் வெளிப்பாடு.

வதைக்காம போனாலும் சரி.படுக்கைல கடந்து பாடாப்படுத்திபுட்டு போனாலும் சரி, கொட்டி முழக்கி அந்த உடம்பு ஊர்க்கோடி போகையில உள்ளார மனசு கடந்து விடாம அடிச்சிக்குது இப்படி விட்டுட்டு போராளே/போரானேன்னு. வெளில எப்படி சொல்ல முடியும். அந்த வீராப்பு புடிச்சவன்/புடிச்சவ புள்ளதானே நம்ம. காலைல விடியும் போதும், கால் நீட்டி அதுவோ கடந்த தரை கட்டாந்தரையா கடக்குறத பாக்கும் போதும்,காக்கா கத்தும்போதும், கவுளி பொறியும் போதும், கீராத தேங்காவும், சீவாத மட்டையும்,

ஒடிக்காத ஓலையும் ஓரத்தில் கிடக்கும் போதும், தனி தம்ளரையும் தட்டையும் காணாத போதும், வெளிய தெருவ போறப்ப வேப்பலை கொத்த ரெண்ட பையில உருவிப்போட்டுகிட்டு போ என ஓயாமல் ஒலித்துக்கொண்டேயிருக்கும் அந்த உருவங்கள் உயிரற்று போய் சிரிப்புற்று தொங்கும் அந்த போட்டாவை பார்க்கும் போது பொத்து கொண்டு வரும் கண்ணீருக்குத் தான் தெரியும் நாம் தொலைத்தது என்னவென்று... ●

---

கவிதை

# மழைப்பாட்டின் இசைக்குறிப்புகள்

காதில்
தேன்வார்க்கும்
குயிலிசையும்
வாசல் சீத்தா மரத்தில்
கூடுகட்டியுள்ள
சிங்கிடிசிக்கா குருவியின்
கொஞ்சலும் விடியலின்
இசைக்குறிப்புகள்..

கிளேரியா போத்தில்
கும்மாளம் அடிக்கும்
தவிட்டுக்குருவிப் பேச்சுகளும்
நுணாப் பழம்
தின்றே
கறுத்துப்போன
நார்த்தங்குருவியின்
கொஞ்சல்களும்
பகலுக்குச் சொந்தமானவை.

கேட்குந்திறன்
எல்லோருக்கும்
இருந்திருந்தாலும்
நெஞ்சால் கேட்க
ஓரிருவருக்கே
வாய்த்திருக்கும்.

மழைஇரவில்
தவளையின்
சேர்ந்திசை கேட்க
மின்விசிறியை
நிறுத்தினால்
சண்டையிடும்
தம்பிக்கும்
வெளிப்படும்
அப்பாவின் குறட்டையொலியால்
கடுப்படிக்கும் அம்மாவிற்கும்
புரிவதில்லை
இரவுப்பாடலின் இனிமை.

– தமிழ் நறுமுகை, வேலங்குடி

போகிறபோக்கில்

# வெயில்

## சின்னப்பயல்

வெயில் குறித்து அலுத்துக் கொள்ளும்போதெல்லாம் ஒரு கண்டிப்பு கலந்த கறார்த்தன்மையோடு நண்பர் தமிழ்ச்செல்வன் பேசுவார்.

"வெயிலுக்கும் மழைக்கும் பழக்கப்பட்ட உடம்புங்க இது. வெயில் காலத்தில் வெயிலும் மழைக்காலத்தில் மழையும் இயல்புதான். அந்த இயல்பை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏனென்றால் வெயில் குடித்து வளர்ந்தவங்க நாம.." என்பார். நெசந்தானே..!

வெயில் குடித்து வளர்ந்த நாட்கள் அலாதியானது. வெயிலோடு போட்ட ஆட்டங்கள் இன்றும் தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றது. ஆடியவர்கள்தான் மாறிக் கொண்டிருக்கிறோம். நா முத்துக்குமார் அப்படியே நம்முடைய பால்யத்தை பந்தி வைக்கிறார்

**"வெயிலோடு விளையாடி.. வெயிலோடு உறவாடி.. வெயிலோடு மல்லுக்கட்டி**

**ஆட்டம் போட்டோமே பசி வந்தா கம்பந்தட்ட புழுதி தான் எங்க சட்ட .."**

புழுதிச்சட்டை உடுத்திய நாட்கள் எண்ணி ஏங்குகிறது மனசு. வெயிலை பதார்த்தம் என்கிறான் பாரதி.

ஞாயிறு குறித்து எழுதும் போதெல்லாம் பாரதியின் அறிவுச்சுடர் ஒளிர்கின்றது.

"ஞாயிறு! நின்னிடத்து ஒளி எங்ஙனம் நிற்கின்றது? நீ அதனை உமிழ்கின்றாயா? அது நின்னைத் தின்னுகிறதா? அன்றி ஒளி தவிர நீ வேறொன்றும் இல்லையா..?

விளக்குத்திரி காற்றாகி சுடர்கின்றது. காற்றுக்கும் சுடருக்கும் எவ்வகை உறவு? காற்றின் வடிவே திரியென்ற றிவோம்

**ஒளியின் வடிவே காற்று போலும்.**

**ஒளியே நீ இனிமை!**

வெயிலைத் துண்டு துண்டாய் கடித்து ரசித்து ருசிக்க வேண்டும் என்கிறார் தஞ்சாவூர்க் கவிராயர். வெயிலை அனுபவிக்க வெயிலில் கிடக்க வேண்டும் என்பதல்ல. நிழலில் அமர்ந்தும் வெயிலைப் பருகலாம். வெயிலில் மேய்ந்த மாடுகள் நிழலில் படுத்து வெயிலை அசைபோடும். நிழலின் அருமையை வெயிலே உணர்த்தி நிற்கின்றது.

வெயிலில் களைத்த இணைமானுக்கு தன் நீரையும் சேர்த்தளித்த ஆண்மானைக் கலித்தொகையில் காணும் போது வெயிலானது ஆண் மானின் மனசுக்குள் கருணையையும் சுரக்க வைக்கின்றது.

தலைவனோடு உடன்போக்கு நிகழ்த்திய தலைவியைத் தேடிக் கண்டுபிடித்து இருவரையும் ஆணவக் கொலை செய்யும் காட்சிகள் அரங்கேறுவதெல்லாம் இப்போதுதான். ஆனால் சங்க காலப் பெற்றோர்கள் தலைவி கொடுஞ்சுரத்தில் பாலை வழியாக அல்லவா செல்கின்றாள் .அவள் பாதமல்லவா நோகும் என்று தலைவி செல்லும் பாதையையும் அவளுடைய பாதத்தையும் எண்ணி கலங்குகின்றனர் சங்ககாலப் பெற்றோர்கள்.

இராமனின் வெளிச்சத்தில் வெயிலின் ஒளி குறைந்ததை,

"வெய்யோன் ஒளி தன் மேனியின் விரி சோதியின் மறைய .." என்கிறான் கம்பன்.

வெயிலும் நிழலும் பகலும் இரவும் இன்பமும் துன்பமும் என்கின்ற முரண்கள் நிறைந்து இருக்கும் வாழ்வு தானே அழகு! எல்லாம் இயல்பாக இருந்தால் வாழ்வில் எதுவும் இல்லாததாகத்தானே போய்விடும்.

வெயில் காலத்தில் நீர்பந்தலமைப் பவர்கள் புண்ணியத்தை பெற்று விடுகிறார்கள். இன்னும் கொஞ்சம் கூடுதலாக குருவிகளுக்கும் பறவைகளுக்கும் தாகம் தணிப்பவர்கள் கூடுதல் புண்ணியத்தை தேடிக் கொள்கிறார்கள்.

வெயிலை அனுபவிக்க வெயிலில் கிடக்க வேண்டும் என்பதெல்லாம் இல்லை. நிழலில் கிடந்தும் வெயிலைப் பருகலாம். கொடுங்கோடையில் குளவிக்கு கூடு கட்ட ஈரமண் தருவது எது.?. அதற்கு அந்த ஈரமண் எங்கு கிடைக்கின்றது? நம்மில் ஒவ்வொருவருக்கும் ஈரமண்எங்கேயோ இருந்து கொண்டு தான் இருக்கின்றது. நாம் தான் அதனைத் தேடிக் கண்டடைய வேண்டும். வெயிலில் காய்ந்த மனிதன் வேண்டுமானால் வாடலாம்.ஆனாலும் வெயில் குடித்த மாந்தளிரும் வேப்பந்தளிரும் கூடுதலாக மின்னுகிறது.வாழ்வை அந்தத் தளிர்களிடம் கற்றுக்கொள்வோம் நாம்.

பேசுவோம்

வெற்றி! வெற்றி! வெற்றி!

# தூய செபஸ்தியார் மேல்நிலைப் பள்ளி

காமேஸ்வரம் – கிழக்கு, நாகை மாவட்டம், செல் : 6380763723

## 2023 - 24 தொடர்ந்து 7 ஆவது முறையாக +2 பொதுத்தேர்வில்

# 100% தேர்ச்சி







S.வர்ஷா 548/600 Maths-Biology

S.நிஷா 529/600 Maths-Biology

P.நிவேதிதா 527/600 Maths-Biology




பாடவாரியாக அதிக மதிப்பெண்கள்

| | | |
|---|---|---|
| தமிழ் | - | 98 |
| ஆங்கிலம் | - | 97 |
| கணிதம் | - | 97 |
| இயற்பியல் | - | 95 |
| வேதியியல் | - | 94 |
| உயிரியல் | - | 98 |
| தாவரவியல் | - | 98 |
| விலங்கியல் | - | 99 |
| கணினி அறிவியல் | - | 97 |

தேர்வு எழுதிய 94 பேரில் 500க்கு மேல் 12 பேர் , 400க்கு மேல் 51 பேர்

## 2023 - 24 பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில்

## தேர்வு எழுதிய 105 பேரில் 103 பேர் தேர்ச்சி

# 98% தேர்ச்சி







M.துஷிலா 490/500

E.ஶ்ரீநந்தினி 489/500

M.ஷாலினி 484/500

பாட வாரியாக அதிக மதிப்பெண்கள்

| | | |
|---|---|---|
| தமிழ் | - | 99 |
| ஆங்கிலம் | - | 96 |
| கணிதம் | - | 100 |
| அறிவியல் | - | 99 |
| சமூக அறிவியல் | - | 99 |

தேர்வு எழுதிய 105 பேரில் 400க்கு மேல் 51 பேர் , 300க்கு மேல் 39 பேர்

வெற்றிக்கு உழைக்கும் ஆசிரியர்களுக்கும், பணியாளர்களுக்கும், ஒத்துழைப்பு நல்கிய பெற்றோருக்கும், சாதனை படைத்த மாணாக்கர்களுக்கும் மனமார்ந்த பாராட்டுக்களும்... வாழ்த்துக்களும்...!

**தூய செபஸ்தியார் மேல்நிலைப் பள்ளி ,**
**தூய செபஸ்தியார் கல்வி அறக்கட்டளை, காமேஸ்வரம்.**



மண்சார் இலக்கிய இதழ் கண்ணாமூச்சியை மனசார வாழ்த்துகிறோம்...
சிங்கப்பூரிலிருந்து முனைவர் மன்னை இராஜ கோபாலன் குடும்பத்தார்.